காதல் சிறப்பிதழ்!

# கல்கி

KALKI 13.2.2005
ரூ.6.00






# Freshly picked from the Garden of Eden

**Eterna diamond collection**

They say spring showers bring out the best in nature. We say our diamond cloudburst will have your senses in full bloom. Prince Jewellery unveils a collection that simply sings earth's praises in diamonds and tourmalines.

rubecon

PRINCE
JEWELLERY

Only At Chennai: CATHEDRAL ROAD Tel: 2811 7720 | PANAGAL PARK Tel: 2434 6783 | SPENCER PLAZA Tel: 2849 5817

- Showrooms open on Sundays
- Valet parking available
- www.princejewellery.com

THE INTERNATIONAL GEMMOLOGICAL INSTITUTE ANTWERP



## கலக்குது காதல் ஸ்பெஷல் கல்கி...


| | |
|---|---|
| காதல் தேசம் | 2 |
| என்னை உலுக்கிய காதல் | 4 |
| லவ் புட்டிங் | 16 |
| ஒரு காதல் சந்திப்பு | 17 |
| காதல் சதுரங்கம் | 33 |
| கல்யாணியின் காதல் | 34 |
| காதல் கதம் கதம் | 40 |
| காதல் ஹீரோயின்ஸ் | 48 |
| சிம்புவின் காதல் கதை | 52 |
| வெறும் காதல் | 55 |
| காதல் விமர்சனம் | 65 |
| காதல் ட்ரைலர் | 72 |
| காதல் காலனி | 74 |
| காதல் கிறுக்கன் | 80 |
| காதல் பலன்கள் | 81 |
| காதல் பரிசு | 84 |
| காதலிசை | 88 |



கல்கி

13.2.2005

**பிரம்மச்சாரி அரசியல்வாதி இல.கணேசனை 'காதல்' பற்றி நாலு வார்த்தை பேசச் சொன்னோம்... மனிதர் நாற்பது பக்க புத்தகம் போடும் அளவுக்குக் கொட்டித் தீர்த்துவிட்டார்.**



# "என் காதல் தேசம்!"

"'காதல்' என்றதும் எனக்கு பளிச் சென்று நினைவுக்கு வருவது ஒரு பத்திரிகைதான். பல வருடங்களுக்கு முன் அதே பெயரில் வெளிவந்த விதிவிலக்கான இதழ். அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையில் ஆபாசம் எதுவும் இருக்காது. இருந்தும் அதைப் படித்தால் நம்மை யாராவது தவறாக நினைத்துக் கொள்வார்களோ என்று, தவறாக நினைக்கப்பட்ட காலம் அது. இப்போது காலம் மாறிவிட்டது. ஒரே ஜாதி, ஒரே உட்பிரிவு என்றிருந்தும், காதல் ஜோடிகளை ஏற்றுக் கொள்ளாமல் கடுமை காட்டி நின்ற சமுதாயமும், பெற்றோரும் இன்றில்லை. இப்போது 'காதல்' என்ற வார்த்தை சகஜமாகிவிட்டதுபோல 'காதலும்' சகஜமாகிவிட்டது. ஆனால் காதலுக்கு முன்பாக 'எங்கள் காதல் தூய்மையான, உண்மையான, புனிதமான காதல்' என்று காதலர்கள் அடைமொழி சேர்க்க வேண்டிய நிலை.

நமது மீடியாக்கள் தரும் தவறான சித்திரிப்பின் காரணமாக, இன்றைய இளைஞர்களும் இளைஞிகளும், உணர்ச்சி வயப்பட்ட நிலையில் ஒருவரை ஒருவர் சந்தித்து 'காதல்' என்று நினைத்துக் கொண்டு, அவர்களை அவர்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு அழுது புலம்பி நிற்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது.

காதலர்கள் சந்திக்கும்போது தங்களிடம் இருக்கும் உயர்ந்த விஷயங்களையே வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் திருமணத்துக்குப் பிறகு புகைமூட்டம் விலகுகிறது. உண்மை இருவரையும் சுடுகிறது. யதார்த்தம் வாழ்க்கையைக் குலைத்து விடுகிறது. அந்த வகையில் திருமணத்துக்கு முன்பு காதல், பின்பு மோதல். பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணத்தில் ஈடுபாடு கொண்டு, வாழ்நாள் முழுவதும் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதே காதலுக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும் என்பது என் கருத்து.

திருமணம் என்பது ஆண் - பெண் என்ற இருவர் மட்டும் சம்பந்தப்பட்டது என்றாலும், அவர்களது வாழ்க்கை சமுதாயத்தையும், உற்றார் உறவினர்களையும் சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. எனவே ஒரே ஜாதியைச் சேர்ந்த, ஆனால் வேறு உட்பிரிவுகளில் உள்ளவர்கள்

காதல் திருமணம் செய்துகொள்ளும்போது, நடைமுறையில் சில பழக்க வழக்கங்களைக் கையாள்வதில், பெண்ணுக்குப் பல பிரச்னைகள். சகிப்புத் தன்மையோடு பெண் அதை ஏற்க முன் வந்தாலும், கணவனைச் சார்ந்திருக்கும் சமுதாயம் அவளை அந்நியமாகப் பார்க்கிறது. இதன் காரணமாக, ஒரே குடும்பத்தில் பெண் தீண்டத்தகாதவர் ஆகிவிடுகிறாள். அதன் காரணமாக ஏற்படும் மனவேதனை விவரிக்க இயலாதது. ஒரே ஜாதி - உட்பிரிவில் வேறுபாடு என்பதிலேயே பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கும்போது, வேறு வேறு மதங்களைச் சேர்ந்த காதலால் கட்டுண்டு வாழ்க்கையில் இணையும் ஜோடிகள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்னைகள் ஏராளம். ஆசை, அபிலாஷை ஆகியவைகளை அழித்துவிட்டு, மிக, மிக சகிப்புத்தன்மையோடு வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார் பெண். எனவே காதலிக்கும் முன்பு யோசித்தால், பின்பு கண்ணீரைத் தவிர்க்கலாம்." என்று காதலர்களுக்கு எச்சரிக்கை மணி அடித்த இல.கணேசனிடம், "இலக்கியத்தில் உங்களுக்குப் பிடித்த காதல் ஜோடி யார்?" என்றோம்.

"சாகுந்தலத்தில், துஷ்யந்தன்-சகுந்தலை காதலை மகாகவி காளிதாசன் நாசூக்காகவும், நளினமாகவும் வர்ணிப்பார். பாரதியாரின் கண்ணம்மா பாடல்களில் பின்னணியாக 'தேசம், தேச நலன்' மறைந்திருப்பதைப் பார்க்க முடியும்" என்றார்.

**- இல.கணேசன்**

"உங்களைப் போன்ற சமுதாய அர்ப்பணிப்புள்ள லட்சியவாதிகளைக் காதலிக்க பல பெண்கள் முன் வந்திருப்பார்களே..." என்று ஒரு டன் ஐஸை இறக்கி, காவிக் கொடிக்காரருக்குத் தூண்டில் போட்டோம்.

"ஒரு ஸ்வயம் சேவக்காக தன்னலமற்ற பொது வாழ்க்கையில் முழு நேரமாக ஈடுபட்டிருந்த என்னைப் போன்ற லட்சக்கணக்கானவர்களைப் பார்த்துப் பாராட்டுவார்கள், உதவி செய்வார்கள். ஆனால், எங்கள் வாழ்க்கை முறையைத் தடம் மாற்ற யாரும் முயல மாட்டார்கள். 'காதல் தேசம்' என்ற படம் வந்தது. ஆனால் என்னைப் பொறுத்தவரை தேசமே என் காதல். வேறு எந்த சிந்தனைகளுக்கும் இடம் இல்லை."

- ஸ்ரீநி


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா. பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com


கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# "என்னை உலுக்கிய காதல்!"



நடு இரவில் பேட்டி வேண்டும் எனக் கேட்டாலும், பிகு பண்ணாமல் ஒப்புக்கொள்கிற வெல்வெட் மனசு ஸ்ரீகாந்துக்கு. இதுவரை வாடகை வீட்டில் வசித்து வந்தவர், இப்போது வடபழனியில் புத்தம் புது கனவு இல்லத்துக்கு இடம் பெயர்ந்திருக்கிறார். அங்கே மொட்டை மாடி முழுக்க செழித்து வளர்ந்திருக்கிறது அருகம்புல் மெத்தை. புல் மெத்தையில் ஹாயாக அமர்ந்தபடி வரவேற்ற ஸ்ரீகாந்த், இன்னும் புதுமுகம் போல ஆச்சர்யமூட்டினார். 'ஜூட்'டில் மீசைமுறுக்கி, முஷ்டியை மடக்கி, அதில் தாயத்தை கட்டி "டேய்..." என்று கத்திய ஸ்ரீகாந்தா இவர்!



"கடந்த வருடம் முழுக்க எனக்கு ஆக்ஷன் வருடம். இந்த வருடம் மறுபடியும் காதல் வருடம். ஜிம்முக்குப் போறதை அடியோடு நிறுத்தி விட்டேன். அதே 'ரோஜாக் கூட்டம்' ஸ்ரீகாந்த் மாதிரி இருக்கேனா?" கேட்டு விட்டு 'ஜில்' பிராண்ட் சிரிப்பைப் பொழிந்த ஸ்ரீயிடம், "ஆக்ஷன் படங்களோட ரியாக்ஷன் எதிர்பார்த்த மாதிரி இல்லாததால், காதலே சரணம் என வந்துவிட்டீர்களா?" என்று வம்புக்கு இழுத்தோம்.



"மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தா முத்திரை குத்திடுவாங்கன்னு ஆக்ஷன் பக்கம் போனேன். பல ரிஸ்க்கான காட்சிகளில் டூப் போடாம நடிச்சு, என்னை ப்ரூவ் பண்ணினேன். ஜூட், வர்ண ஜாலம், போஸ் பற்றி மாறுபட்ட அபிப்ராயங்கள் இருந்தாலும், கிராமப் புறங்களில் அந்தப் படங்கள் வசூலைக் குவிச்சதை யாரும் மறுக்கலை. இப்போ அடுத்த டைமன்ஷன். காலமும் நேரமும் சரியா வரும்போது மறுபடியும் ஆக்ஷன்!" என்று தெளிவாக இருக்கும் ஸ்ரீகாந்த், இப்போது பிஸியாக நடித்துக் கொண்டிருப்பது, கே.வி.ஆனந்தின் 'கனாக் கண்டேன்'. இன்னொரு பக்கம் பாசில் இயக்கத்தில் 'ஒரு நாள் ஒரு கனவு'. இவற்றோடு இளையராஜாவின் அண்ணன் மகன் பார்த்தி பாஸ்கர் இயக்கத்தில் 'பம்பரக் கண்ணாலே'.



"தலைவா! தலைப்பிலேயே நகைச்சுவை ஒட்டிக் கொண்டிருக்கிறதே! எதற்கு ரிஸ்க்?" என்றால், "நான் அடிப்

படையில் ரொம்ப ஹியூமரான ஆள் தெரியுமா? எனக்கு காமெடியும் பண்ணத் தெரியும்ங்கிறதை இந்தப் படத்தில் நிரூபிப்பேன். தமிழ் சினிமாவுக்குச் சொல்லிக்கிற மாதிரி ரொமான்டிக் காமெடி இல்லைங்கிற குறையை இந்தப் படம் சரி பண்ணிடும்'' என்றவரின் செல்போன் ஒலித்தது. போனில் 'கனாக் கண்டேன்' இயக்குனர் கே.வி. ஆனந்த். மறுநாள் எடுக்கப்போகும் காட்சிகள், அவற்றுக்கு ஸ்ரீகாந்திடமிருந்து எதிர் பார்ப்பது என மைக்ரோ லெக்சர் தந்த இயக்குனரிடம் "நாளை அழகான ரவுடி வரமாட்டாரா?'' என்று ஏக்கமாகக் கேட்டார் ஸ்ரீ. அதுதான் சாக்கென்று ''அந்த ரவுடியின் பெயர் கோபிகா தானே?'' என்று நாம் கேட்க, "அதெப்படி இத்தன வல்லியமாய் பரைஞ்சு?'' என்று குஷியானார்.

''தமிழ் பேசத் தெரிந்த கதாநாயகி என்றாலே எனக்கு ரொம்பப் பிடிக்கும். சினேகா ரொம்ப அழகா, திருத்தமா தமிழ் பேசுவாங்க. கொஞ்சம் அலட்சியமா இருந்தாலும், நடிப்புல நம்மை அடிச்சுடுற ஹார்லிக்ஸ் புன்னகை அவங்க. இப்போ



# - உள்ளம் திறக்கிறார் ஸ்ரீகாந்த்



சினேகா மாதிரியே கோபிகா. கனாக் கண்டேனில் நானும் கோபிகாவும் நண்பர்கள். நட்புங்கற கோட்டை தாண்டினோமா இல்லையாங்கிற இனிமையான கன்ஃப்யூஷன்தான் படம். கோபிகாவைத் தவிர அந்த கேரக்டருக்கு அத்தனை இயல்பா ஒரு பெண் கிடைப்பாங்களாங்கிறது சந்தேகம். படப்பிடிப்பிலும் சரி, பிரேக்கிலும் சரி கோபிகா வந்துட்டாலே சேஷ்டைகள் ஆரம்பிச்சுடும். நான் ஒரு டேக் அதிகம் வாங்கிட்டா "ஐயோடா! முகத்துலே பால் வடியுது ஸ்ரீ''ன்னு கிண்டல் தான் பறக்கும். 'ஐயோடா'வை அவரைவிட யாரும் சூப்பராகச் சொல்ல முடியாது. கோபிகாவுடன் பழகும்போது ஐந்து வருடங்களுக்கு முன்பு சந்தித்த ஒரு நினைவு வந்துவிடுகிறது'' என்று சிலாகித்த ஸ்ரீயிடம், "காதல் கிசுகிசுக்களால் அதிகம் பாதிக்கப்பட்டீர்கள்தானே?'' என்றோம்.

''பல பத்திரிகைகளுக்கு பரபரப்புதான் அதிகம் தேவைப்படுகிறது. கிசுகிசுக்களை இந்த வயதில் எழுதாமல், எந்த வயதில் எழுதுவார்கள் என்று என்னைப் போல் ஸ்போர்ட்டிவா எல்லோரும் எடுத்துக்கு வாங்கன்னு சொல்ல முடியாது. என்னை விடுங்க... என்னோடு இணைத்து எழுதப் படுகிற பெண்ணோட மனநிலையை நினைச்சுப் பாருங்க. கிசுகிசு என்னைப் பொறுத்தவரை தரம் தாழ்ந்த எழுத்து'' எனச் சொல்லிக்கொண்டே குரலில் வருத்த தொனியைப் படர விட்டவரிடம், ''உங்களை உலுக்கிய உண்மைக் காதல்



# காதல் ஒட்ரீக் இருப்பு...

**முதல் காதலை கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படங்கள் ஓடும் திரையரங்குகளில் ஆங்காங்கே விசும்புகிறார்கள் பெண்கள் - கணவனுக்குத் தெரியாமல்.**

ஏதேனும் உண்டா?" என்றோம்.

"என்னை உலுக்கிய காதல் மட்டுமில்லீங்க! ப்ளஸ் டூ ஃபைனல் எக்ஸாம் எழுத முடியுமான்னு தெரியாமல், செம டென்ஷனோடு நாங்க பார்த்த காதல் அது" என்று விவரிக்க ஆரம்பித்தார்.

"ப்ளஸ் ஒண்ணுலே நாங்க பத்துப் பேர் ரொம்ப திக் ஃப்ரெண்ட்ஸ். பிரியவே மாட்டோம். அதில் ஒருத்தன் நேபாளத்துக்காரன். கொஞ்சம் குள்ளமாவும், மூக்கு சப்பையாவும் இருக்கேன்னு ரொம்ப தாழ்வுணர்ச்சியோடு இருப்பான். எல்லோருக்கும் கேர்ள் ஃப்ரெண்ட் இருந்தாங்க. ஆனா அவன் மட்டும் கேர்ள்ஸ் கூடப் பழக மாட்டான். அவனோட இந்த குவாலிட்டி பிடிச்சுப் போய், நாங்கள்லாம் ஃபேரி ஏஞ்சல்னு பேர் வெச்சுக் கூப்பிட்ட பொண்ணு, அவன்கிட்டே போய் லவ் பண்றேன்னு சொன்னா. ஆனால் இவன், "கிண்டல் பண்றியா?"ன்னு ஒதுங்கிப் போனான். "முட்டாள், என்னோட லவ் நிஜம்"னு பிளேடை எடுத்து அவன் கண்ணு முன்னாலேயே சுட்டை விரல்ல கோடு போட்டுட்டா. இதைக் கேள்விப்பட்டு ஆடிப் போயிட்டோம். அதுக்கப்புறம் ரொம்ப டீப்பான லவ்வர்ஸ் ஆயிட்டாங்க. ப்ளஸ் டூவிலே எங்க குருப்ல ஒரு புதுமுகம் வந்து சேர்ந்தான். அவன் நம்ம நேபாளி ஃப்ரெண்டை "அண்ணன்! அண்ணன்!"னு கூப்பிட்டு ரொம்ப பெட்டாகிட்டான். இவனும் தான் பிஸியா இருக்கும்போதெல்லாம் தன்னோட லவ்வரை இவனை நம்பி வெளில அனுப்புவான். ஷாப்பிங், லைப்ரரின்னு ஆரம்பிச்சு, புது முகத்தோட அந்தப் பொண்ணு பார்க், பீச் வரைக்கும் பழக்கம் வளர்த்தது எங்களுக்குத் தெரியாது.

ஒருமுறை தியேட்டர்ல அவங்க இருந்த நிலைமைய திடீர்னு பார்த்தப்போ, எல்லோரும் கொதிச்சுப் போயிட்டோம். எக்ஸாம் வேற நெருங்கிடுச்சு. நேபாளி ஃப்ரெண்டு கிட்டே விஷயத்தைச் சொன்னா, எங்கே தற்கொலை பண்ணிக்குவானோ, இல்லை ஊருக்குக் கிளம்பிடுவானோன்னு எங்களுக்கு பயம். இருபத்து நாலு மணி நேரம்தான் வெயிட் பண்ணினோம். நாளைக்கு அவனுக்கே தெரிஞ்சு, 'ஏன்டா மறைச்சீங்க'ன்னு கேட்டா என்ன பதில் சொல்றது? அவனை அழைச்சிட்டுப் போயி நேரா காட்டிட்டோம். அடுத்த பத்து நாள் அவனை நாங்க தனியா விடலை. ரொம்ப அமைதியா இருந்தான். எக்ஸாம் முடிச்சதும் "உங்களையெல்லாம் மறக்கமாட்டேன்"னு கையை பிடிச்சுக் கிட்டு அழுதுட்டு கிளம்பிட்டான். இப்போ அவன் அமெரிக்காவில இருக்கான். இன்னும் கல்யாணம் ஆகல. 'என்னோட கதையை சினிமாவா எடு'ன்னு ஈ-மெயில் அனுப்பியிருக்கான். அவனால எப்படி டேக் இட் ஈஸியா எடுத்துக்க முடிஞ்சதுன்னு தெரியல" என்று வியந்த ஸ்ரீகாந்த் நடித்து பிப்ரவரியில் வெளியாகும் 'சதுரங்கம்' படத்தில், காதலிலும் திறமையாக காய்களை நகர்த்தத் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களாம்.

சந்திப்பு : ஜெ
படங்கள் : ஸ்ரீஹரி

புதிய

# Exo

Anti-bacterial Dishwash bar

## க்ரீஸ் கட்டர் சக்தி + கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு மற்றும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பர் முற்றிலும் இலவசம்.

ரூ. 5 மதிப்புள்ள (60mm x 75mm) ஸ்க்ரப்பர் இலவசம்!

புது க்ரீஸ் கட்டர் உடன்






புதிய Exo ஆன்டி-பாக்டீரியல் டிஷ்வாஷ் பார் உங்களுக்கு இரண்டு கூடுதலான ஆரோக்கிய நன்மைகளை அளிக்கிறது.

விடாப்பிடியான கறையையும் நீக்கிட இப்போது Exo ஒப்பற்ற க்ரீஸ் கட்டர் கொண்டது. உங்கள் பாத்திரங்களை மிகத் தெளிவாக சுத்தமாக்குகிறது.

மேலும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பரை இலவசமாகப் பெறலாம்!

சலுகை 400 கிராம் எக்ஸோ டிஷ்வாஷ் பார் உடன் மட்டும்.

Situations/JLL-EXO/07/2004 Tam

# கூட்டணி

## — ஜி.கே.வாசன் பேட்டி

• குழப்பம் இல்லை!



தமிழக அரசியல் வட்டாரத்தில் தற்போது பரபரப்பாகப் பேசப்படும் நபர் ராகுல்காந்தி. சில தினங்களுக்கு முன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தவருடன், கல்பாக்கம் பகுதியிலிருந்து சென்னை விமான நிலையம் வரை பயணம் செய்தார், தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன். அப்போது ராகுல், வாசனிடம் "அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டதாகவும், அதற்கு வாசன் "வேண்டாம். தனியாகவே நிற்கலாம்'' என்று சொன்னதாகவும், ராகுல் தொடர்ந்து ''அது போன்று செய்தால், இங்கு காங்கிரஸ் காணாமல் போய்விடும்'' என்று சொன்னதாகவும், பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. "கருணாநிதி மிக எதேச்சதிகாரமாக நடந்து கொள்வதாகவும், அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர முயன்றால்கூட, தி.மு.க. மத்தியில் விலகாது" என்று ராகுல் சொன்னதாகவும் கூட பேசப்படுகிறது.

இது பற்றி காங்கிரஸ் வட்டாரத்தில் விசாரித்தபோது, "தி.மு.க. எதேச்சதிகாரமாக நடந்துகொள்வது நிஜம்தான். காங்கிரஸ்காரர்களை தி.மு.க. அமைச்சர்கள் சிறிதும் மதிப்பதில்லை. மத்திய அரசு நடத்தும் விழாக்களில், எங்களுக்கு உரிய இடம் கொடுப்பதில்லை. ரொம்பவும் சாதாரணமான டெலிபோன் ஆலோசனை கமிட்டி உறுப்பினர் பொறுப்புகூட எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பல முணுமுணுப்புகள் இருந்தாலும், அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு இங்கு யாரும் முயற்சிக்கவில்லை என்பதே உண்மை" என்றார் பெயர் சொல்ல விரும்பாத காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஒருவர்.

"ஜெயலலிதாவுக்கு காங்கிரஸுடன் கூட்டணி சேருவதற்கான அவசரமும் அவசியமும் இருக்கிறது. எனவே எங்களிடம் இருக்கும் முணுமுணுப்புகளைச் சாதகமாக்கிக் கொண்டு, போலீஸ் மூலம் இதுபோன்ற வதந்திகளைக் கிளப்பிவிட்டு, பிளவு உண்டாக்க நினைக்கிறார்கள். அது நடக்காது" என்றும் சொன்னார் துணைத் தலைவர் ஒருவர். காங்கிரஸ்காரர்கள் குறிப்பாகக் குற்றம் சாட்டுவது, காவல்துறை தலைவராக புதிதாகப்

பொறுப்பேற்றுள்ள அலெக்ஸாண்டர் பேரில்தான். தனது நுண்ணறிவை அவர் அ.தி.மு.க.வுக்கு எதிரான கூட்டணியை உடைக்கும் வேலைகளுக்குப் பயன்படுத்தத் துவங்கி விட்டார் என்று சொல்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். டி.ஜி.பி.க்கு கொடுக்கப்பட்டிருக்கும் அஜெண்டாவில் இந்த வேலையும் உண்டென்பது முன்பே வந்த கிசுகிசு.

"இதுபோன்ற செய்திகளை போலீஸ் கிளப்பிவிடும். தவிர காங்கிரஸ்காரர்களே கூட கிளப்பிவிடலாம். காரணம், நாங்கள் பயந்துகொண்டு சட்டமன்றத் தேர்தலில் அதிக ஸீட்டுகளைக் கொடுப்போம் என்ற எதிர்பார்ப்புதான். எங்கள் தலைவருக்கும் சோனியாவுக்கும் மிக நல்ல உறவு இருக்கிறது. எனவே இதுபோன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை" என்றார் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

தமிழக உளவுப் பிரிவு போலீஸ் அதிகாரிகள் சிலர், தில்லியில் நிரந்தரமாக முகாம் போட்டு, முதல்வர் ஜெ.வுக்குச் சமீப காலங்களில் ஆதரவு பெருகி வருவதாகச் செய்திகளைப் பரப்பிவருவதிலும் ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சில காங்கிரஸ் தலைவர்களை அதிமுகவுடன் கூட்டணிக்கு முயற்சி செய்யும்படியாக

பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, மக்களைச் சந்தித்தார் ராகுல். திரும்ப விமான நிலையத்துக்கு வரும்போது எங்களுடன் பாண்டிச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் நாராயணசாமியும் இருந்தார். அரசியல்வாதிகள் சேர்ந்தால் அரசியலைப் பற்றித்தானே பேசுவோம். எனவே எங்கள் பேச்சு முழுக்க அரசியல்தான். ஆனால் ராகுல் தெரிந்துகொள்ள விரும்பியது, தமிழக, பாண்டிச்சேரி மாநில அரசியல் நிலை மற்றும் அரசுகளின் செயல்பாடு ஆகியவை பற்றித்தான். இன்றைக்குள்ள நிலையை அப்படியே சொன்னோம். காங்கிரஸை எப்படிப் பலப்படுத்துவது என்று கேட்டார். அதையும் சொன்னோம். அவர் எங்களுக்கு உ.பி. அரசியல் நிலையைப் பற்றிச் சொன்னார். எங்களது உரையாடலின்போது எந்தச் சந்தர்ப்பத்திலும், அவரோ அல்லது நாங்களோ, இப்போதிருக்கும் கூட்டணிக் கட்சிகளை உதறிவிட்டு, வேறு ஒரு கட்சியுடன் கூட்டணி வைப்பது பற்றி எதுவும் பேசவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. எங்கள் கூட்டணிக் கட்சிகள் மிக உறுதியாகவும் தெளிவாகவும் சோனியா மற்றும் மன்மோகன்சிங் அவர்களுக்கு, தங்களது முழு ஆதரவைத் தெரிவித்து வருகிறார்கள்.

# மாறுமா?

வும் உசுப்பிவிட்டுக் கொண்டிருக்கிறார்களாம். "இது போன்ற செய்திகள் தொடர்ந்து வந்தால், இரு தரப்பினருக்கும் பரஸ்பரம் நம்பிக்கையின்மை ஏற்படும். அதன் விளைவாக மோதல் ஏற்படும். எனவே காங்கிரஸ் - தி.மு.க. ஆகிய இரு கட்சிப் பிரமுகர்களும் மிகப் பொறுமையுடன் நாவடக்கி இருப்பது நல்லது" என்று சொல்கிறார் மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர். சரி, உண்மையிலேயே ராகுவிடம் வாசன் பேசியதுதான் என்ன? வாசனிடமே கேட்டோம்.

"புதுப்பட்டினம் ஏரியாவில் இரண்டு கி.மீ. தூரத்துக்கு பாதிக்கப்பட்ட






• ஆர்வ விசாரிப்பு!

• அரசியல் அஜெண்டா..?

அப்படியிருக்க, தில்லிக் கூட்டணிதான் இங்கும் தொடர்கிறது. எந்தக் குழப்பமும் இல்லாமல் இனியும் அது தொடரும்" என்று உறுதியாகச் சொன்னார்.

- ப்ரியன்



# அமைதியாக ஒரு நீர்வீழ்ச்சி!

**ந**ம்ப முடியவில்லை! ஐம்பது வருடங்களாக பிரமிக்கத்தக்க வகையில் இயங்கி வரும் அசோகமித்திரனுக்கு, இப்பொழுதுதான் முதன் முறையாக ஒரு பாராட்டு விழா நடைபெற இருக்கிறதாம்.

இரண்டு அட்டைகளுக்கிடையே அடங்கி விடாமல், இன்னமும் சவால் விட்டுக்கொண்டிருக்கின்றன இவரது கட்டுரைகள். இத்தனைக்கும் சமீபத்தில்தான் குண்டு குண்டான இரண்டு புத்தகங்களில் 2000 பக்கங்களை ஒதுக்கி, இவரது கட்டுரைகளைத் தொகுத்திருக்கிறது கிழக்கு பதிப்பகம். இவருடைய ஒட்டுமொத்த படைப்புகளையும் ஒருசேர சேகரிக்க முயல்வது, பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சியை ஒரு சில தம்ளர்களில் பிடித்துவிட முயல்வதற்கு ஒப்பானதொரு செயல்.

"நாவல், சிறுகதை, கட்டுரை, இலக்கிய மதிப்பீடுகள், திரைப்பட விமர்சனம் என்று ஆச்சரியப்படத்தக்க வகையில் இயங்கி, சாதனை படைத்திருப்பவர் அசோகமித்திரன். இதுவரை இவர் தொடாத விஷயங்களே இல்லை. மூத்த எழுத்தாளரான அசோகமித்திரனுக்கு இந்த விழா எடுப்பதில் கிழக்கு பதிப்பகம் பெருமையடைகிறது" என்கிறார் பத்ரி சேஷாத்ரி.

கிழக்கு பதிப்பகத்தோடு இணைந்து இந்த இலக்கியத் திருவிழாவை முன்னின்று நடத்துபவர் பிரபஞ்சன். உற்சாகத்துடன் பேசினார். "நமது முன்னோடிகளை கௌரவிப்பது மிக முக்கியம். அந்த வகையில் அசோகமித்திரனின் பங்கு மகத்தானது. இவ்வளவு பெரிய மனிதருக்கு இன்னமும் பாராட்டு விழா எதுவும் நடைபெறவில்லை என்பது ஆச்சரியம். இந்தக் குறையைப் போக்க 'கடவு', கிழக்கு பதிப்பகம் இருவரும் இணைந்து செயல்படத் தீர்மானித்தோம். அசோகமித்திரனை கௌரவப்படுத்துவதோடு, இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்பதே இந்த விழாவின் நோக்கம்."

பிரபஞ்சனின் தலைமையில் 12.02.05 சனிக்கிழமை ஃபிலிம் சேம்பரில் மாலை 6.30க்கு இந்த விழா நடைபெறவிருக்கிறது. மொழிபெயர்ப்பில் அசோகமித்திரன் அளிக்கும் வாசிப்பு அனுபவங்கள் குறித்துப் பேசுகிறார் பால் சக்கரியா. அசோகமித்திரனின் சிறுகதைகள் குறித்து, சுந்தரராமசாமியும், கட்டுரைகள் குறித்து ஞானக்கூத்தனும், நாவல்கள் பற்றி ஆ.இரா. வேங்கடாசலபதியும் உரையாற்றுகிறார்கள். இவற்றோடு அசோகமித்திரனைப் பற்றிய குறும்படம் ஒன்றும் திரையிடப்படுகிறது.

இவ்வளவையும் சாதித்துவிட்டு அலட்டிக்கொள்ளாமல் அமைதியுடன் இருக்கிறார் அசோகமித்திரன். 'உங்களுக்குப் பாராட்டு விழாவாமே...?' என்றால், கூச்சத்துடன் புன்னகை செய்கிறார். தயங்கித் தயங்கி ஒவ்வொரு வார்த்தையாகப் பேசுகிறார். "பிரபஞ்சன்தான் இந்த விழாவை நடத்தப் போறார். வேற யார் யார் வருவாங்கன்னு எனக்குத் தெரியாது." இப்படியும் ஒரு எழுத்தாளர் இருப்பாரா? சரி, இந்த விழாவைப் பற்றி இவர் என்னதான் நினைக்கிறார்? மறுபடியும் அநியாயத்திற்குக் கூச்சம். "நான் என்னங்க நினைக்கிறது...?"

நீர்வீழ்ச்சிகூட சத்தம் போட்டுத் தன்னை அறிவித்தபடியேதான் இயங்கும். இவர் அதைக் கூட செய்யமாட்டேன் என்கிறார்.

- இன்பா




# சின்னான் செய்திகள்

**போ**ன 2004, பிப்-13, இரவு 11.59... என் செல் அடிக்குது. எடுத்தேன்... நான் ரொம்ப நாளா லுக் வுடுற என் ஃபிகர்தான் பேசுனா... "மை ஸ்வீட் ஹார்ட்... ஐ லவ் யூ..." அவ்னோதான்... அப்புறம் என்ன ஆச்சு? கடைசியில சொல்றேன்.

**ப**த்மஶ்ரீ, பத்ம விபூஷண் சமாசாரங்களை பேருக்கு முன்னாடி, பின்னாடி போடக்கூடாதுன்னு மத்திய உள்துறை அமைச்சகம் 95லேயே 'தடா' போட்டிருக்கு. மீறினா, பட்டத்தைப் பிடுங்கிடுவாங்களாம். 'என்னய்யா இது, பட்டத்தையும் கொடுத்துப்புட்டு, யூஸ் பண்ணாதேன்னும் சொல்றீங்களே'ன்னு புலம்பறத விட்டுப்புட்டு, என் ஐடியாவைப் பின்பற்றுங்க. பேருக்கு முன்னாடி போட்டுக்கோங்க. வழக்கமா அதே மாதிரி பண்ணுங்க... இனிமே போட்டாலே 'பத்ம' சமாசாரம்னு மக்கள் மனசுல பதிஞ்சிடும். எனக்குப் பட்டம் கொடுத்தா, 'பத்ம ஸ்ரீ சின்னான்'னு பேரை 'கெஸட்'ல மாத்திப்புடுவேன். (ஹா! ஹா! ஹா!)

**உ**ஜ்ஜயினி... திருமண மேடை... தாலிகட்டும் நேரம்... 'அய்யய்யோ'ன்னு மணப்பெண்ணின் அலறல்! 'என்ன ஆச்சு?'ன்னு விசாரிச்சா, மாப்பிள்ளை 'மறை' கழண்டவராம். மாப்பிள்ளையோட உறவினர்கள் 'சாரி' கேட்டுட்டு 'ஜகா' வாங்க, இன்ஸ்டன்டா ஒரு மாப்பிள்ளையைத் தேடியிருக்காங்க. கடைசியா மாட்டினவர் புரோகிதர்தான். 'மாங்கல்யம் தந்துனானே' சொல்ல வந்தவர், 'மாங்கல்யம் தந்தேன் நானே'ன்னு மாறிப் போனாரு. ஹைய்யோ... ஹைய்யோ!

**இ**ங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் அரண்மனைல, 'காவலரா' இருக்கறவங்க நிறைய பேர், வேற இடத்துக்கு பணிமாற்றம் செய்யச் சொல்லி விண்ணப்பிச்சிருக்காங்களாம். காரணம், சும்மா ஒரே இடத்துல நின்னுக்கிட்டு 'சலாம்' போடுற வேலை போரடிக்குதாம். நல்ல ரீசன்தான். நம்ம 'அம்மாவை' ஒரு மாசம், அந்த அரண்மனையில அதிகாரம் பண்ணச் சொல்லுங்க. காவலர்களுக்கு 'பெண்டு' கழண்டுடும். ஷேம்-ஷேம்! இங்கிலாந்து ராணிக்கு வேலையே வாங்கத் தெரியல.


**ஓ**.கே. என் லவ் மேட்டருக்கு வர்றேன். என் டார்லிங் லவ்வைச் சொன்ன உடனே, முழிச்சுட்டேன். கனவு கலைஞ்சிருச்சு. இந்த மாதிரி ரொமான்டிக்கா 'கனவு' காணுறது, என்னை மாதிரி மன்மதன்களோட ஹாபி. அடுத்த வாரம் நயன்தாரா என் கனவுல வர கால்ஷீட் வாங்கி வைச்சிருக்காங்க தெரியுமா!





• நயன்தாரா


குமுதம்
பக்தி
சுனாமி
ஆபத்திலிருந்து
காப்பாற்றும்
சுப்ரமண்ய
புஜங்கம்
தமிழில் ...
ராகு
கேது
பெயர்ச்சி
பலன்கள்
தனிப் புத்தகம்
மனைவியுடன்
காட்சிதரும்
அபூர்வ
தட்சணாமூர்த்தி
2 in 1
புகைப்படம்
தற்போது விற்பனையில்...




## மாண்புமிகு கட்சிப் பி.ஆர்.ஓ.க்கள்!

சென்னையில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, புதிய மேம்பாலங்கள் கட்டித்தர தேசிய நெடுஞ்சாலைத் துறை திட்டம் தீட்டுகிறது. அதற்கான அடிக்கல்லை நாட்ட தி.மு.க. தலைவர் அழைக்கப்படுகிறார். தி.மு.க. பிரமுகர்கள், மத்திய அமைச்சர்கள் பங்கேற்புடன் விழா தடபுடலாக நடைபெறுகிறது... ஆனால், தமிழக அரசு பிரதிநிதிகளுக்கு, விழா மேடையில் எந்தவொரு முக்கியத்துவமும் கிடையாது.

இவ்வாறு மாநில அ.தி.மு.க. அரசையும், அ.தி.மு.க. கட்சியையும் புறக்கணிக்கும் ஒரு விழாவில்தான் தி.மு.க. தலைவர், தமது கட்சியின் நல்லெண்ணத்துடன் கூடிய முயற்சிகள், தமிழக அரசால் அலட்சியப்படுத்தப்படுகின்றன என்று புலம்புகிறார்! 'ஸ்டாலின், ஜெயலலிதாவை நேரில் சந்தித்து சுனாமி நிவாரண நிதிக்கான தொகையைக் கொடுத்தார். ஆனால் அதன் பிறகு ஜெயலலிதா அதே பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாரா? இல்லையே! சன் டீ.வி. மூலம் திரட்டிய நிதியை நேரில் கொடுக்க விரும்புவதாகக் கடிதம் எழுதியும், அவர் தரப்பிலிருந்து பதிலே இல்லையே!' என்று அடுக்குகிறார்.

ஒரு நலப்பணி துவக்கவிழா, அரசியல் குற்றச்சாட்டுப் படலமாக உருமாறுகிறது!

இன்றைய தமிழக அரசைத் தேர்தலில் ஆதரித்து ஆட்சியில்




கல்கி



2005 பிப்ரவரி 13
தாரண மாசி 1
மலர் : 63
இதழ் : 29

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அமர்த்தியிருக்கும் அதே வாக்காளர்கள்தான், மத்தியில் இன்று ஆளும் கூட்டணி உருவாகிற வகையில், தி.மு.க. எம்.பி.க்களுக்கும் வோட்டளித்து ஜெயிக்க வைத்தார்கள்.


மக்களின் வாக்குரிமையை மதிக்கும் அரசியல்வாதிகளாக இருந்தால், பரஸ்பரம் ஆதரவு அளித்து, நற்பணிகள் நடக்கவும், நல்லாட்சி துலங்கவும் வழி செய்வார்கள்.

ஆனால், நமது அரசியல்வாதிகளுக்கு மக்கள் நலன் என்பது இரண்டாம்பட்சம்தான்! சுயநலன், கட்சி நலன் - இவைதான் முக்கியம். அதைவிட்டால், ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டு, செய்தியில் அவ்வப்போது தோன்றிக் கொண்டேயிருக்கும் செப்பிடு வித்தையில் அவர்களுடைய உழைப்பும் சக்தியும் விரயமாக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பிரதிநிதிகளாகப் பணியாற்றச் சம்பளம் வாங்கிக் கொண்டு, அவர்கள் செய்து வருவது பெரும்பாலும் கட்சி பி.ஆர்.ஓ. வேலைதான்.

மத்திய அரசைத்தான் பாருங்களேன்... சுனாமி நிவாரண நிதியை, ராஜீவ் காந்தி பெயரில் விநியோகிக்க முடிவெடுத்தது. இதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்கும், அதன் தலைவருக்கும் புகழ் தேடிக்கொள்ள நினைக்கிறது. உதவித் தொகை, பகுதி அளவு கடனாகவும், பகுதியளவு மானியமாகவும் வங்கிகள் மூலமாக, நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டது. மாநில அரசை இந்தத் திட்டம் குறித்து கலந்தாலோசிக்கவே இல்லை. மாநில அரசைச் சம்பந்தப்படுத்தவும் இல்லை.

தமிழக மீனவர்களுக்கான உதவிகளை வழங்குகிறபோது, அதை தமிழக அரசின் மூலமாகத்தான் செய்ய வேண்டுமேயொழிய, மத்திய அரசு நேரடியாக வழங்கக் கூடாது என்பது முதல்வர் ஜெயலலிதாவின் வாதம். தமது ஆட்சேபணையை மிக நீண்டதொரு அறிக்கையாக அவர் வெளியிட்டிருக்கிறார். பிரதமருக்கும் எழுதியிருக்கிறார்.

நிதி அமைச்சர் சிதம்பரம், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வரைமுறைகளை, தமிழக அரசின் மூத்த அதிகாரிகளுக்கு நேரடியாகத் தெரிவித்திருப்பதையும் கடுமையாக ஆட்சேபித்துள்ளார் தமிழக முதல்வர். 'மாநில அரசின் அதிகாரங்களை, மத்திய அரசு




உதாசீனப்படுத்திவிட்டது' என்று நொந்து கொண்டிருக்கிறார்.

வேடிக்கை என்னவெனில், யாருக்காக நிவாரணத் திட்டம் தீட்டப்பட்டதோ, அந்த மீனவ சமுதாயத்தினருக்கு இத்திட்டத்தில் ஏக அதிருப்தி. 'மானியமும் கடனும் யார் கேட்டார்கள்! எங்களுக்கு முழுத் தொகையையும் நிவாரண நிதியாகக் கொடுத்துவிடுங்கள்... உடனடியாகக் கட்டுமரங்களைச் சீர்செய்தோ, புதிய கட்டு மரங்கள் வாங்கியோ, மீண்டும் பிழைப்பைத் தொடங்குகிறோம்' என்கிறார்கள். ஒரு பைசாகூட திருப்பித்தர அவர்கள் தயாராயில்லை. சுனாமி பாதிப்பு, பெரும் கொடுமைதான் என்றாலும், அரசு எவ்வாறு முழுச் சுமையையும் ஏற்க முடியும்?

இது குறித்த சிந்தனை மக்களுக்கு இல்லாமல் போனதற்கும் அரசியல்வாதிகள்தான் காரணம். அந்த அளவுக்கு அடுத்தடுத்த மத்திய - மாநில அரசுகள், சலுகையும் உதவியும் வகை தொகையின்றி வாரித் தந்து, மக்களிடம் எதிர்பார்ப்பை வளர்த்து விட்டிருக்கின்றன.

தலைவர்களோ, யார் மூலமாகத் திட்டம் செயல்பட வேண்டும் என்பது குறித்த ஈகோ பிரச்னையை எழுப்புகிறார்கள். எத்திட்டம் மூலமும், தங்கள் அணி அல்லது கட்சிக்கு மட்டும்தான் நல்ல பெயர் கிடைக்க வேண்டும் என்பதில் குறியாய் இருக்கிறார்கள். எதிர் அணி அல்லது கட்சிக்குத் தப்பித் தவறியும் துளி நற்பெயர் கிடைத்துவிடக் கூடாது என்பதிலோ வெறியாகவே இருக்கிறார்கள்!

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆரோக்கியமான ஜனநாயகம் எப்படித் தழைக்கும்?

மக்கள் நலனையும் ஆபத்துதவியையும்கூட அரசியலாக்குவதென்பது, ஜனநாயக விரோதம் மட்டும் அல்ல... நம்பி வாக்களித்த மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி; தார்மிகப் பண்புகளுக்கும், மனிதநேயத்துக்கும் தரப்படும் சாட்டையடி!

மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி புரியும் மாற்றுக் கட்சிகள் சிறுபிள்ளைத்தனமாகப் போட்டி போடுவதை விட்டுவிட்டு, கட்சி வேறுபாடுகளைக் கடந்து செயல்பட வேண்டும். மக்கள் நலனில் இணைய வேண்டும். அதுதான் 'உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதின் உண்மையான அடையாளம். ●





# லவ் புட்டிங்

இந்த வாரம் 'காதலர் தினம்' வர்றதால, 'பார்த்த உடனேயே காதல் வர்ற மாதிரி (என் மேலதான்) ஒரு சூப்பர் டிஷ் பண்ணித் தாயேன்டி'ன்னு மாமா என்னை நச்சரிச்சுண்டே இருந்தார். சரின்னு இந்த லவ் புட்டிங்கை செய்யலாம்னு முடிவு பண்ணினேன். இதைச் செய்ய என்னென்ன வாங்கிண்டு வர வேண்டிருக்கும் தெரியுமோ! பெரிய ஆப்பிள் ஒண்ணு, ஒரு கப் வர்ற மாதிரி 50 இல்ல 75 கிராம் பச்சை திராட்சை, சின்னதா பைனாப்பிள் ஒண்ணு, சர்க்கரை 2 கப், ரவா 1 கப், பைனாப்பிள் எஸன்ஸ் 1 டீஸ்பூன், உலர்ந்த திராட்சை 15, ஆயிலும், நெய்யுமா கலந்து 1 கப். அத்தோட நாலு ஏலக்காயைப் பொடிச்சு வச்சிக்கோங்கோ. செர்ரிப் பழம் இருந்துச்சுன்னா, அதுல 6 அப்புறமா தேவைப்படும்.

முதல்ல ரவாவை வாணலில கொட்டி, வாசனை வர்ற வரைக்கும் வறுத்துட்டு, தனியே எடுத்து வச்சிக்கோங்கோ. இப்போ வாணலில கொஞ்சூண்டு நெய்யை விட்டு, காய்ஞ்சப்பறமா அதுல முந்திரி, திராட்சையை வறுத்துடுங்கோ. இப்போ அதுமேல மூணு கப் ஜலம் விட்டு, கொஞ்சமா உப்பு சேர்த்து நன்னா கொதிக்க விடுங்கோ. மூணு நிமிஷம் கொதிச்சுதுன்னா நல்லது. இந்த கேப்ல ஆப்பிள், பைனாப்பிளை நன்னா பொடிப்பொடியா நறுக்கி வச்சிடுங்கோ. கொதி வந்துடுத்துன்னா அதுல ரவையைக் கொட்டி, நன்னா வேகற வரைக்கும் கிளறிண்டே இருக்கணும். வெந்துடுத்துன்னா அதுல சர்க்கரை, ஏலப்பொடியைப் போட்டு, சர்க்கரை கரையற வரைக்கும் கிளறி, வெட்டி வச்சிருந்தோமோன்னோ, அந்த ஃப்ரூட் பீஸஸை மிக்ஸ் பண்ணி, நன்னா கிளறி, கடைசில பைனாப்பிள் எஸன்ஸையும், நெய்யையும் ஊத்தி இறக்கிட வேண்டியதுதான். இந்த புட்டிங்ல ரவாவும், சர்க்கரையும்தான் லவ்வர்ஸ். இவங்கள்ல ஒருத்தர் இல்லாட்டாலும் டிஷ் ஒழுங்கா வராது. இதைச் சாப்பிட்டு காதலர் தினத்தை க்ஷேமமா கொண்டாடுங்கோ. மறுபடி கிரேசி ஸ்பெஷல்ல சந்திக்கலாம். ●



மைக்ரோவேவ் மாமி

பதினேழு வருடங்களுக்கு முன்பு காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர்கள் மகேந்திரபிரபுவும், அனுராதாவும். பிரபு வங்கியில் பணிபுரிபவர்; அனு ஆசிரியை. ஜஸ்ட் இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த ராஜேஷ் - பிரியா திருமணமும் காதல் திருமணம்தான். இரண்டு பேருமே கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார்கள்.



• ராஜேஷ் • பிரியா

# ஒரு காதல் சந்திப்பு!



• மகேந்திரபிரபு • அனுராதா

இரண்டு ஜோடிகளையும் காதல் ஸ்பெஷலுக்காக சந்தித்துப் பேச வைத்தோம்.

**அனுராதா:** காதல் திருமணம் என்றாலே, ஆணும் பெண்ணும், இரண்டு தரப்புக் குடும்பங்களையும் மீறி, திருமணம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. பின்னால், ஒரு பிரச்னை என்றால், "எங்க பேச்சைக் கேட்காமப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்கள்ல... இப்போ, பிரச்னைக்கு மட்டும் எங்ககிட்டே ஏன் வர்றீங்க?" என்று தங்கள் ஈகோவை வெளிப்படுத்துவாங்க. அது வெந்து போன மனசுல கத்தியால குத்தினாற் போல இருக்கும். அதனால, தங்கள் திருமண வாழ்க்கையை வெற்றிகரமானதா, சந்தோஷமானதா அமைச்சுக்கணும்கிற பொறுப்பு, நம்மைப் போன்ற தம்பதிகளுக்கு அதிகமாகவே இருக்கு. அதை முதல்ல புரிஞ்சுக்கணும்.

**பிரியா:** இன்றைக்குக் காதல் திருமணத்துக்கு இரண்டு பெற்றோர்களும் சம்மதிக்கலைன்னா, கை கொடுத்து உதவறது நண்பர்கள்தான். அலுவலக நண்பர்களும், மற்ற நண்பர்களும் தங்கள் கல்யாணங்களின்போது கூட இப்படி பிளான் பண்ணி, ஓடியாடி உழைக்கிறது இல்லை. இது சம்திங் கிரேட்!

**ராஜேஷ்:** ஆனா, அதுலயும் ஒரு விஷயம் இருக்கு. நண்பர்கள் எல்லாரும், அவங்க வீட்ல யாராவது லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டா ஜீரணிச்சிக்க மாட்டாங்க. ஆனா ஃப்ரெண்ட் பண்ணிக்கிட்டா, "பயப்படாதடா! துணிஞ்சு கல்யாணம் பண்ணிக்கங்க! நாங்கள்லாம் இருக்கம்ல" என்று உற்சாகம் தருவாங்க.

**பிரபு:** ஆனாலும், அந்த மாதிரியான

சப்போர்ட்டும் சிக்கலான சமயங்களில் அவசியம்தானே! முன்னே மாதிரியில்லாம, காதல் கல்யாணம் பற்றின கருத்து, இப்போது கொஞ்சம் மாறித்தான் இருக்கு. ஒரே ஆபீஸ்ல வேலை பார்க்கிறவங்க, குறிப்பா, சாஃப்ட்வேர் துறையைச் சேர்ந்தவங்க காதலிச்சு, கல்யாணம் பண்ணிக்கிறது இப்போ அதிகமாயிருக்கு.

**ராஜேஷ்:** ஆமாம்! நாங்க ரெண்டு பேரும் கூட அப்படித்தான்! முதல்ல ஒரு சாப்ட்வேர் கம்பெனியில வேலை பார்த்தோம். அப்போதான் சந்திச்சிக்கிட்டோம். ஒண்ணா ஒர்க் பண்ணினப்போ, நண்பர்களாகத்தான் பழகினோம். இரண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிப்போச்சு. ஆனாலும், இரண்டு பேருமே, இன்னும் கொஞ்சம் நல்ல வேலை கிடைச்சு, வாழ்க்கையில் செட்டில் ஆன பிறகுதான் கல்யாணம்னு முடிவு பண்ணினோம்.

**பிரியா:** அதுக்கு நம்ம குவாலிஃபிகேஷனை அதிகரிச்சுக்கறது அவசியம்னு முடிவு பண்ணி, அதற்கேற்ப ஒரு கோர்ஸ் சேர்ந்து படிச்சோம். அதை முடிச்சதும், ராஜேஷுக்கு பெட்டர் வேலை கிடைச்சது. தொடர்ந்து நானும் அதே கம்பெனியில வேலைக்குச் சேர்ந்தேன். நாங்க இரண்டு பேரும் ஒரே நேரத்துல, எங்க காதல் விஷயத்தை அவரவர் பெற்றோர்கிட்டே சொன்னோம். ஜாதிப் பிரச்னை ஏதுமில்லை என்பதால், பெற்றோர் சம்மதம் பெறுவது சிரமமாக இல்லை.

**பிரபு:** நீங்க அதிர்ஷ்டசாலிகள்.





ஆனால், இன்றைக்கும் ஜாதி என்பது, காதல் திருமணங்களுக்கு ஒரு பிரச்னையாகவே இருக்கிறது. சென்னை போன்ற மெட்ரோக்களில் பரவாயில்லை. தென் மாவட்டங்களில், இன்னமும் காதலர்களுக்கு வில்லன் ஜாதிதான்.

**அனுராதா:** பிரச்னைகளைச் சமாளித்து, திருமணம் என்று ஆனவுடன், விட்டுகொடுத்து, அனுசரித்துப் போவதுதான் சந்தோஷமான உறவின் அஸ்திவாரம். காதலிக்கிறபோது எல்லா விஷயங்களிலும், ஒருவருக்கொருவர் விட்டுத் தரத் தயாராக இருந்தவர்கள், திருமணத்துக்குப் பின் அந்த குணத்தை மாற்றிக்கொண்டு, நானா, நீயா என்று மோதிக்கொண்டு நிற்பது பரிதாபமான விஷயம்.



**ராஜேஷ்:** விட்டுக் கொடுப்பது என்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு விட்டுக் கொடுக்காமல் இருப்பதும் முக்கியம் என்பது என் அபிப்ராயம்.



**பிரியா:** என்ன சொல்றீங்க நீங்க!

**ராஜேஷ் (சிரித்தபடி):** ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு கணவன் தன் மனைவியையும், மனைவி தனது கணவனையும், மற்றவர்கள் முன்னால் எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்கவே கூடாது என்றுதான் நான் சொல்ல வருகிறேன்.

**அனுராதா:** அது ரொம்ப கரெக்ட்! காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்டவர்கள் இடையே நட்புரிமை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். அதை வைத்து மூன்றாவது மனிதர்கள் முன்பு, இருவரும் ஒருவரை ஒருவர்




ஓவராக கிண்டல் செய்வதும், தாழ்த்திப் பேசுவதும் ரொம்ப சகஜம். விபரீதம் தெரியாமல் ஒருவர் அப்படிச் செய்து விட, அடுத்தவர், தக்க தருணம் பார்த்துப் பழிவாங்குவதும், பின்னர் அது தொடர்கதையாக, விபரீதமான விளைவுகளில் கொண்டு போய்விடும்.

**ராஜேஷ்:** இன்று கூட்டுக் குடும்ப முறை நடைமுறையில் இல்லை என்பது, காதல் திருமணம் செய்துகொண்டவர்கள் பலருக்கு அனுகூலமாய் இருக்கிறது. இருதரப்புப் பெற்றோர்களுடனும் சுமுகமான உறவு வளர இந்த இடைவெளி உதவுகிறது. ஆனாலும், காதல் திருமணம் செய்துகொண்டாலும், புகுந்த வீட்டில் புரிந்துகொண்டு அனுசரித்துப் போகிறவர்களும் இருக்கிறார்கள்.

**அனுராதா:** சில வீடுகளில் ஒரு மோசமான சூழ்நிலை நிலவுகிறது. தங்கள் வீட்டுக்கு வரும் மருமகளையோ அல்லது மாப்பிள்ளையையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இரண்டு குடும்பத்தினரும் சுமுகமான உறவினை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை.

**ராஜேஷ்:** காதல் திருமணங்கள் தோல்வியில் முடிய எங்கே கோளாறு என்று நினைக்கிறீர்கள்?

**அனுராதா:** இனக் கவர்ச்சியால், ஈர்க்கப்பட்டு, ஒருவரையொருவர் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், திருமணம் செய்துகொள்ளும் காதல், தோல்வியடைகிறது.

**பிரபு:** காதலுக்கென்று முகமூடியை மாட்டிக்கொள்ளாமல், முதிர்ச்சியான மனப்பக்குவத்துடன், நண்பர்களாகப் பழகி, ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு, நல்லது கெட்டதுகளைத் தெரிந்துகொண்டு, அப்புறமாய் திருமணம் செய்து கொள்கிற காதலர்கள், நிச்சயம் சந்தோஷமான வாழ்க்கை நடத்துவார்கள். அவர்களுக்குள் பிரச்னை என்றால், மனம் திறந்து பேசித் தீர்க்க முனைவார்கள். வெளியிலே பிரச்னை என்றால், சேர்ந்து அதனைத் தீர்க்க முனைவார்கள்.

**பிரியா:** முத்தாய்ப்பாக, சுகி.சிவம் ஒரு நிகழ்ச்சியில் கூறியதைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்தக் குடும்பத்தில் கணவனும், மனைவியும் ஒருவரிடம் ஒருவர் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களோ, அங்கே அந்தக் குடும்பம் ஜெயிக்கிறது. நீயா, நானா என்று ஜெயிக்கப் போட்டி போடுகிறபோது, குடும்ப உறவு அங்கே தோல்வி காண்கிறது.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**
படங்கள் : **கௌதம் ராம்**

# மாமன் மகள்

மலரோன்

**வ**யல்களுக்கு நடுவில் தனியாக இருக்கும் அந்த வீட்டைப் பார்த்ததும் அவன் உள்ளத்தில் ஒரு சுழல் தோன்றி மறைந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன் பார்த்த வீடு. வெறிச்சோடிக் கிடந்த தார்ச் சாலையிலிருந்து விலகி, அந்த வீட்டை நோக்கிச் செல்லும் சிறிய பாதையில் நடந்தான். திருமண அழைப்பிதழ் வைத்திருந்த பிளாஸ்டிக் பை கையில் கசகசத்தது.

திறந்து கிடந்த வாசலுக்கருகில் வந்து நின்றவன், தயக்கமான குரலில், "அத்தே..." என்றழைத்தான். உள்ளிருந்து பதிலேதும் இல்லை.

குழப்பத்தோடு சுற்றிலும் பார்த்தான். சற்று தூரத்தில் அகன்ற கிணறும் மோட்டார் ஷெட்டும் தெரிந்தன. அங்கே இருப்பார்களோ...? அதை நோக்கி நடந்தவன், ஷெட்டிலிருந்து தண்ணீர்க் குடத்தோடு வெளிப்பட்ட பெண்ணைப் பார்த்ததும் சற்றுத் தயங்கி நின்று உற்றுப் பார்த்தான்.

அதே நேரத்தில் அவனைப் பார்த்த அவள், ஆச்சரியத்தோடு குடத்தைக் கீழே இறக்கி வைத்தாள். அடுத்த நொடி அவள் முகம் மகிழ்ச்சியில் மலர, இடுப்பில் ஏற்றிச் செருகியிருந்த சேலையைத் தழைய விட்டு, வேகமாய் அவனை நோக்கி வந்தாள். "வாங்க மாமா..." என்று புன்னகை செய்தாள்.

அவளுக்கிருந்த மகிழ்ச்சி அவனிடம் இல்லை. "நல்லாயிருக்கியா வசந்தி..." என்றான்.

"எனக்கென்ன மாமா குறைச்சல். உங்களைப் பார்த்து எத்தனை வருஷமாச்சு! நீங்க எப்படியிருக்கீங்க? உங்களுக்குக் கல்யாணம் ஆகப் போவுதுன்னு அம்மா சொன்னதும் எனக்குக் கைகால் ஓடல. அவ்வளவு சந்தோஷம். வாங்க வீட்டுக்குப் போய் பேசலாம்" என்று அவனுக்கு முன்னால் உற்சாகமாக நடந்தாள் அவள். அவன் தயக்கத்தோடு பின்தொடர்ந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும், அவனை நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு சமையற்கட்டுக்கு ஓடினாள். அடுப்பைப் பற்ற வைத்தபடியே பேசினாள்...

"அப்பா ஆத்தூர் போயிருக்காங்க. அம்மா வயக்காட்ல நெல்லறுப்பைப் பாத்துட்டிருக்காங்க. தம்பி வண்டி எடுத்துக்கிட்டு சினேகிதங்களைப் பாக்கப் போயிட்டான்..."

அவள் குரலின் சுருதி அவனை ஆச்சரியப்பட வைத்தது. எவ்விதப் பாசாங்கு மற்ற, இயல்பான அதே பழைய குரல்... பதினைந்து வயதுக் குரல். அவளைப் போல் இயல்பாகத் தன்னால் ஏன் இருக்க முடியவில்லை என்று யோசித்தான்.

"பொண்ணு எப்படி மாமா... சிவப்பா?"

"ம்..." என்றான் ஒற்றை எழுத்தில்.

"படிச்சிருக்கா?"

"ப்ளஸ் டூதான்."

"போதும் போதும். நீங்க என்ன வேலைக்கா அனுப்பப் போறீங்க. எப்பவும் பொண்டாட்டியை வீட்ல வச்சி கொஞ்சிக்கிட்டிருக்கணும்னு ஆசைப்படற ஆள்தானே நீங்க..."

அவனுக்கு சுருக்கென்றது. இது போன்ற பேச்சைக் கேட்க நேரும் என்ற பயம்தான் அவனது தயக்கத்துக்குக் காரணமோ?

"அப்படி ஆசைப்பட்டதெல்லாம் அந்தக் காலம்" என்று தன்னையறியாமல் கூறியவன், அடுத்த நிமிடம் ஏன் அப்படிச் சொன்னோம் என்று வருத்தப் பட்டான். அடுப்படியிலிருந்து பதிலேதும் இல்லை. பாத்திரங்களின் சலசலப்பு மட்டுமே கேட்டது.

கொஞ்ச நேரம் கழித்து சில பலகாரங் களையும், சூடான பாலையும் அவன் முன் கொண்டு வந்து ஒரு ஸ்டூலின் மீது வைத்த அவள், அவனுக்கெதிரே தரை யில் அமர்ந்தாள்.

"சாப்பிடுங்க மாமா..."

எதையும் சாப்பிடும் நிலையில் அவன் இல்லையென்றாலும், அவளுக் காகச் சிறிது சாப்பிட்டான். பால் அருந்தி னான். அதுவரையில் ஒரு கனத்த மௌனம் அங்கே நிலவியது. தரையைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்த அவள், தலையை உயர்த்தி அவனைப் பார்த்து,

''பொண்ணு உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்றாள்.

அதற்கு உடனே விடை சொல்ல அவ னால் முடிய வில்லை. ஏனெனில் அதற்கான விடை அவனுக்கே தெரியாது.

"என்ன மாமா யோசனை?" என்றாள்.

"வீட்ல எல்லாருக்கும் பிடிச்சிருக்கு" என்றான்.

"நான் உங்களுக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்."

''நான் பொய் சொல்ல விரும்பல வசந்தி. பொண்ணு பிடிச்சிருக்கு - பிடிக் கலைன்னு ரெண்டு கருத்துமே இப்ப எனக்கில்ல."

"இதென்ன பதில் மாமா?"



''என் மனசில இருக்கிறதைச் சொன் னேன்."

அவள் சிறிது நேரம் அமைதி காத்தாள். பின் மெல்லிய குரலில், ''உங்க மனசுல வேற எதனா இருக்கா?'' என்றாள்.

''வேற எதனான்னா?"

அவள் தலை கவிழ்ந்து, ''வேற... பழைய நெனப்பு..'' என்றாள்.

''இல்ல வசந்தி. அதையெல்லாம் நான் அப்பவே மறந்திட் டேன்."

"என்னால மறக்க முடியல" என்று அவள்

தனக்குள் சொல்லிக் கொண்டான். தலை உயர்த்தி "அப்புறம் ஏன்?" என்று கேட்டான்.

"ஏன்னு தெரியல. அதுக்கப்புறம் யார் மேலயும் எனக்கு ஆசை வரல."

"கட்டிக்கப்போற பொண்ணு மேலயுமா?"

"ஆமா."

அவள் கண்கள் கலங்கின.

"என்னை மன்னிச்சிடுங்க மாமா..." என்றவள், குரல் உடைந்து அழத் தொடங்கினாள். ஆறுதல் சொல்லும் வழி தெரியாமல் தவித்தான் அவன்.

**அ**ப்போது பத்தாவது படித்துக் கொண்டிருந்த பதினைந்து வயது கிராமத்துப் பெண் அவள். சிறுநகரம் ஒன்றில் ப்ளஸ்டூ படித்துக் கொண்டிருந்த அவன், கோடை விடுமுறையில் கிராமத்துக்கு வந்திருந்தான். அத்தை மகன் என்ற உறவு, நகரில் படிப்பவன் என்ற ஈர்ப்பு, பதினைந்து வயதுப் பருவம், இவை எல்லாமும் சேர்ந்து அவளை அவன் மீது காதல்கொள்ளச் செய்தது.

தோழியைத் தூது விட்டாள். அப்போது அவனுக்கு அவள் மீது காதலில்லை. எனினும் அவள் எழுதியிருந்த கடிதத்தைப் படிக்கப் பிடித்திருந்தது. ஒருவித உற்சாகமும் ஏற்பட்டது. இரண்டு நாட்கள் அவளைத் தவிக்க விட்டு, அவள் காதலை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தான். அவள் இன்பத்தில் மிதந்தாள்.

ஒரு நாளுக்கு ஒருமுறைதான் அவர்கள் சந்திப்பு. அதுவும் பத்தடி இடைவெளியில். சின்னச் சின்ன உரையாடல்கள். அவன் பார்வையில் உற்சாகமிருக்கும். அவள் பார்வையில் உயிரைக் குடிக்கும் காதலிருக்கும். ஒரு மாதம் கழித்து அவன் நகரத்துக்குப் புறப்பட, உயிர் பிரியும் வேதனையை அனுபவித்தாள். நகரத்துக்கு வந்தபின்தான், அவள் மீதான காதலை அவன் உணர்ந்தான். அவளுக்காக ஏங்கினான். கடிதங்கள் இருவருக்கிடையேயான காதல் உணர்வைப் பரிமாறிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் அவளிடமிருந்து வந்த கடிதம் அவனை உலுக்கியெடுத்தது. அவர்கள் விஷயம் வீட்டுக்குத் தெரிந்துவிட்டதாகவும், அவளைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டதாகவும், இனிமேல் கடிதம் எழுத வேண்டாம் என்றும் எழுதியிருந்தாள்.

சோகத்தில் தவித்த அவன், அடுத்த விடுமுறைக்குக் காத்திருந்தான். கிராமத்துக்குப் போனான். அவளைச் சந்திக்க எவ்வளவோ முயன்றான். முடியவில்லை. நான்காவது நாள் அந்த வாய்ப்புக் கிடைத்தது. பாதி மறைந்த வண்ணம் நின்றுகொண்டிருந்த அவள், "என் அப்பா ரொம்பக் கோபக்காரரு. நம்மால இனி ஒண்ணு சேர முடியாது" என்றாள். அவன் எவ்வளவோ சொன்னான். அவள் மறுத்தாள். இறுதியாக அவள், "நாம ஒரு அண்ணன் தங்கச்சி மாதிரி பழகலாம்" என்று சொல்லிக்



குலுங்கி அழுதாள்.

அத்துடன் அவர்களின் வசந்தம் முடிந்து போனது. வெறுமையாக நகரம் திரும்பிய அவன் மனம், மறுபடி மலரவே இல்லை. ஆனால் அவளது பதினெட்டாவது வயதில் அவள் மனம் மலர்ந்தது. ஒரு காதல் அரங்கேறியது. இம்முறை அவள் கோழையாக இல்லை. காதலித்தவனுடன் ஓடிப்போனாள்.

ஆனால், அங்கேதான் அவளுக்குப் பெரும் சோகம் காத்திருந்தது. காதலில் இனித்த வாழ்க்கை, கல்யாணத்தில் கசந்தது. சில மாதங்களே தாம்பத்யம். துன்பத்தில் துடித்த அவளை விவாகரத்து

மூலம் மீட்டது. அவளுடைய பாசமான தந்தைதான். இரண்டு காதல், ஒரு கல்யாண வாழ்க்கையை அனுபவித்து விட்டு, அப்பா வீட்டில் சலனமின்றிக் கழிகிறது அவள் வாழ்க்கை. உற்சாகம் இன்றியும்தான்.

அவள் அழுது தெளிந்திருந்தாள். அவள் எதற்காக அழுதாள் என்பது அவனுக்குத் தெரிந்தே இருந்தது. அவளை மகிழ்வுடன் வாழச் செய்வதற்கான ஒரு சாத்தியக்கூறு தன்னிடம் இருந்ததை அவன் நினைத்துப் பார்த்தான். கவனிப் பாரற்றுக் கிடந்ததால், சில முனைகள் இணைக்கப்படாமலே மறக்கப்பட்டு விட்டன. காலம் கடந்து விட்டதும் அவனுக்குத் தெரிந்தே இருந்தது.

"என்னை மன்னிச்சிருங்க மாமா" என்றாள் மீண்டும்.

"நீ எந்தத் தப்பும் செய்யல வசந்தி. சந்தோஷமா இருக்க முயற்சி பண்ணு" என்றான்.

**உன்
பெயர் சொல்லிவிட்டு
வீட்டில் நுழையும்
திருடனைக் கூட
தடுக்கத்
தோன்றவில்லை
என்னால்.**

"உங்க கல்யாணம்தான் எனக்கு சந்தோஷம். நான் உங்களை ஏமாத்திட்டேன் மாமா. அந்தச் சின்ன வயசுல எனக்கு எதுவும் தெரியல. அதுக்கான தண்டனையை நான் அனுபவிச்சிட்டேன். அதுக்காக நான் கவலைப் படல. நீங்க கல்யாணம் பண்ணிக்காம தனியா வாழ்ந்திட்டிருக்கீங்கன்னு கேள்விப்படும் போதெல்லாம், நான் உடைஞ்சி போயிடுவேன். என்னாலதான் நீங்க இப்படி இருக்கீங்கன்னு ஒரு குற்ற வுணர்ச்சி என்னை அரிச்சித் தின்னும். போனமாசம் உங்க கல்யாண சேதியைக் கேட்ட பின்னதான் மனசு நிம்மதியாச்சு. ஆனா நீங்க இன்னும் விரக்தியாவே பேசறீங்களே மாமா. பொண்ணு பிடிச்சி ருக்குன்னு ஒரு வார்த்தை சொல்லி யிருந்தீங்கன்னா, நான் எவ்வளவு சந் தோஷப்பட்டிருப்பேன் தெரியுமா..."

"நான் உள்ளதைத்தான் சொன்னேன் வசந்தி. அதுக்காக அந்தப் பொண்ணைப் பிடிக்கவே பிடிக்காதுன்னு சொன் னேனா? பழகப் பழகப் பிடிச்சிட்டுப் போகுது."

"இது போதும் மாமா. கல்யாணத் துக்கப்புறம் நீங்க சந்தோஷமா இருக்கீங் கன்னு ஒரு சேதியைக் கேட்டா போதும். என் நெஞ்சு நிறைஞ்சிடும்."

"நான் சந்தோஷமா இருப்பேன் வசந்தி..."

அவள் பழைய உற்சாகத்துக்குத் தாவினாள்.

அவன் பிளாஸ்டிக் பையைப் பிரித்து திருமண அழைப்பிதழை அவளுக்குக் காட்டினான். ஆர்வத்தோடு பிரித்துப் படித்து குதூகலித்தாள்.

"உங்க கல்யாணத்துக்கு யார் வருவாங்களோ இல்லையோ... நான் வருவேன் மாமா."

"அப்பா அம்மாகிட்ட சொல்லிரு வசந்தி. நான் கிளம்பறேன்." அவன் எழுந்து கொண்டான்.

"அதுக்குள்ளவா?" என்றாள்.

"இன்னும் நிறையப் பேருக்கு பத்திரிகை கொடுக்கணும். ராத்திரி ஊருக்குக் கிளம்பணும்."

அவன் வாசலில் இறங்கினான். கனத்துக் கிடந்தது அவன் மனம். வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு, அத்தை மகள் சந்தோஷத்தை மட்டுமே ஆத்மார்த்தமாக விரும்பும் அவன் முகத்தைப் பார்த்தான். இனிமேல் செய் வதற்கு எதுவுமில்லை.

"வரேன் வசந்தி..."

"ஒரு நிமிஷம் மாமா" என்றவள் சற்றுத் தயங்கினாள்.

"என்ன வசந்தி?"

"இந்த பாவப்பட்ட மாமன் மகளுக் கும், உங்க மனசுல உறவுக் காரிங்கற முறையில ஒரு இடம் இருக்கு மில்லையா?"

"இருக்கும்."

அவன் புறப்பட்டான்.

"மாமா... உங்களுக்குப் பொண்ணு பொறந்தா, வசந்தின்னு எம்பேரை வச்சிடாதீங்க..." ○

# ஹிந்து கடவுளரைக் கேலி செய்கிறாரே கருணாநிதி?



* மக்கள் மறுதலிப்பு!

● **ஆர்.தங்கராஜ், திருப்பூர்**

*? சீனாவைப் போல் இந்தியா வளரவேண்டும் என்கிறாரே பிரதமர்?*

! வளரும். சீனா, ஜப்பான் போல மக்களிடம் தேசப்பற்றும், கடமை உணர்வும் வளர்க்கப்பட்டால், நம் நாடும் அந்த நாடுகள் போல வேகமாக முன்னேறும். காந்தி சகாப்தத்துக்குப் பிறகு இந்தியத் தலைவர்கள் வழிகாட்டவும் இல்லை; முன்னுதாரணமாகவும் திகழவில்லை. நாடு எப்படி வேகமாக வளர்ச்சி பெறும்?

● **வே.பாலா, திண்டுக்கல்**

*? 'எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த ஆணுறையைப் பயன்படுத்துவதைக் காட்டிலும் முறையான பாலியல் பழக்கங்களையும், குடும்ப உறவுகளையும் பலப்படுத்துவதுதான் சிறந்த அணுகுமுறை' என போப் சொல்கிறாரே...?*



* வேக விளக்கம்!

! கத்தோலிக்கக் கோட்பாட்டைத்தான் அவர் சொல்கிறார். கருத்தடை சாதனங்கள் மனக் கட்டுப்பாட்டைத் தளர்த்தும்; சமுதாயத்தில் பாலியல் ரீதியான குற்றங்கள், அநாகரிகங்கள் அதிகரிக்கும் என்பது கருத்து. இந்த வாதம் சரியானதே. ஆன போதிலும் எய்ட்ஸ் பீதியும், கு.க.வின் அவசியமும் ஆணுறையை அத்தியாவசியமாக்குகின்றன.

● **சி. கார்த்திகேயன், சாத்தூர்**

*? சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் ஹிந்து கடவுளரை கேலி செய்கிறாரே கருணாநிதி?*

! போலிச் சாமியார்களையும் மூடநம்பிக்கைகளையும் ஒழிக்க அவர் பாடுபடுவதை மக்கள் ஏற்பார்கள். ஆனால் ஹிந்து மதத்தையும் கடவுளரையும் கேலி செய்வதில் இறங்கினால், மக்கள் நாத்திகத்தின் வெளிப்பாடு என்று வெறுமே ஒதுக்கித் தள்ளிவிட்டுப் போகாமல், மனம் புண்படுவார்கள். எதிர்மறை விளைவுகள் ஏற்படும்.

● **என்.மகரந்தன், மங்கை நல்லூர்**

*? காதலர் தின கலாசாரத்தை எதிர்த்துப் போராடுவாராமே திருமாவளவன்?*

! நேரத்தை வீணடிக்காமல் உருப்படியாக அரசியல் பண்ணினால், வோட்டு வங்கி பலப்படும். வெறும் ஸ்டண்ட் அரசியல் பண்ணினால், செய்தியில் இருக்கலாமேயொழிய, பயன் எதுவும் இராது. காதலர் தினம் அயல்நாட்டு இறக்குமதியாக இருக்கலாம். ஆனால், தமிழர் கலாசாரத்தில் தினந்தோறும் காதல் உண்டு. அதன் புனிதம் உணரப்பட்டதுண்டு.

● **பி. கற்பகம், சென்னை - 73** ❐

*? சேலத்தில் டாஸ்மாக் பார் ஏலத்தில் பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு கலந்துகொண்ட செய்தி பற்றி...?*

! தார்மிக நெறிகள் பற்றிய கவலை

யின்றி, அரசே மது விற்பனையை வெறும் வியாபாரமாகப் பார்க்கிறபோது, குடிமக்களும் அவ்வாறே காண்பதில் என்ன அதிசயம் இருக்கிறது? பணம் பண்ணுகிற ஆசை, பெண்களுக்கு மட்டும் இராதா..?

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்



* ஸ்டண்ட் அரசியல்!

? புதிய வீராணம் விரிவாக்கத் திட்டப் பகுதி விவசாயிகளின் நலனையும், அங்குள்ள நிலத்தடி நீர் வளத்தையும் பாதுகாக்கும் வகையில் கொள்ளிடத்தின் குறுக்கே, எழுபத்தைந்து கோடி ரூபாய் செலவில் மூன்று தடுப்பணைகள் கட்டப்படும் என்று முதல்வர் அறிவித்திருப்பது...?

! பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்!

● பி.எஸ்.பேச்சி, ஆத்தூர் (முத்துநகர் மா.வ.) *

? படிப்புக்கும் அனுபவத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன...?

! படிப்பு - கல்லூரியில் சேர்ந்து பாடத் திட்டத்தில் பயிலும் தகவல்; வெறும் அறிவு. அனுபவம் - அக்கல்லூரிகளை நடத்தக்கூடிய சிலரே வியாபாரிகளாகவும், கொலைக் குற்றத்துக்கும் சளைக்காதவர்களாகவும் உருவாகிறபோது நாம் கற்கும் பாடம்.

● ஜே. துரைராஜ், சென்னை - 116

? பள்ளிச் சிறுவர்கள் கடத்தல் விஷயத்தில் பீஹார் முதலமைச்சர் ராப்ரிதேவிக்குப் பதிலாக, ரயில்வே அமைச்சர் லல்லுபிரஸாத் யாதவ் வேக வேகமாக விளக்கம் அளிக்கிறாரே... ஏன்?

! லல்லுதானே ராப்ரியின் மவுத் பீஸ்! ஆனாலும், குழந்தைகள் களவாடப்படும் கொடுமையைக் கூட இப்படி அரசியலாக்கக் கூடாது. எதிர்க்கட்சியினர் சதி... அவர்கள்தான் பொறுப்பு என லல்லு பா.ஜ.க.வைச் சாடுவதும்; பா.ஜ.க. தலைவர்கள், "இந்த விவகாரம் குறித்து சோனியா வாயே திறவாததுதான் மர்மம்'' என்று ஏதோ துப்பு கண்டுபிடித்த மாதிரி உளறுவதும்... பாவம் குழந்தைகள்!

* கத்தோலிக்கக் கோட்பாடு



● மல்லிகை மன்னன், மதுரை

? 'காஞ்சியில் உள்ள சங்கர மடம் புனிதமான இடம் அல்ல; பதினைந்து பேர் சேர்ந்து வாழும் குட்டி காலனி' என்று தமிழக அரசு சுடச்சுட பதில் அளித்திருக்கிறதே தலைவா...?

! 'தமிழக அரசின் இந்த அறிக்கை தவறு; அங்கே சந்திர மௌளீசுவரர் வழிபாடு, காலம் காலமாக நடைபெற்று வருகிறது; பூஜைகளின்போது முதல்வரே சில சமயம் அருகிலிருந்து கண்டு நெகிழ்ந்திருக்கிறார்...' என்று மடத்திலிருந்து பதிலறிக்கை பிறந்துள்ளதே, தொண்டரே!

● ஆர்.பாலசுப்ரமணியன், சென்னை - 17

? 'மடத்துக்கு நூற்றுக்கணக்கான வங்கிக் கணக்குகள் எதுக்குங்க...? பண வீக்கம் நாட்டுக்கு மட்டும் அல்ல; மடத்துக்கும் ஒத்து வராது' என்று எழுதியுள்ளீர்களே... உங்கள் கல்கி அலுவலகம் எவ்வளவு பாங்க் கணக்கு வைத்துள்ளது என்று யாராவது கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்?

! உங்கள் கேள்வி அநாகரிகமானது. என்றாலும் பதில் சொல்கிறேன். கல்கி நிறுவனத்துக்கு இந்தியன் வங்கி கிண்டி கிளையில் மட்டுமே வங்கிக் கணக்கு உள்ளது. அதிலும் கையிருப்பைவிட கடனே அதிகம்.

* தடுமாற்ற வரலாறு!



* சீன சவால்!





* காதல்-மோதல்!



* வீராணம் மூன்று!

● கே.வி.ராமன், சென்னை - 73

***? பர்வீன் பாபியின் மறைவு குறித்து?***

! ஐந்து கோடிக்கு அதிகமான சொத்துக்களை விட்டுவிட்டு அனாதையாக இறந்துபோன முன்னாள் கனவுக் கன்னியின் மெய்யான வாழ்க்கை வரலாறு விருப்பு வெறுப்பின்றி எழுதப்படக் கூடுமானால், திடீர்ப் பணமும் புகழும் எப்படி மனத் தடுமாற்றங்களை ஏற்படுத்திவிடக் கூடும் என்று அத்தகைய பிரிவினருக்கு எச்சரிக்கையாக அமையும்.

● ராஜ்குமார், காராப்பாடி

***? 'காதல்' பட இசையமைப்பாளர் ஜோஸ்வாஸ்ரீதர் பற்றி...?***

! பிரமாதமாக இசையமைத்ததோடு நிறுத்திக்கொள்ளக் கூடாதா...? கிபோர்டு வாசிக்கும் இளம் பெண்ணுடன் ஓடிப் போய், சிக்கலிலும் மாட்டிக்கொண்டு விட்டாரே... (கொசுறுச் செய்தி : ஜோஸ்வா இசையமைத்துக் கொண்டிருக்கும் அடுத்த படத்தின் பெயர் : 'காதல் வளர்த்தேன்'!)

● வே.ந.கதிர்வேல், வேலூர்

***? எரித்துக் கொல்லப்பட்ட ஆஸ்திரேலியப் பாதிரியாரின் மனைவிக்கு பத்மஸ்ரீ விருது கொடுக்கப்பட்டது கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறதே..?***

! தன் கணவரை உயிருடன் எரித்துக் கொன்றவரைக் 'கர்த்தர் மன்னிப்பாராக' என்று பிரார்த்தித்த பெருந்தன்மைக்கே பத்மஸ்ரீ தரலாம். ஆனால், பத்மஸ்ரீ தரப்பட்டது, அவரது சமுதாயப் பணிக்குத்தான். உள்நோக்குடன் கண்டனம் தெரிவிப்போருக்கு ஒரு 'கண்டனஸ்ரீ' தரலாம்.

● அ.அப்துல் காதர், விளாத்திகுளம்

***? 'தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும் மாநில முதல்வர் மற்றும் சிலரைத் தவிர அமைச்சர்கள் அனைவரும் ராஜினாமா செய்ய வேண்டும்' என தலைமைத் தேர்தல் ஆணையர் டி.எஸ். கிருஷ்ண மூர்த்தி யோசனை தெரிவித்துள்ளாரே...?***

! அரசு இயந்திரத்தை ஆளுங்கட்சிக்கு சாதகமாகப் பயன்படுத்த முதல்வரும் மற்றும் சிலரும் போதாதா? அவர்களுக்கு ஏன் தனிச் சலுகை? தேர்தலுக்கு ஆறு மாதம் முன்பு அமைச்சரவையே ராஜினாமா செய்ய வேண்டும் என்று பல காலம் முன்பே வலியுறுத்தியவர் ராஜாஜி.

● வசீகரன், சென்னை

***? கூடங்குளம், கல்பாக்கம் அணு உலைகளை மூடிவிட மனித உரிமை குழு கேட்டுக்கொண்டுள்ளதே...?***

! அணு மின் நிலையங்களால் மக்களுக்குத் திடீர் எதிர்பாரா அபாயம் உண்டு; பாதிப்பும் உண்டு. ஆரம்பிக்காமல் இருப்பது நல்லது. ஆரம்பித்துவிட்டால், மூடு விழாக்கள், பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மிகக் கஷ்டம்.

● அ. கஹைறல் ரஹ்மான், திருச்சி

***? அலுவலக நேரத்தில் தூங்கியவரை டிஸ்மிஸ் செய்யலாம் என்ற சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு பற்றி...?***

! ஆயிரக்கணக்கில் கோர்ட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் வழக்குகளுக்கும் ஒரு தீர்ப்புச் சொன்னால் நன்றாக இருக்கும். ●

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
**பி.கற்பகம்,**
10, திருவள்ளுவர் தெரு,
பாரதி நகர், சேலையூர்,
சென்னை - 600 073.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
**பி.எஸ்.பேச்சி,**
8/256, அம்மன் கோயில் தெரு,
ஆத்தூர் (தெற்கு),
முத்துநகர் மாவட்டம்-628 151

# சிறுநீரகக் கோளாறு, சிறுநீரகக் கல், சிறுநீர்குழாய் கல், சிறுநீர்பை கல் – கரையவும் உருவாகாமல் இருக்கவும்



# உதவும் தெய்வீக மூலிகைகள்

நோயற்ற வாழ்விற்கு சுற்றுப்புறம் மட்டுமல்ல உடலின் உள்ளேயும் சுத்தம் செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட சுத்திகரிப்பு பணியை செய்யும் ஒரு இரசாயண தொழிற்சாலை தான் சிறுநீரகம் (Kidney) எனப்படும் உறுப்பு.



## சிறுநீரகத்தின் சிறப்பான பணிகள் :

நம் உடலின் நீரின் அளவு, இரத்தத்தில் உப்பு, அமிலம் மற்றும் காரத்தன்மையை சீராக வைத்திருக்க உதவுகிறது. இரத்த அழுத்தம், இரத்த சோகை வராமல் தடுக்கவும், வைட்டமின் டி உற்பத்தியாகும் சிறுநீரகம் துணை புரிகிறது. நம் இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களான யூரியா, கிரியேட்டினின், அதிகப்படியான நீர், யூரிக் அமிலம், தேவைக்கு அதிகமான தாதுப் உப்புக்களான சோடியம், பொட்டாசியம், குளோரைடு போன்ற வெளியேற்றப்படுகின்றன. நாம் உண்ணும் உணவு செரித்தலின் கடைசி நிலையில் உண்டாகும் பாஸ்பேட், சல்பேட், ஆக்ஸலேட், யூரேட் போன்ற உப்புக்களை சிறுநீர் மூலம் நம் சிறு நீரகங்கள் வெளியேற்றுகின்றன. நமது சிறுநீரகம் நன்றாக செயல்படுகின்றனதா என்பதை அறிய ஒவ்வொருவரும் இரத்தம் மற்றும் சிறுநீரகப் பரிசோதனை செய்துக் கொள்வது நல்லது.



## சிறுநீரகக் கல் உருவாகக் காரணம் :

சிறுநீரகங்கள் நன்றாக வேலை செய்யும்போது இரத்தத்தில் உள்ள எல்லா கழிவுகளும் சரியான அளவில் வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகம் பழுதடையும்போது இரத்தத்தில் உள்ள கால்சியம், பாஸ்பேட், யூரிக் அமிலம், ஆக்ஸலேட், சிஸ்டைன், கால்சியம் மானோ ஹைட்ரேட் போன்ற மிக நுண்ணிய உப்பு படிகங்கள் (Crystal Urea) மணல் போன்று உருவாகும். இப்படிக்கங்கள்மீது மேலும், மேலும் படிகங்கள் சேரும்போது கற்கல் உண்டாகின்றன.

இந்தக் கற்கல் சிறுநீரகத்தில் இருந்தால் வலது அல்லது இடது பக்க கீழ் முதுகு பக்கங்களில் வலி வரலாம். சிறுநீர் குழாயில் கல் இருந்தால் வலி விதைகள் வரை பரவலாம். சிறுநீர் தாரையில் இருந்தால் வாந்தி, நீர்கடுப்பு, சிறுநீரில் இரத்தம் கலந்து செல்லுதல், காய்ச்சல் ஆகிய விளைவுகள் ஏற்படலாம். சிறுநீரின் வேகம் தடைபடலாம். சிலருக்கு அறிகுறிகள் இன்றியும் இருக்கலாம். அடிக்கடி சிறுநீர் பாதை தொற்று (Urinary Tract Infection) சிறுநீர்பாதை அடைப்பு (Urinary Tract Obstruction) போன்றவற்றாலும் கற்கல் தோன்றலாம்.

## கற்களை கரைக்கும் உணவு முறைகள் :

தினம் காலை ஒரு வேளை இயற்கை உணவாக நீர் உள்ள பழங்கள், காய்கள், வெஜிடெபிள் சாலட், பழஜூஸ், இளநீர், லெமன் ஜூஸ், வாழைப்பழம், அன்னாசி, வெள்ளரிக்காய், மாதுளை, திராட்சை போன்றவையாக உட்கொள்ள வேண்டும். மற்ற இரண்டு நேரம் சமைத்த சைவ உணவுகள் போதும். இதில் கொள்ளு கஞ்சி, பார்லி கஞ்சி, முள்ளங்கி, வாழைத்தண்டு, கொத்தமல்லி போன்றன அடிக்கடி இடம் பெறல் வேண்டும்.

மேலும், பால், மாமிச உணவுகள், டின்களில், பாட்டல்களில் அடைத்த உணவுகள், முதலியன தவிர்க்க வேண்டும். இதனால் கற்கள் உருவாவதை தடுக்கலாம்.

CKM
DIVINE HERBAL CENTRE

*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்*

**Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்**

தலைமை முகவரி : அஞ்சல் பெட்டி 30, எண்.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (வ.ஆ.மா.) - 635 601 ✆ : 04179-220469, 222769 Cell : 9443438670

சென்னை முகவரி : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10. ✆ : 044-26424285, 26427638 Cell : 9444161670

டெல்லி கிளை : Mrs.Valli, 6/34, W.E.A., Karolbagh, New Delhi - 5. ✆ : 011-25736220 Cell : 9868026743

**மூன்று முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7**

| | | |
|---|---|---|
| **7 & 8**ந் தேதி - மும்பை :<br>காலை 9 to இரவு 8 மணி வரை<br>The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), ✆ : 24011589, 24083879 | **9**ந் தேதி - பெங்களூர் :<br>காலை 11 to மாலை 1 மணி வரை<br>Nalapad Residency, (கல்பனா தியேட்டர் அருகில்)<br>கெம்பே கவுடா ரோடு. ✆ : 080-2266374 | **20 & 21**ந் தேதி - புதுடெல்லி :<br>காலை 9 to இரவு 8 மணி வரை<br>South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆ : 25717126, 25723631 |

நாம் விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கிறோம். அதைச் சரி பண்ணுகிறோம். இதை சரிதட்டுகிறோம். அது மேலே விழுந்துவிடுமோ, இதில் விழுந்து விடுவோமோ என்று சுற்றியிருக்கிற எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகப் பார்க்கிறோம். விஷ ஜந்துக்கள் உள்ளே வரக்கூடாது என்று அதையும் இதையும் மூடி வைக்கிறோம்.

ஆனால், தூங்குகிறபோது எது மேலே விழுந்தால் நமக்கென்ன தெரியும்? எந்தப் பிராணி வந்து கடித்தால் என்ன தெரியும்! தூக்கத்திலே நாமே நம்மை

# குறையொன்றுமில்லை

ரக்ஷித்துக்கொண்டா இருக்கிறோம்? இல்லையே!

தூக்கத்திலே எப்படி நாம் நமக்கு ரக்ஷகர்கள் இல்லையோ, அப்படியேதான் விழித்துக் கொண்டிருக்கிறபோதும் நாம் நமக்கு ரக்ஷகர்களே அல்ல... எவ்வாறு தூக்கத்திலே நம்மை ரக்ஷிப்பதற்கு பகவானை நம்பி இருக்கிறோமோ, அதே மாதிரி விழிப்பிலும் அவனே நம்மை ரக்ஷிக்கிறான் என்று நினைக்கிறவர்களெல்லாரும் எம்பெருமானிடத்திலே உத்தமமான பக்தி உடையவர்கள்.

விழித்துக் கொண்டிருக்கும்போதும் நாம் நமக்கு ரக்ஷகர்கள் இல்லை. அவன்தான் நம்மை ரக்ஷிக்கிறான் என்பதில் திரடமான நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும்.

ஆகையினாலே, காலத்தினால் நின்று நமக்குப் பல விதத்திலேயும் ரக்ஷணம் பண்ணக்கூடிய எம்பெருமான் அவன்தான் என்கிற சமஸ்த வேத ஸாரமான விஷயத்தை

**விச்வம் விஷ்ணு; வஷட்கரோ**
**பூத பவ்ய பவத்பிரபு:**

என்ற முதல் நான்கு திருநாமங்களிலே பீஷ்மாச்சார்யார் அழகாக விவரிக்கிறார்.

சில யக்ஞங்களுக்கு சம்வத்ர தீக்ஷை ஒரு வருஷ காலம் பூரணமாக தீக்ஷை வகித்து, பிறகு யக்ஞத்தை நடத்த வேண்டும். தீர்க்க ஸத்ர யாகங்களெல்லாம் அந்தக் காலத்தில் பண்ணுவார்கள். அஹோராத்ரம் யக்ஞங்களெல்லாம் நடக்கும். அந்தக் காலத்திலே, முழுவதுமாய் அருகில் நின்று பூரண பலனைக் கொடுக்கிறான் பரமாத்மா. 'சர்வ கர்ம சமாராத்யன் அவன்' என்று பலப் பல யக்ஞங்களின் பெயர்களைச் சொல்லி,



# முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


வேதம், சர்வ கர்மாக்களாலும் ஆராதிக்கப்படக்கூடியவன் அவனே என்று சொல்கிறது.

யக்ஞமெல்லாம் பகவத் ஆராதனம். ஸோம யாகத்தில் ஆரம்பித்துப் பல யக்ஞங்களை வேதம் எடுத்துச் சொல்கிறது.

பிராமணர்கள் பண்ணக்கூடிய உயர்ந்த ஸோம யாகம், க்ஷத்திரியர்கள் பண்ணக்கூடிய ராஜஸூயம், எல்லாவற்றிலும் யக்ஞ ரூபியான பகவானை யக்ஞத்தினால் ஆராதித்து, அவனுடைய அனுக்கிரஹத்தை நாம் சம்பாதிக்க, அந்தக் காலத்தை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

'காலமாய் இருந்து, பகவான் காலத்துக்குப் பிரபுவாக இருக்கிறான்' என்று, இந்த வேத வான்மயம் எடுத்துக் காட்டுகிறது. வேதம் சொல்லும்படியான இதே கருத்தைத்தான், **பூத பவ்ய பவத் பிரபு:** என்ற நாமமும் எடுத்துக் காட்டுகிறது.

நிகழ்காலத்துக்கும் அவன்தான் பிரபு. எதிர்காலத்துக்கும் அவன்தான் பிரபு. அதே மாதிரி



கடந்த காலத்துக்கும் அவன் பிரபு, யஜமானன். காலம் அவனைக் கட்டுப்படுத்தாது. காலத்துக்கு உட்பட்டவன் அல்ல அவன். அதீதமானவன். கால ரூபியாய் பகவான் இருந்து, எல்லாவற்றையும் நடத்துகிறான். காலம் அவனைத் தடுக்காது. மீதி எல்லாருக்கும் கால நிர்ணயம் உண்டு; வயோர் நிர்ணயம் உண்டு.

மனிதனை நாம் எடுத்துக் கொண்டோமானால், வாஜபேய மஹா யக்ஞப் பிரகரணத்திலே 'சதமானம் பவதி' என்று மனிதனுடைய ஆயுளை நிர்ணயம் பண்ணியிருக்கிறது. ஒரு மனிதனுடைய ஆயுள் எவ்வளவு என்றால், நூற்றியிருபது வயது என்று நிர்ணயிக்கலாம். நூற்றியிருபது வயது என்பது பூர்ணாயுள். அதனால்தான் அறுபது வயது ஆனவுடனேயே, சஷ்டியப்தபூர்த்தி நடக்கிறது. பாதி கடந்திருக்கிறோம் என்று அர்த்தம்.

இந்த நூற்றியிருபது ஆண்டு காலத்தில் மனிதனுடைய நூற்றுப்பதினாறு வயது வரை கர்மானுஷ்டானத்துக்கு. மீதி நான்கு வயது இருக்கிறதே அது சின்னக் குழந்தையாக இளமையிலே போய் விடுகிறது. மற்ற ஆண்டுகள் முழுதும் கர்மானுஷ்டானத்துக்குத்தான்.

மனிதனுடைய ஆயுளை நிர்ணயித்த மாதிரி, பிரும்மாவினுடைய ஆயுளையும் சொல்கிறது வேதம்!

அந்த சதுர்முக பிரும்மா, தாம் இருக்கிற இடத்தைத் தெரிந்துகொள்வதற்கு, 'யுக கோடி சஹஸ்ராணி' ஆயிற்று என்கிறது!

அப்படியென்றால் என்ன...?

பகவானுடைய நாபியிலிருந்து தோன்றிய அந்த பிரும்மா, ஆயிரம் கோடி யுகங்கள் தபஸ் பண்ணி, 'தான் எங்கே இருக்கிறோம்? தனக்கு ஆதாரம் எது? தன்னைத் தாங்குபவன் யார்?' என்றெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறார். அவ்வளவு நாள் ஆயிற்றாம் பிரும்மாவுக்கு, இதைத் தெரிந்துகொள்ள!

பிரும்மாவுக்கே அவ்வளவு நாள் ஆயிற்று என்றால், நம்மைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

ஆயிரம் கோடி யுகங்கள் தபஸ் பண்ணி, தியானம் பண்ணி, அந்த நாபிக் கமலம், அந்த கொப்பூழ், அந்த உதர பந்தம்– அதிலிருந்து தாம் தோன்றியதைக் கண்டுபிடித்தார் பிரும்மா.

**புன: த்ரைலோக்ய ராஜ்யத்வம்** - பகவானிடத்திலிருந்து உலக சிருஷ்டியை நடத்தும்படியான அதிகாரத்தைப் பெற்றார் பிரும்மா. ஆகையினால், பிரும்மாவுக்கும் பிரும்மாவிலிருந்து ஆரம்பித்து, ஆபிரும்ம ஸ்தம்ப பர்யந்தம் என்று சொல்லுவார்கள் - அதாவது பிரும்மாவிலிருந்து ஆரம்பித்து, சாமானிய கோரைப் புற்கள் - சின்ன கிருமி கிரீடாதிகள், எறும்புகள் - இவை பர்யந்தம்

**நான்கு தலைமுறைக்கு சேமித்து வைத்திருந்தும் சிக்கனமாகவே செலவு செய்கிறாய் சிரிப்பை.**

ஜீவன்களானதனாலே, இவை யாவும் விசேஷமாக காலத்தினால் தரிக்கப்படுகிறது (காப்பாற்றப்படுகிறது). பகவான் எல்லாவற்றையும் இந்த காலத்தைக் கொண்டு நிர்ணயிக்கிறான்.

பதினைந்து தடவை நாம் கண் இமைகளை மூடித் திறந்தால், அதற்கொரு 'காஷ்டை' என்று பெயர். அதே மாதிரி முப்பது காஷ்டைகள் கொண்டது ஒரு கலை.

***த்ரும்சத் கலா முகூர்த்தஸ்யாது*** - முப்பது கலைகள் கொண்டது ஒரு முகூர்த்தம். அந்த மாதிரி முப்பது முகூர்த்தங்கள் கொண்டது ஒரு அஹோராத்ரம். - ராத்திரி - பகல். அந்த மாதிரி ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்; பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷம். முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். ஆறு மாதங்கள் ஓர் அயனம். இரண்டு அயனங்கள் ஒரு ஸம்வத்ஸரம். (வருடம்)

அஸ்வமேத யக்ஞமானது ஆரம்பிக்கிறபோதே காலத்தைச் சொல்கிறது. பன்னிரண்டு மாதங்கள் ஒரு ஸம்வத்ஸரம். நம்முடைய ஸம்வத்ஸரமானது, இரண்டு அயனங்கள் சேர்ந்தது- தக்ஷிண அயனம் (தக்ஷிணாயனம்) உத்தர அயனம் (உத்தராயணம்).

தக்ஷிணாயனம் என்பது தேவதைகளுக்கெல்லாம் இரவு. உத்தராயணம் அவர்களுக்குப் பகல். நமக்கு இரண்டு அயனங்கள் சேர்ந்தால் ஒரு வருடம். தேவர்களுக்கோ நம்முடைய இந்த ஒரு வருட காலமானது, ஒரு நாள்!

அந்த மாதிரி ஏழு நாட்கள் சேர்ந்தால் தேவதைகளுக்கு ஒரு வாரம்! அந்த மாதிரி பதினைந்து நாட்கள் ஒரு பக்ஷம். முப்பது நாட்கள் அவர்களுக்கு ஒரு



மாதம்...

நம்முடைய கணக்கிலே, இந்த மாதிரி நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருஷங்கள் உருண்டோடினால், கலியுகம் முடியும்.

கலியுகத்துக்கு நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருஷங்கள் என்று, பராசர மஹரிஷி அழகாக எடுத்துக்காட்டுகிறார்; விஷ்ணு புராணத்திலே.

துவாபர யுகத்துக்கு எவ்வளவு என்றால், நாலு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்தோடு, இன்னொரு நாலு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் சேர்க்க வேண்டும். எட்டு லட்சத்து அறுபத்திநாலாயிரம் வருஷம், துவாபர யுகம்.

அதற்கு முன்னே இருந்த திரேதா யுகத்துக்கு எவ்வளவு காலம்...? துவாபர யுகத்துக்கு எட்டு லட்சத்து அறுபத்திநாலாயிரத்தோடு, இன்னொரு நாலு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்தைச் சேர்க்க வேண்டும்! கூட்டினால், பன்னிரண்டு லட்சத்து தொண்ணூற்றாறாயிரம் வருஷம் திரேதா யுகம்.

முதல் யுகம் கிருத யுகம். கிருத யுகத்துக்கு எவ்வளவு காலம் என்றால், திரேதா யுகத்துக் கணக்கோடு, இன்னும் நாலு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் சேர்க்க வேண்டும் - அதாவது பதினேழு லட்சத்து, இருபத்தெட்டாயிரம் வருஷம் கிருத யுகத்துக்கு.

மொத்தம் நான்கு யுகங்களும் - ஒரு சதுர் யுகம் முடிய வேண்டுமானால், நாற்பத்து மூன்று லட்சத்து இருபதாயிரம் வருஷம் உருண்டோட வேண்டும்!

இதை நாம் சொல்லிக்கொண்டே வருகிறபோது கவனிக்கலாம். கலியுகத்தை நெருங்குகிற ஒவ்வொரு யுகத்துக்கும், நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருஷம் கால அளவிலே குறைந்து கொண்டே வருகிறது. காலம் எப்படிக் குறைகிறதோ, தர்மமும் அப்படியே குறைகிறது.

கிருத யுகத்திலே இருக்கிற தர்மம், திரேதா யுகத்தில் இருப்பதில்லை;

திரேதா யுகத்தில் இருக்கிற தர்மம் துவாபர யுகத்தில் இல்லை; இன்னும் குறைகிறது. அதற்கப்புறம் கலியுகத்திலே இன்னும் குறைகிறது!

நான்கு கால்களுடன் நிற்கிற காமதேனு மாதிரி, கிருத யுகம். திரேதா யுகம் வந்தவாறு ஒரு கால் உடைந்தது அதற்கு. மூன்று கால்களுடன் நிற்கிறது அந்தப் பசு. துவாபர யுகத்திலே இன்னொரு கால் உடைந்து போய்விடுகிறது! பாதி தர்மம் - பாதி அதர்மம்! கலியுகத்திலே தர்மம் இல்லாமல் இல்லை. மூன்று கால்கள் உடைந்து, முக்கால் பங்கு போய்விடுகிறது. தர்மம், ஒரு காலில் மட்டும் நின்று கொண்டிருக்கிறது! அதர்மத்தினால் அதிகமாகச் சூழப்பட்டிருக்கிறது. தர்மம் எங்கே என்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது கலியுகம்!

(வளரும்)

# தெம்புக்குப் படிங்க - 15

## தென்கச்சி சுவாமிநாதன்

# டாக்டரைத் தேடியவன்!

ஓர் ஆள் டாக்டரைத் தேடி வந்தான். அவனை உட்கார வைத்து டாக்டர் விசாரித்தார்.

''சொல்லு... உனக்கு என்ன உடம்புக்கு?''

''எனக்கு வயத்தை வலிக்குது டாக்டர்!''

"இதோ பாருப்பா... நான் மனநோய் மருத்துவர்.. வயத்து வலிக்கு நீ பார்க்க வேண்டிய டாக்டர், பக்கத்துக் கட்டடத்துலே இருக்கார்...!"

''அவர் இருக்கட்டும்... எதனாலே எனக்கு வயத்தை வலிக்குதுன்னு கேளுங்க டாக்டர்''

"சரி, எதனால?"

"ஒரு குதிரையை முழுங்கிட்டேன்."

டாக்டர் யோசித்தார்.

"ஓ... அப்படியா? அப்படின்னா நீ இங்கே வரவேண்டிய ஆள்தான்... வா...



வந்து இப்படிப் படு!"

படுக்க வைத்தார். ஓர் ஊசி போட்டு அவனைத் தூங்க வைத்தார்.

பிறகு நிஜமாகவே ஒரு குதிரையைக் கொண்டு வந்து ஆஸ்பத்திரி வாசலில் கட்டி வைத்தார். அவன் தூங்கி விழித்ததும் டாக்டர் அவனருகில் சென்று சொன்னார்...

"அப்பாடா! எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது!"

"என்ன சொல்றீங்க டாக்டர்?"

"நீ நிஜமாவே ஒரு பெரிய குதிரையை முழுங்கியிருந்தே... அதை ஆபரேஷன் பண்ணி வெளியே எடுத்துட்டோம்! நல்லவேளை, உடனடியா என்கிட்டே வந்ததுனால நீயும் பிழைச்சுக்கிட்டே! அந்தக் குதிரையும் பிழைச்சிக்கிட்டுது!"

"அப்படியா டாக்டர்... எங்கே அந்த குதிரை?"

"இதோ... ஆஸ்பத்திரி வாசலில் கட்டி வைத்திருக்கிறேன்... வந்து பார்!"

அவன் மெல்ல எழுந்தான். அடிமேல் அடி வைத்து வாசல் பக்கம் போனான். குதிரையைப் பார்த்தான். அப்புறம் டாக்டர் பக்கம் திரும்பினான்.

டாக்டர் மிகவும் பெருமிதத்தோடு அவனைப் பார்த்தார்.

"எப்படி என் வைத்தியம்?"

"நீங்க பொய் சொல்றீங்க டாக்டர்!"

"என்னப்பா சொல்றே?"

"நான் முழுங்கினது வெள்ளைக் குதிரை! ஆனா நீங்க காட்டறது சிவப்புக் குதிரை!"

டாக்டர் மயங்கி விழுந்தார்.

இந்த உலகில் முட்டாள்களும் ஒரு வகையில் பைத்தியக்காரர்கள் மாதிரிதான். அவர்கள் சொல்வதுதான் சரி என்று கடைசி வரை சாதித்துக் கொண்டிருப்பார்கள்!

பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்ன சொல்கிறார் தெரியுமா?

"உலகில் சங்கடங்களுக்கெல்லாம் காரணம் இதுதான். முட்டாள்களுக்குச் சந்தேகமே தோன்றுவதில்லை. புத்திசாலிக்குத் தொட்டதெல்லாம் சந்தேகம்!"

**(பேசலாம்)**

# காதல் சதுரங்கம்

வசீகரப் பேரழகால் ஈர்க்கப்படவில்லை
ஏதோ ஒரு புதிரான மர்ம
மயக்கத்தில்தான் துவங்கினோம்

தளும்பினேன்
தேடக்கிடைக்காத திரவியம்
கிடைத்ததென தளும்பினேன்

கனவிலும் நனவிலும்
பொழுதிலும் வெளியிலும்
நிறைந்து தளும்பினேன்

மாறுதலே சதமென்று சதிராடும்
மாயமனம் உனது

சிகரெட் உடல்நலத்துக்குத்
தீங்கானதென்று அறிந்தும்
விடமுடியாத நேசிப்பென் நேசம்

விளையாட்டுகளையும்
மாற்றத் தொடங்கினாய்

கேரத்தில் சிவப்புக்காயும் துணைக்காயும்
சேர்ந்து விழுந்த பின்
ஒரு குதூகலம்

தாற்காலிக வெற்றியைக் கூட்டிவரும்
ஜோக்கரைக் கண்டு ஒரு மகிழ்ச்சி

செக் வைத்த பின் விரவிப்பரவும் ஒரு சிரிப்பு

ஆவேச உதைப்புகளில்
கோல்களின் எண்ணிக்கை உயரும்

உற்சாகக் கரவொலியின் கலகலப்பில்
சூழல் மறந்து
விளையாட்டின் திளைப்பில் நீ
மைதானமோ உன்னை விளையாடிக்
கொண்டிருக்கிறது

தாயங்கள் பொய்த்து அரவங்கள் தீண்டி
கீழிறங்கி வரும்போது
மறுபடியும் ஏணியாய் நான்

மோசமான முதலாளிக்குக் கிடைத்த
விசுவாசமான வேலைக்காரனைப்போல்
என் சுயசமாதானங்கள்

அவிழ்த்து விடப்பட்ட மாடு
பாதைகள் மாறாது
தொழுவத்துக்கே திரும்புவதுபோல்
திரும்பத் திரும்ப வந்து
கொண்டேயிருக்கிறேன்

இடை இடையே இளைப்பாற
என்னோடும் ஒரு எட்டுக்கட்ட
கபட விளையாட்டு

லாகிரி ஆட்டங்கள் ஓய்ந்ததும்
விரல் நடுங்கும் தனிமையில்
அப்போதும் நானிருப்பேன்
துணையாய்.



ரவிசுப்ரமணியன்

# கல்யாணியின் காதல்

இரண்டாவது தடவை முத்தையன் ஹைஸ்கூலில் சேர்ந்து படிக்கப் போனான். அதற்கு அவனுக்குத் தூண்டுகோலாயிருந்த மற்றொரு காரணமும் உண்டு. அந்தக் காரணம் கல்யாணிதான்.

கொள்ளிடத்தில் உடைப்பு எடுத்த வருஷத்தில் அவன் ஒரு நாள் வண்டி மாட்டுக்கு நல்ல தார்க்குச்சி சம்பாதிப்பதற்காகப் படுகைக் காட்டில் புகுந்து போய்க் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று, "ஐயோ! ஐயோ!" என்று ஒரு சிறு பெண்ணின் குரல் கேட்கவே, அந்தத் திசையை நோக்கி விரைந்து ஓடினான். பாழடைந்த கோவிலை அடைந்தான். அங்கே ஆச்சரியத்தையும் திகிலையும் ஒருங்கேயளித்த ஒரு காட்சியைக் கண்டான். நாவல் மரத்தின் கிளைகளில் ஒன்றில் கல்யாணி உட்கார்ந்திருந்தாள். அந்தக் கிளைக்கு நேர் கீழே பாழும் கோவில் மண்டபத்தின் மீது ஒரு பெரிய குரங்கு உட்கார்ந்திருந்தது. அது கல்யாணி இருந்த கிளையின் மேல் தாவுவதற்கு யத்தனம் செய்து கொண்டிருந்தது.

முத்தையன் ஒரு பெரிய அதட்டல் போட்டான். குரங்கு அவனைப் பார்த்து 'உர்' என்று பல்லைக் காட்டி உறுமிவிட்டுக் காட்டில் ஓடி மறைந்தது. மரக் கிளையின் மேலிருந்த கல்யாணியைப் பார்த்து மிகவும் கடுமையான குரலில் "இங்கே இறங்கி வா" என்றான் முத்தையன்.

கல்யாணி கலகலவென்று ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, சாவதானமாய் நாவல் பழம் பறிக்கத் தொடங்கினாள். அப்போது அவளுக்குப் பதின்மூன்று, பதினாலு வயது தான் இருக்கும்.


முத்தையன், கோபத்துடன் ரொம்பவும் அதட்டி மிரட்டிய பிறகுதான் கல்யாணி இறங்கி வந்தாள். அவன், அவளுடைய மென்மையான காதைப் பிடித்து இலேசாக திமிண்டிக்கொண்டே, "இனிமேல் இங்கெல்லாம் வராதே! வராதே!" என்றான்.

"இந்தக் காடு என்ன, உங்கள் பாட்டனார் சொத்தா? இங்கே வராதே என்று சொல்ல நீ யார்?" என்றாள் கல்யாணி.

"அதெல்லாம் சரிப்படாது; இனிமேல் இங்கெல்லாம் வருவதில்லையென்று சொன்னால்தான் விடுவேன்" என்று முத்தையன் கூறி, காதை திமிண்டிக் கொண்டேயிருந்தான்.

"அடாடா! ஒரு குரங்கிடமிருந்து தப்பி, இன்னொரு குரங்கிடம் அல்லவா அகப்பட்டுக் கொண்டேன்?" என்றாள் கல்யாணி.

அவ்வளவுதான்; முத்தையன் குபீரென்று சிரித்து விட்டான், கல்யாணியும் சேர்ந்து சிரித்தாள். இரண்டு பேருடைய சிரிப்பும் சேர்ந்து அந்த நிசப்தமான காட்டில் எதிரொலி செய்தன!



# அமரர் கல்கி


இதற்கு முன்னால் முத்தையன் கல்யாணியைப் பார்த்தது உண்டு; பேசியதும் உண்டு. ஆனால் இன்று அவனுடைய தோற்றத்திலும், பேச்சிலும் அவன் என்னமோ புதுமையைக் கண்டான். அவனுடைய இருதயத்தைப் பறிகொடுத்தான்.

நாளுக்கு நாள் அவர்களுடைய சிநேகம் வளர்ந்து வந்தது. கல்யாணியைக் கல்யாணம் செய்து கொண்டாலன்றி வாழ்க்கையில் தனக்கு நிம்மதியிராது என்பதை அவன் உணர்ந்தான். ஆனால் அவள் சொத்துக்காரி; தானோ ஒன்றுமில்லாதவன். இதையெல்லாம் உத்தேசித்து அவளைக் கல்யாணம் செய்து கொள்ளத் தகுதி பெறும் பொருட்டே அவன் மறுபடியும் படிக்கச் சென்றது.

நன்றாய்ப் படித்துப் பெரிய உத்தியோகத்துக்கு வந்துவிட்டால் கல்யாணியைத் தனக்குக் கொடுக்க மறுக்க மாட்டார்களல்லவா! ஆனால் அதிர்ஷ்டம் அவன் பக்கத்தில் இருக்கவில்லை. ஐயோ! அந்த நாசமாய்ப் போன இங்கிலீஷ் பரீட்சையில் நாலு மார்க்கு மட்டும் குறைந்து போகாமலிருந்தால்?

கல்யாணி கோபமாய்த் திரும்பிக் கூடப் பார்க்காமல் சென்ற பிறகு, திரும்பி வந்து அந்தக் கோயில் திண்ணையில் உட்கார்ந்த முத்தையனுக்கு, அதே இடத்தில் முதன் முதலில் தான் கல்யாணியைச் சந்தித்தபோது நடந்ததெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. முகத்தைக் கையால் மறைத்துக் கொண்டு விம்மி அழுதான். அந்த விம்மலுக்கு எதிரொலியைப் போல், காட்டிலே போய்க் கொண்டிருந்த கல்யாணியின் தேம்பும் குரலும் கேட்டது!

**'கள்வனின் காதலி'யிலிருந்து**
**வானதி பதிப்பகம்**



# உள்ளம்

பரமேஸ்வரன் உடனே உணர்ந்து கொண்டார். "என்ன முதலாளி, மறுபடி அந்த ட்ரபிளா?"

"ஆமா, லண்டன் குளிர்ல கூட வேர்த்து ஊத்திச்சு."

போன தடவை சிங்கப்பூர் புறப்பட்ட போது, விமானத்தில் வியர்த்து ஊற்ற, பயணத்தை ரத்து பண்ணி விட்டார். என்னென்னவோ டெஸ்ட் எல்லாம் எடுக்கச் சொன்னார் பாலா. லண்டனுக்குப் போய் வந்ததும் ஏற்பாடுகள் செய்யச் சொல்லியிருந்தார்.

"பழைய ட்ரபிள் அஜீர்ணம்னுதான் தோணுது. ஏரோப்ளேன்ல அகாலமா சாப்ட்டது ஒத்துக்கலை" என்றார் ராகவேந்தர்.

"ஸாரி, உங்களுக்கு மனவருத்தம் தந்துட்டேன்."

"உலகத்தில் எல்லாத்துக்கும் தீர்வு உண்டுன்னு நீங்களே சொல்வீங்களே பரமேஸ்வரன். உயிரை வாங்காதேயும். எனக்கு இருக்கற டென்ஷன் போதும். நீர் இல்லைன்னா, எனக்குக் கை ஒடிஞ்சாப்பல ஆயிரும். மாப்பிள்ளைக் கிறுக்கன் எனக்கு வெடி வெச்சுருவான்."

பரமேஸ்வரன் கண்களில் கண்ணீர் இயல்பாக உதிர்ந்தது. தேம்பலை அடக்க முடியவில்லை.

பளீர் இளமைத் தொடர் | 6

சுஜாதா



"எதுக்கு அழுவறீங்க?"

"என் டாட்டர் போனதும், மஞ்சு தான் என் டாட்டர்னு நெனைச்சுக் கிட்டிருக்கேன் முதலாளி."

"பாரு பரமேஸ்வரன், நீ என்னை விட முடியாது, நான் உன்னை விடமாட்டேன். இன்னொரு விஷயம். எனக்கு உடம்பு சரியில்லைங்கறதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். ஜி.டி.ஆர். இஷ்யு சமயத்தில் எக்கச்சக்கமாயிரும். பாலாகிட்ட மட்டும் சொல்லும்."

மியூசிக் அகாடமியில் உடி ஆலனின் நாடகம் ஒன்று, தமிழர்கள் இங்கிலீஷ் பேசி நடித்து, நடந்து கொண்டிருந்தது. நாடகத்தின் பெயர் death. நிறைய சிரிப்பாக வந்தது. அதில் மேடை நடுவே சவம்போலப் படுத்திருந்த ஒருவரை, எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது...

எட்டரைக்கு நாடகம் முடிந்து வெளியே வரும்போது, 'வணக்கம் லா' என்று குரல் கேட்க, அழகேசன்!

"எப்படி, நான் நல்லா நடிச்சேனா? பாதிலயே தூங்கிட்டேன். தத்ரூபமா இருந்ததுன்னாங்க. 'உறங்குவது போலும் சாக்காடு'ன்னு வள்ளுவர் சொன்னாப்பல, உடி ஆலனே ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கார்... death is one of the few things that can be done as easily lying down."

அழகேசனை அடையாளம் கண்டு கொள்வது கஷ்டமாக இல்லை. நினைவின் அடித்தளத்தில் அந்த முகம், காதில் கடுக்கனில்லாமல் படிந்திருந்தது.

"அழகேசன், நீங்க ஜப்பான் போகலை?"

"இல்லைங்க, கழண்டுக்கிட்டேன்."

"ஏன்?"

"அந்த குரூப்ல சிகரெட் பிடிக்கிற ஒரு பொண்ணுக்கு எம்மேல காதலா யிடுச்சு, கழண்டுக்கிட்டேன்."

"உங்களை இங்க எதிர்பார்க்கவே

# துறந்தவன்

இல்லை."

"எதிர்பார்ப்பு இல்லையேல் ஏமாற்றம் இல்லை - அழகேசனின் பொன்மொழி. எப்படி இருந்துச்சு ட்ராமா? உங்க மெசேஜ் கிடைச்சுச்சு. நான் மறுபடி காபி ஷாப்பில் சர்வர் வேலை செய்றதில் லைன்னு எங்கம்மாகிட்ட சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன். இந்த தியேட்டர் குருப்ல சேர்ந்திருக்கேன். சில்லறை அதிகம் இல்லை. நல்ல தினி. நீங்க எப்படி இருக்கீங்க?'' அவனை நேராகப் பார்த்தான்.

"என்ன பாக்கறீங்க? பார்த்தா டெலுகு ஆக்டர் மாதிரி இருக் கனில்லை? கடுக்கனைக் கழட்ட நேரம் வரலை."

"அழகேசன், உங்களுக் காக நான் எங்க கம்பெனி ஆடிட்டர் பரமேஸ்வரன் மாமாகிட்ட சொல்லி, வேலைக்கு ஏற்பாடு பண்ணிருக்கேன்."

''ரொம்ப நன்றி. உங்க கருணை அப்படியே உடம்பெல்லாம் புல்லரிக் குது."

"கேலி பண்றீங்க."

''இல்லைங்க. நிஜமாவே புல்லு'' என்று சொறிந்து கொண்டான்.

"அழகேச், நைஸ் ஷோ'' என்று ஒரு பெண் கைகுலுக்கிவிட்டுச் சென்றாள்.

"மணி எட்டரை இருக்குமா? ரொம் பப் பசிக்குது. உங்ககிட்ட எத்தனை பணம் இருக்கு?''




"கிரெடிட் கார்ட் இருக்கு. ஏன்?"

"எங்கிட்ட ஒரு லைப்ரரி கார்டு இருக்கு. சைனீஸ் சாப்பிடப் பத்தாது."

"அவ்வளவுதானே? வாங்க."

மஞ்சரிக்கு அருகே கார் வந்து நிற்க, அழகேசன் "மைகாட், இது காரா தேரா!




இந்தச் சின்ன வீட்டில் நான் வரலைங்க."

"பரவால்லை வாங்க."

"இல்லைங்க. இது என்ன காரு?"

"பிஎம் டபுள்யு."

"பிஎம் டபுள்யுவில ஏர்றதில்லைன்னு எங்கம்மாவுக்கு வாக்குக் கொடுத்திருக்கேன். இதுக்கெல்லாம் பழக்கமாயிருச்சுன்னா, அப்புறம் அடுத்த தெருவுக்குப் போறதுக்கு கார் கேக்கும். என்னை செல்லம் கொடுத்துக் கெடுக்காதீங்க."

"ஒரு நாளைக்கு வாக்கு மீறலாம். நான் உங்கம்மாவுக்கு போன் போடறேன்" என்றான்.

"சொர்க்கத்துக்கா?" என்றான்.

சற்று நேரம் அவனை நிதானமாகப் பார்த்தான்.

"அப்படிப் பார்க்காதீங்க. காதலா, அஜீர்ணமான்னு கண்டுபிடிக்க முடியலை."

"ஆட்டோவில் சென்றார்கள். கார் அவர்களைப் பின்தொடர்ந்தது.

அவர்கள் அதே ரெஸ்டாரண்டில் நுழைந்ததும், உடனே கவனிக்கப்பட்டார்கள்.

"இந்த இடமும் உங்கப்பாதா?"

"இருக்கலாம். எனக்குத் தெரியாது."

"வாங்க போகலாம். ரொம்ப கவனிக்கறாங்க."

"முருகன் கடைல போய் இட்லி சாப்பிடலாமா?"

"இப்ப சொல்லுங்க."

அவன் முன் சீட்டில் ஏறிக்கொள்ள, "தி.நகர் வாணிமஹால் எதுத்தாப்பல போங்க தலைவா" என்றான்.

ரொம்பக் கூட்டமாக இருந்தது. வெளியே நாற்காலி வைத்து உள்ளே பாய்ந்து சென்று, வாழை இலையில் இட்லியுடன் வந்தான்.

"விருதுநகர்ல ஒரு குழிப் பணியாரம் கொடுப்பாங்க பாருங்க. உயிர் வாழ்தலுக்கு அர்த்தம் கெடைக்கும்."

அவனை நிமிர்ந்து பார்த்து, "நீங்க ரொம்ப சாப்பாட்டுப் பிரியரா?"

"எல்லாப் பிரியரும். நான் புத்தகப் பிரியன் சினிமாப் பிரியன், ட்ராமா பிரியன், பியர் பிரியன். உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"மஞ்சரி."

"மஞ்சரிப் பிரியன். மஞ்சரின்னு ஒரு டைஜெஸ்ட் தமிழ்ல உண்டு. மஞ்சரின்னா என்ன அர்த்தம் தெரியுமா?"

"சொல்லுங்க" என்றான்.

"பல மலர்களின் கதம்பம்தான் மஞ்சரி. பல மலர்கள் கொண்ட மாலை. இப்பல்லாம் அர்த்தம் தெரியாம பேர் வெச்சுர்றாங்க. சவிதான்னு பெண் பேர் வைக்கவே கூடாது."

"ஏன்?"

"சவிதான்னா சூரியன். ஆம்பளை பேரு. இன்னிக்கு நாடகத்தில் நடிச்சதே அந்தப் பொண்ணு ஷிவாங்கி. அர்த்தம் என்ன தெரியுமா? சிவனுடைய அங்கம், அதாவது பார்வதி."

"பேர் ஆராய்ச்சி போதுமே."

"போர் அடிக்குதா? த்ரிஷாங்கறதுக்கு அர்த்தம் சொல்லுங்க. எங்கிட்ட இருக்கற பத்து ரூபாயைத் தந்துர்றேன்."

"வச்சுக்கங்க. எதுக்காக 'டெத்'னு நாடகம் போட்டீங்க?"

"உடி ஆலன் பத்தி கேள்விப்பட்டிருப்பீங்களே?"

"தெரியும், தன்னோட வளர்ப்புப் பெண்ணை..."

"அந்தாள் செஞ்ச நல்லது எதுவும் ஞாபகம் இருக்காதே."

"இருந்தா சொல்லுங்க."

" 'I don't want to achieve immortality through my work. I want to achieve immortality by living forever'னு சொன்னாரே... என்ன ஒரு அலட்சியம், நகைச்சுவை. எப்பவாவது யோசிச்சுப் பாருங்க."

பரமேஸ்வரன் பாலாவை கிளீவ்லண்டில் ஆப்ரேஷனுக்கு ஸ்க்ரபிங் இடைவேளையில் பிடித்துவிட்டார்.

"டாக்டர், மாமனார் லண்டன்ல வால் டார்ஃப்ல தங்கியிருக்கார். மறுபடி முன்ன மாதிரி வேர்த்து விட்டதுன்னு சொல்றார். எனக்குக் கவலையா இருக்கு. அவருடைய ரோமிங் நம்பர் கொடுக்கறேன். நீங்க பேசிட்டீங்கனா நல்லது."

பாலா உடனே செயல்பட்டார். லண்டனில் 'கைஸ்' ஆஸ்பத்திரியில் அவரிடம் பயின்ற இளம் டாக்டர் நரேஷ், சந்திராவுக்கு போன் செய்து, இந்த இண்டர்நெட் வைட் பேண்ட் யுகத்தில், ஒரு மணி நேரத்துக்குள் அவருக்கு ஓட்டல் அறையில் போர்ட்டபிள் இ.சி.ஜி எடுக்கப்பட்டு, எக்கோ, எக்ஸ்ரே எல்லாம் எடுக்கப்பட்டு, "உடனே அவருக்கு ஒரு ஆன்ஜியோகிராம் எடுக்க வேண்டும், தேவைப்பட்டால் உடனே பைபாஸ் செய்ய வேண்டும்" என்றார்கள்.

ராகவேந்தர் பக்கத்தில் யாரும் இல்லாமல், வேற்று தேசத்தில் அந்தச் சிகிச்சையை வலுவாக மறுத்துவிட்டார். அதனால் பாலா அவரை அடுத்த பிளேனில் ஊருக்குத் திரும்பிவிடச் சொன்னார். தாம் உடனே புறப்பட்டு வருவதாகச் சொன்னார். பரமேஸ்வரன் மறுபடி ஃபோன் பண்ணும்போது, "ஐயர், அவருடைய ஹார்ட் கால்பாகம்தான் வேலை செய்யுது. திறமையுள்ள சர்ஜன்தான் கையை வைப்பார். ஆர்ட்டரியெல்லாம் எண்பது, தொண்ணூறு சதவிகிதம் அடைச்சுக் கிடக்கு. அவர் அடுத்த பிளேனில் புறப்பட்டு வரார். நீங்க நெப்ட்யூன் ஆஸ்பத்திரிக்கே நேர அழைச்சுட்டுப் போயிருங்க. அங்க இருக்க சீஃப் சர்ஜன் கூட கான்ஃபரன்ஸ் கால் போட்டுப் பேசிடறேன்" ராகவேந்தர் புறப்பட்ட மூன்றாவது தினமே திரும்பி வரவேண்டியதாயிற்று. விமான நிலையத்தில், அவரை வீல்சேரில் அரை மயக்க நிலையில் அழைத்துச் செல்வதை ஒரு நிருபர் பார்த்து பரமேஸ்வரனிடம் "இவர் தொழிலதிபர் ராகவேந்தர் தானே?" என்று கேட்க,

"இல்லை அவர் அண்ணன்" என்றார்.

"அவருக்கு அண்ணன் கிடையாதே."

"அப்படின்னு நீங்க நினைச்சுக்கிட்டிருக்கீங்க." அந்த நிருபர் அந்த செய்தியை விடப் போவதில்லை.


நாகரத்தினத்துக்கு போன் செய்தார்.

(தொடரும்)



மலர்க் கண்காட்சியில்
உன்னைத்
தேடித் தேடிப் பார்த்துவிட்டு
காணாமல் திரும்பிவிட்டேன்.
அத்தனை பூக்களுக்கிடையில்
அடையாளமே
தெரியவில்லை நீ!

**கோ**டம்பாக்கத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கும் 'காதல்' பற்றி கலாய்க்க, அதில் எக்ஸ்பர்ட்டுகளான விஜய ராஜேந்தர் - சிம்பு மற்றும் தனுஷ் - செல்வராகவன் குரூப்பை ஒன்றிணைத்து கற்பனைத்



# காதல்... கதம் கதம்..!

தேரோட்டினோம்... ரூமுக்குள் நுழைந்ததுமே தனுஷ் டிஸ்கஷனை ஆரம்பித்து விட்டார்.

**தனுஷ்** : சார், ஸ்ட்ரைட்டா மேட்டருக்கு வரேன். காதலைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?

**விஜய ராஜேந்தர்** : காதல்... காதல்... அது... அது ஒரு உணர்வு பூர்வமான... (மெலிதாக அழ ஆரம்பிக்கிறார்)

**தனுஷ்** : நான் தெரியாம கேட்டுட்டேன் சார். நீங்க ஏன் இதுக்குப் போய் அழறீங்க?

**விஜய ராஜேந்தர்** : காதல் ஒரு அனுபவம். அது... (கண்கள் கலங்குகின்றன) காதல் ஒரு மெலிதான உணர்வு (குலுங்கிக் குலுங்கி அழுகிறார்)

**தனுஷ்** (அலறலுடன்) : ஐயோ சிம்பு! இங்க வந்து பாரு, உங்க டாடி அழுவுறாரு. வந்து சமாதானப்படுத்துப்பா.

**சிம்பு** (ஓடி வருகிறார்) : ஏய், இந்த மாதிரி எமோஷனல் கேள்வி எல்லாம் கேக்காதப்பா. பாவம், அவர் ரொம்ப சென்சிடிவ்.

**செல்வராகவன்** : சார், அழாதீங்க சார். ஏதோ சின்னப் பையன் தெரியாம கேட்டுட்டான். பை தி வே, என்னோட 7ஜி பார்த்தீங்களா?

**விஜய ராஜேந்தர்** (கண்களை துடைத்துவிட்டுக் கொண்டே) : பார்த்தேன். 7ஜி பார்த்தேன். 7 டைம்ஸ் பார்த்தேன். ரொம்ப நல்லாயிருக்கு. அந்தப் பொண்ணு... அவ பேரென்ன மைதிலியா?

**செல்வராகவன்** : இல்லை சார் சோனியா அகர்வால்.

**விஜய ராஜேந்தர்** : ஆங்... நல்லா நடிக்கிறாங்க. அதுவும் அந்த கடைசி சீன்ல நான் அப்படியே உடைஞ்சுட்டேன்... (கண்கள் மறுபடியும் கலங்குகின்றன)

**செல்வராகவன்** : ம்.. நானும் சோனியாகிட்ட எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். ரேஷன் கடைல இரண்டு கிலோ மைதா மாவை வாங்கி ப்ளீச்சிங், பேஷியல் எல்லாம் செஞ்சிப் பார்த்தோம். ஆனா அவங்க முகம் மாறவே மாட்

டேங்குது. லவ் சீன்ல கூட மணிபர்ஸ் தொலைஞ்சு போனா மாதிரி ஒரு அப்பாவி லுக் விடறாங்க... சார் சார், நீங்க ஏன் சார் மறுபடியும் அழறீங்க?

**விஜய ராஜேந்தர்** : இல்லப்பா... என்னால கன்ட்ரோல் பண்ண முடியலை *(பாடிக்கொண்டே அழுகிறார்)*. கனா காணும் காலங்கள்... *(மேஜையில் தாளம் போடுகிறார்)* டங்கு டக்கர, டக்கர டக்கர.. *(குலுங்கிக் குமுங்கி அழுகிறார்)* கலைந்தோடும் மேகங்கள்... *(புரண்டு புரண்டு அழுகிறார்)*



**சிம்பு** : டாடி எழுந்திருங்க... அடடா... எல்லாரும் ஏன் இப்படி டாடியை அப்செட் பண்றீங்க?

**தனுஷ்** *(சலிப்புடன்)* : ஆமா, அவரு எதுக்குத்தான் அழலை? டைம் என்ன சார்னு கேட்டாக் கூட 'ஓ'ன்னு அழுவுறாரு. டைம் சொல்றதுல என்ன எமோஷன் வேண்டிக்கிடக்கு?

**சிம்பு** *(அப்பாவை சமாதானப் படுத்திவிட்டுத் தொடர்கிறார்)* : செல்வா சார், நீங்க ஏன் என்னை வச்சு இன்னும் படம் பண்ணலே? ஒரு பியூட்டிஃபுல் லவ் ஸ்டோரி கைவசம் வச்சிருக்கேன். பண்ணலாமா?

**செல்வராகவன்** : ஓ... பண்ணலாமே... ஒரே ஒரு கண்டிஷன். சோனியாதான் ஹீரோயின். ஓ.கே.தானே?

**சிம்பு** : டபுள் ஓகே. ஆனா சோனியா தவிர வேற 34 ஹீரோயின்ஸ் இருப்பாங்க.

**செல்வராகவன்** : என்னது! 34 ஹீரோயின்ஸா? இண்டஸ்ட்ரியிலயே அவ்வளவு பேரு இருக்க மாட்டாங்களே?

**சிம்பு** : டோண்ட் ஒர்ரி. தமிழ்ல இல்லைன்னா, மலையாளம், சீனம், ஆப்கான், நெதர்லாந்து இப்படி எல்லா இடத்திலிருந்தும் அள்ளிக்கிட்டு வந்துடலாம். நான் என்ன சார் செய்ய






றது? கதைப்படி இவங்க தேவைப்பட றாங்களே. அப்புறம் கதாசிரியர் கோச்சிப் பாரு இல்லை?

**தனுஷ்** *(முணுமுணுப்புடன்)* : இதெல் லாம் ரொம்ப ஓவரா இருக்கு.

**செல்வராகவன்** : கதாசிரியர் யாரு?

**சிம்பு** *(புன்முறுவலுடன்)* : நான்தான், வேற யாரு?

**செல்வராகவன்** : ம்... யோசிக்கலாம். அப்ப கேமராமேன், பாடலாசிரியர் எல்லாம் பார்த்துடலாமா?

**சிம்பு** : அவங்க ரெண்டு பேரும் ரெடியா இருக்காங்க.

**செல்வராகவன்** : அப்படியா? யாரு அவங்க?

**சிம்பு** : அடியேன்தான். ஐ டோண்ட் அண்டர்ஸ்டான்ட். எதுக்கு அநாவசியமா ஒரு படத்துக்கு டைரக்டர், கேமராமேன் எல்லாம். நான்தான் இருக்கேனே போதாதா?

**தனுஷ்** : ஆமாமா... சிம்பு இருக்கும் போது லைட்பாய், போஸ்டர் பாய் கூடத் தேவையில்லை. அவனே எல்லாத்தையும் பார்த்துப்பான். *(மனதிற்குள் - தாங்க முடியலை சாமி. கொஞ்சம் விட்டா ஹீரோயினாகூட இவனே நடிப்பான் போலிருக்கு!)*

**செல்வராகவன்** : ஏம்ப்பா, அப்ப டைரக்ஷன் கூட நான் கிடையாதா?

**சிம்பு** : அட... நீங்க இல்லாம காதல் படமா? கட்டாயம் நீங்க ஒரு சீன் டைரக்ட் செய்யறீங்க. *(மனதிற்குள் - ஆனா அந்த ஒரு சீனை நான் அப்புறமா கட் பண்ணிடு வேன்.) (சிரிப்புடன்)* படம் முடிஞ்ச உடனே உங்க பேரைக் கூட டைட்டில்ல சின்னதா தம்மாத்தூண்டு சைட்ல போடுவேன். கவலைப்படாதீங்க.

**செல்வராகவன்** *(புரியாமல்)* : அப்ப எதுக்கு ரெண்டு பேரும் சேர்ந்து படம் பண்ணலாம்னு சொன்னே?

**விஜய ராஜேந்தர்** *(திடீரென்று விழித்துக் கொண்டு)* : ஏய் சிம்பு! நீ உன்னை நம்பு. வாழ்க்கையில் எம்பு. உன்னை எதிர்க்க எவனுக்கு இருக்கு தெம்பு? *(மறுபடியும் போய் படுத்துக் கொள்கிறார்)*

**சிம்பு** : தாங்க்ஸ் டாடி. அப்புறம் செல்வா சார், கேட் வின்ஸ்லெட்டை ஒரே ஒரு குத்துப் பாட்டுக்கு, ஒரே ஒரு ஸ்டெப் மட்டும் ஆடக் கூப்பிட்டிருக்கேன். வரேன்னு சொல்லியிருக்காங்க. இந்த ஸ்டெப் கதைக்கு ரொம்ப முக்கியம். வெரி வெரி இம்பார்ட்டெண்ட்.

**செல்வராகவன்** : எனக்கொண்ணும் புரியலை.

**சிம்பு** : ஒரேயொரு டயலாக் மட்டும் சாம்பிளுக்கு சொல்றேன் கேளுங்க. *(எழுந்து நின்று ஆட்காட்டி விரலையும் கண்டு விரலையும் தனித்தனியே அரை மணி நேரம் சுழட்டுகிறார்)* யார் காதலிக்கிறாங் கன்றது முக்கியமில்லை. எப்படிக் காதலிக் கிறாங்கன்றதும் முக்கியமில்லை. எங்க காத லிக்கிறாங்கன்றதும் முக்கியமில்லை. அவங்க காதலிக்கிறாங்களா இல்லையாங் கறதுகூட முக்கியமில்லை.

**தனுஷ்** : அப்ப எதுதான் முக்கியம்?

**சிம்பு** : ஏதோ சொல்லணும்னு நினைச் சேன்.. மறந்து போச்சு. சரி விடுங்க.

**விஜய ராஜேந்தர்** *(திடீரென்று விழித்துக் கொண்டு)* : ஆமா, இந்த தனுஷ் தம்பி எதுவும் பேசமாட்டேங்குதே?

**தனுஷ்** : நான் இப்ப 'மாமா'வோட அப்ரண்டீஸா இருக்கேன். அதிகம் பேசற தில்லை. *(கண்களை மூடி இரண்டு விரல் களை மடக்கிக் கொள்கிறார்)* கதம்.. கதம்.. ஹரே பாபா கதம்... பாபா ப்ளாக்ஷீப் ஹேவ் யூ எனி வூல்? கதம்... கதம்...


*(செல்வராகவனும் சிம்புவும் அலறி அடித்து ஓட, விஜய ராஜேந்தர் வழக்கப்படி எதற்காகவோ அழத் தொடங்குகிறார்)*

கற்பனை : **மருதன்**

# அருள்வாக்கு

அத்தனை அழகுக்கும் ஆதாரம் ஈச்வரன்தானே? 'ஸௌந்தர்ய லஹரி' என்றே ஆசார்யாள் அம்பாளின் அழகுப் பிரவாஹத்தைச் சொல்கிறார். இதனால்தான் ஸந்தியா வானத்தைப் பார்த்தால் மனஸில் ஒரு தெய்வீகமான இன்பம் உண்டாகிறது. காரணம் கேட்டால் என்ன சொல்வது? புஷ்பத்தைப் பார்த்தால், ஒரு வார்த்தையும் அர்த்தமில்லாமல் குயிலும் கிளியும் கூவுகிறதைக் கேட்டால், சற்றுமுன் சொன்னதுபோல, ஒரு மனுஷ்யனே இப்படி ஒரு வார்த்தையும் அர்த்தமுமில்லாமல் ஒரு ராகத்தை ஆலாபனைப் பண்ணிக் கேட்டால், அது நெஞ்சைத் தொட்டு ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறது. ஆனந்தம் என்றால் சிரிக்கிறது என்று அர்த்தமில்லை. கண்ணிலே ஜலம்கூட வந்தாலும் வந்துவிடும். கண்ணன் குழலோசை என்று நினைத்துக் கொண்டாலே ஒரு உருக்கம் உண்டாகிறது. அழுகையானாலும் உருக்கமானாலும் அதிலே சுத்தமாக, சாந்தமாக, பவித்ரமாக எதுவோ ஒன்று ஆத்மாவைக் கவ்விக் கொள்கிறது. அது ஈச்வராம்சம்; அழகு என்பது அதுதான். ஒரே அடுக்காய் ஹிமாலயத்தில் பனி மூடியிருப்பதைப் படத்தில் பார்த்தால்கூட ஆனந்தம்; நமக்கு உள்ளேயும் இப்படி ஐஸ் மாதிரி ஜிலுஜிலுப்பு ஏற்படுகிறது. தாஜ்மஹாலைப் பூர்ணிமை நிலாவில் பார்க்கணுமென்றே தேசம்விட்டு தேசம் வருகிறான் - அழகுக்கு ஆத்மானந்தத்தை உண்டு பண்ணும் சக்தி இருப்பதால்தான்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**



அந்த நாள் ஞாபகம் | 15

ஏவி.எம். சரவணன்

# ரோஜா மலரே

ஏ.ஸி. திருலோகசந்தருக்கு ஒரு நல்ல வாய்ப்புத் தர வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருந்தோம். அப்பச்சியும் அதற்குத் துணையாக இருந்தார். 'வீரத்திருமகன்'! படம்தான் எங்களுக்காக திருலோக் செய்த முதல் படம்.

ஆனந்தன், சச்சு நடித்த அந்தப் படத்தின் பாடல்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. கண்ணதாசன், எம்.எஸ். விஸ்வநாதன் காம்பினேஷனில் எங்களுக்குக் கிடைத்த இன்னுமொரு 'ஹிட்' அது.

ஆரூர்தாஸின் அருமையான வசனங்களும் வீரத்திருமகனுக்குப் பெரிய ப்ளஸ் பாயிண்டாக அமைந்தன.

ஏவி.எம். காம்பவுண்டிலிருந்து வெளியான முதல் 'ஸ்டண்ட் பிக்சர்' வீரத்திருமகன்தான் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு தகவல். அதற்கு முன்பு நாங்கள் எடுத்த படங்கள் எல்லாம், ஃபேமிலி டிராமாக்களாகவே அமைந்திருந்தன. ஏவி.எம். பேனரில் வெளியாகும் படங்கள் என்றால், அவை குடும்பப் பாங்கான கதைகளைக் கொண்டவையாகத்தான் இருக்கும் என்ற எண்ணம், ரசிகர்களிடையே அந்தக் காலத்தில் ஆழமாகப் பரவியிருந்தது.

எனவே அந்த எண்ணத்தை மாற்ற விரும்பாமல், அதே சமயம் ஆக்ஷன் பிக்சர் ஒன்று தயாரிக்க வேண்டும் என்று முடிவெடுத்தபோது, அதற்காக முருகன் பிரதர்ஸ் என்ற புதிய தயாரிப்பு நிறுவனம் ஒன்றை நாங்கள் உருவாக்கினோம். எங்களில் மூத்த சகோதரரின் பெயர் முருகன் என்பதால் அவர் பெயரையே வைத்தோம். முருகன் பிரதர்ஸ் பேனரில் ஏவி.எம். வளாகத்திலிருந்து வெளியிடப்பட்ட முதல் படம் 'வீரத் திருமகன்'.

அதில் 'ரோஜா மலரே ராஜகுமாரி' என்கிற பாடல் அப்போது மிகவும் பிரபலமான 'ஹிட்' ஸாங். எனவே நாங்கள்





• 'வீரத்திருமகன்' ஆனந்தன், சச்சு.

ஹொரேஷியஸ் ரீடரும்.. நானும்!



# திரையுலக நினைவுகள்

# ராஜகுமாரி..!

'வீரத்திருமகன்' பட விளம்பரத்துக்கு புதுமையாக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பி, ஆனந்த விகடன் எஸ்.பாலசுப்பிரமணியம் அவர்களை அணுகினோம். அவர் விகடனில் விளம்பரம் செய்வதற்கான பொதுவான விதிமுறைகளை விவரித்துக் கூறினார். புதுமையாக என்ன செய்யலாம் என்று ஆலோசித்தபோது 'நான்கு அரைப் பக்க விளம்பரங்களை ஒரே இதழில் வெளியிடலாம்' என்று அவர் யோசனை சொல்ல, அப்படியே செய்தோம்.

அதே போல குமுதத்தில் (செக்) காசோலை வடிவத்தில் ஆறு விளம்பரங்களும், தவிர நான்கு கால் பக்க விளம்பரங்களையும் ஒரே சமயத்தில் வெளியிட்டோம்.

அந்தப் படத்துக்கான விளம்பரங்களில் 'வீரத் திருமகன்' என்ற பெயரை சிறிய எழுத்துகளில் போட்டு, அதற்கு மேலே 'ரோஜா மலரே ராஜகுமாரி' என்ற வார்த்தைகளைப் பெரிய எழுத்துகளில் போட்டோம். முதன்முறையாக ஸூம் லென்ஸைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட படம் என்பது, வீரத்திருமகனுக்கு உள்ள தனிச் சிறப்பு.

முதன் முறையாக வீரத்திருமகன் படத்துக்கு, சென்னை மவுண்ட் ரோடில் நியான் ஸைன் விளம்பரம் அமைத்தோம். தமிழ்நாட்டில் ஒரு திரைப்படத்துக்காக நியான் ஸைன் போட்டது



* 'வீரத்திருமகன்' படப்பிடிப்பில்...



அதுவே முதல் முறை.

அருமையான பாடல்கள், ஆக்ஷன் பிக்சர் என்று சில சிறப்பம்சங்கள் இருந்த போதும், படம் பெரிய வெற்றியடையவில்லை. சுமாராகத்தான் போனது. ஆனால் அந்தப் படத்தின் மூலம் ஏ.வி.திருலோகசந்தர் என்கிற ஓர் அற்புதமான நண்பர் எனக்குக் கிடைத்தார். அவரைப் பல விதங்களில் எனக்குப் பிடிக்கும். அவரது ஆலோசனைகளை நான் அடிக்கடி கேட்டுப் பெறும் அளவுக்கு, என் நெருங்கிய நண்பராகிவிட்டார் திருலோக். 'வொரேஷியஸ் ரீடர்' என்பார்களே, அப்படியொரு தீவிர வாசகர் திருலோக். பல புத்தகங்களைப் படிப்பார். நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்திருப்பார்.

எனக்குப் புத்தகம் படிக்கும் வழக்கமே கிடையாது. எனவே அவரிடம் பேசிப் பேசியே நான் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். புதிதாக எதையாவது படித்தால் உடனே எனக்குப் போன் செய்து என்னுடன் அந்தப் புத்தகம் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்வார். 'ஃப்ரெண்ட், பிலாஸஃபர் அண்ட் கைடு' என்பார்களே, அப்படி அவர் எனக்கு.

'ஃபிலிம் புரொட்யூஸர்ஸ் கில்டு' அமைப்புக்கு என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது, எனக்கு அதில் அவ்வளவாக ஆர்வம் இல்லை.

"இல்லை. நீங்கள் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளத்தான் வேணும். இப்படி உங்களைத் தேடி வருபவைகளையெல்லாம் நீங்கள் ஒதுக்கிவிட்டு வந்தால், பின்னால் நீங்கள் தேடிப் போகும்போது எதுவும் கிடைக்காது" என்று என்னை கன்வின்ஸ் செய்து பதவியை ஏற்கச் செய்தவர் திருலோக்தான்.

நான் பதவி ஏற்றுக்கொண்ட பின் வாசித்த உரையை எழுதித் தந்தவரும் அவரே.

பின்னாளில் ஆர். ராமகிருஷ்ணன் சென்னை மாநகர ஷெரீஃபாக இருந்த போது, என்னை அண்டர் ஷெரீஃபாக நியமித்தபோதும், அதன் பின்னர் சென்னை மாநகர ஷெரீஃபாக எம்.ஜி.ஆர். என்னை நியமித்தபோதும், எனக்குத் தார்மிக ஆதரவு தந்து, என் உணர்வுகளுக்குப் பலம் கூட்டியவரும் திருலோக்சந்தர் அவர்களே.

'வீரத்திருமகன்' தனிப்பட்ட முறையில் எனக்குத் தந்த மாபெரும் பரிசு திருலோக்.

ஓர் அருமையான கதை எங்களுக்குக் கிடைத்தது. டாக்டர் நிகார் நிரஞ்சன் குப்தா எழுதிய 'மாயா ம்ருகா' என்ற வங்காள மொழிக் கதை. முதலில் அது அந்த மொழியில் நாவலாக வெளிவந்து மிகவும் புகழ் பெற்றது. பிறகு அந்தக் கதை நாடகமாக மேடையேற்றப்பட்டு, அதிலும் பெருவெற்றி கண்டது. வங்காளத்தில் நல்ல நாடகங்கள் பெறுகின்ற வரவேற்பு நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தும். ஒரே நாடகம் மாதக் கணக்கில் தினந்தோறும் ஒரே அரங்கில் நடைபெறுவதும், தினமும் ரசிகர் கூட்டம் அங்கே நிரம்பி வழிவதும் கொல்கத்தாவில் சர்வ சாதாரணம். தொழில் முறை நடிகர்களின் இத்தகைய நாடகங்கள் பெறுகின்ற வெற்றி, நாடகக் கலையை அந்த

* அசோகன், திருலோகசந்தர், ஆனந்தன்



மாநிலத்தில் தூண் போலத் தாங்கி நிற்கிறது. மேடையில் 'மாயா ம்ருகா' பெற்ற வெற்றியை அது திரைப் படமானபோது பெறவில்லை. இருந்தாலும் அந்தக் கதை அப்பச்சிக்குப் பிடித்திருந்ததால் அதை 'அன்னை' என்ற பெயரில் தமிழில் எடுத்தோம்.



* 'அன்னை' நூறாவது நாள் விழாவில்... (இடமிருந்து வலமாக) டைரக்டர் கிருஷ்ணன், விஜயகுமாரி, பி.சுசீலா, பானுமதி, எல்.ஆர்.ஈஸ்வரி, எஸ்.எஸ்.வாசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், டைரக்டர் பஞ்சு...

பானுமதி, ரங்காராவ், சந்திரபாபு, சௌகார் ஜானகி, சச்சு என்று நீண்டதோர் நட்சத்திரப் பட்டியல். படம் முழுக்க முழுக்க ஹீரோயின் ஓரியண்டட்டாக இருந்ததால், ஹரிநாத் என்ற - அவ்வளவாக அறிமுகமாகாத ஓர் இளைஞரைக் கதாநாயகனாக அப்பச்சி போட்டார்.

இந்தப் படத்தின் டிஸ்கஷன் நடந்தபோது, எல்லாவற்றிலும் மிகத் துல்லியமாக அப்பச்சி கவனம் செலுத்தினார்.

செட் உண்மையில் எப்படியிருக்குமோ அப்படியே அதை எட்டு அடி நீளம், ஐந்து அடி அகலத்தில் பிளைவுட்டில் மினியேச்சர் மாடலாகச் செய்து, எதிரில் வைத்துக் கொண்டு 'இந்த கேரக்டர் இந்த அறையிலிருந்து அந்த அறைக்கு இந்த வழியாகப் போகிறது' என்கிற மாதிரி டிஸ்கஸ் செய்தார். எனவே படப்பிடிப்பின்போது குழப்பமில்லாமல் இருந்தது.

கலைஞர்கள் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு அந்தப் படத்தில் நடித்தார்கள்.

பானுமதி கொஞ்சம் ஓவர் ஆக்ட் பண்ணியிருந்தால், அவருடையது வேம்ப் காரக்டர் போல ஆகிவிட்டிருக்கும். சற்றும் பிசகாமல் மிகவும் கவனமாகவும், அற்புதமாகவும் அவர் நடித்துக் கொடுத்தார். கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் வசனங்கள் மிகவும் கூர்மையாக, அனைவரும் ரசிக்கும்படி அமைந்திருந்தன.

பாட்டுகள் அனைத்தும் ஹிட்டாயின. 'அன்னை என்பவள் நீதானா..?' 'பூவாகி காயாகி கனிந்த மரம் ஒன்று...' 'அழகிய மிதிலை நகரினிலே' 'ஓ.. பக்.. பக்... பக்.. மாடப்புறா' என்று 'அன்னை' படத்தின் பாடல்களை அந்த நாளில் முணுமுணுக்காதவர்களே இல்லை. கண்ணதாசன் வரிகளில் சுதர்ஸனம் மாஸ்டர் பிரமாதமாக இசையமைத்திருந்தார். சந்திரபாபு பாடிய 'புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை' பாடல் அடைந்த வெற்றி பற்றி சொல்லவே வேண்டாம்.

படம் நூறு நாட்கள் ஓடியது. வெற்றி விழா கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டோம்.

ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் பொதுவாக இதுபோன்ற திரைப்பட வெற்றி விழாக்களைத் தானும் கொண்டாடியதில்லை. மற்றவர்கள் நடத்தும் விழாக்களுக்குச் செல்லும் வழக்கமும் அவருக்கு இருந்ததில்லை.

ஆனாலும் 'அன்னை' நூறாவது நாள் விழாவிற்கு அவரை அழைக்க வேண்டும் என்று அப்பச்சி விரும்பினார்.

அப்பச்சி அவரோடு தொலைபேசியில் பேசினார். மிகவும் பெருந்தன்மையுடன் விழாவுக்கு வர ஒப்புக்கொண்டவர், ஒரு கண்டிஷன் போட்டார்.

(தொடரும்)

காதல் பற்றி பத்து பகீர் கேள்விகள்! அதற்கு அரை நொடி கூட யோசிக்காமல் பதில் சொன்ன துணிச்சல் பெண்மணிகள் இருவர். ஒருவர் கடந்த தலைமுறை கதாநாயகி லதா. மற்றவர் இளைய தலைமுறை ஸ்ரீதேவி. கேள்விகள் ஒன்றுதான். பதில்கள்...?


# காதல் ஒன்று...
## கதாநாயகி இரண்டு!



**காதல் பிடிக்குமா?**

**லதா:** பிடிக்கும். அஃறிணைக் காதலில் அன்றில் பறவைகளைப் போல, உயர்திணை மனிதனின் காதலும் இருந்தால் ரொம்பப் பிடிக்கும்.

**ஸ்ரீதேவி:** ரொம்பப் பிடிக்கும். மனிதன் உட்பட எந்த ஜீவராசியாக இருந்தாலும் காதலைத் தாண்டித்தான் வந்தாக வேண்டும். எல்லா உயிர்களுக்கும் பொதுவான உணர்ச்சிகளில் காதலுக்குத்தான் முதலிடம்.



**காதலுக்கும் - நட்புக்கும் ஆறு வித்தியாசங்கள்?**





**லதா:**

காதல் ஒருவர் மீது மட்டும்தான் இருக்க முடியும். ஆனால் பலருடன் நட்பு பாராட்டலாம்.

2. காதல் எப்போது, எப்படி துளிர்க்கும் என்று சொல்ல முடியாது. பழகிப் பார்த்து நல்ல நட்பைத் தேர்வு செய்ய

முடியும்.

3. காதல் தோல்வியில் முடியக் கூடும். தூய, ஆழமான நட்புக்குத் தோல்வியே கிடையாது.

4. காதலுக்கு ஆண், பெண் ஆகிய இருபால் தேவை. நட்புக்கு





ஒருபால் போதும்.

5. காதலில் பிரிய நேர்ந்து நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சந்திக்க நேர்ந்தால் சங்கடம், வலி. எத்தனை இடைவெளிக்குப் பிறகு சந்தித்தாலும் விட்ட இடத்திலிருந்து புத்துணர்வுடன் தொடர்வதுதான் நட்பு.

6. காதலின் கடைசி நிலை திருமணம். முதிர்ச்சியான நட்புக்குக் கடைசி நிலை தியாகம்.

**ஸ்ரீதேவி:** நான் எதிர்காலத்தில் பதிலளிக்க வேண்டிய கேள்வி. இப்போதைக்கு நட்பு மட்டுமே எனக்கு அதிகம்.

**காதலிப்பது, காதலிக்கப்படுவது எது சிறந்தது?**

**லதா:** எப்போதுமே காதலிக்கப்படுவதுதான் சிறந்தது; பாதுகாப்பானது.

**ஸ்ரீதேவி:** காதலிப்பது, காதலிக்கப்படுவது இரண்டுமே சந்தோஷமானது. இந்த விஷயத்தில் give and take policyயைப் பின்பற்றுவதுதான் சரி. ஒருவர் நூறு பர்செண்ட் அன்பைப் பொழிந்தால், அதற்கு பதிலாக

இருநூறு பர்சென்ட் அன்பை எதிர்பார்க்கிறார் என்று அர்த்தம்.

**திரையுலகினரின் காதல், பெரும்பாலும் தோல்வியில் முடிவது ஏன்?**

**லதா**: திரையுலகினர் காதல்தான் என்றில்லை... பொதுவாக காதலின் மீது நிபந்தனைகளைத் திணிக்கும்போதும், விட்டுக் கொடுக்க மறுக்கும்போதும், EGO (ஈகோ) பிரச்னை வெடிக்கும்போதும் காதல் தோற்று விடுகிறது.

**ஸ்ரீதேவி** : வெளி உலகிலும் நிறையக் காதல்கள் தோற்று விடுகின்றன. சினிமாக்காரர்களுக்கு மட்டும்தான் இதயம் இருக்கிறதா என்ன? சினிமா ஆட்கள் அடிப்படையில் More emotional, more sensitive! உணர்ச்சிகளை சினிமாவில் காட்டுவது போல வாழ்க்கையிலும் மிகைப்படுத்தியே வாழ்ந்துவிட்டார்கள். புகழ் இருப்பதால் இவர்கள் காதலில் தோற்றாலும் எழுதுகிறார்கள்; இன்கம்டாக்ஸ் ரைடு என்றாலும் எழுதுகிறார்கள், Thats all.

**காதல் கடிதம் கொடுத்த, பெறப்பட்ட அனுபவம்?**


**லதா**: யாருக்கும் கொடுத்ததில்லை. ஆனால் பிஸியான கதாநாயகியாக இருந்தபோது எண்ணற்ற காதல் கடிதங்கள் வரும். காதலிக்கச் சொல்லி ஒரு ரசிகர் தொடர்ந்து ஐம்பது ரூபாய் மணியார்டர் அனுப்புவார். நான் வாங்க மறுத்து அனுப்பிக் கொண்டேயிருப்பேன். தயவு செய்து காதல் கடித டார்ச்சர் தர வேண்டாம் என்று பதிலுக்கு அவருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்தேன். என்ன நினைத்தாரோ, என்னை விட்டுவிட்டார். மணியார்டரை வாங்கிக் கொண்டார்.

**ஸ்ரீதேவி**: காதல் கடிதம் கொடுப்பதெல்லாம் Old Fashion! எனக்கு யாரும் கொடுத்ததில்லை. ஆனால் நிறையப்பேர் காதலை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். பள்ளியிறுதியில் காதலைத் தெரிவித்த பலரிடமும் காரணத்தைக் கேட்டேன். எல்லாமே தத்துப் பித்தென்று இருந்ததால், சொன்னவர்களே சிரித்து விட்டார்கள். என்னை யாராவது காதலிக்கிறேன் என்று சொன்னால், முதலில் அப்பாவிடம்தான் அதைச் சொல்வேன். அடுத்து அருண் அண்ணன், அக்காக்களிடமும் சொல்லி விடுவேன். ஒளித்தோ, மறைத்தோ செய்வது காதல் அல்ல.

**காதல் கிசுகிசுவில் அடிபட்ட அனுபவம்?**

**லதா**: இப்போது போல, அப்போது கிசுகிசுக்களுக்கு அதிக முக்கியத்துவம் தர மாட்டார்கள். என்னையும் புரட்சித் தலைவரையும் இணைத்து சில ஆங்கிலப் பத்திரிகைகளில் கிசுகிசுக்கள் வந்தன. அவற்றை நான் பொருட்படுத்தியதே கிடையாது.

**ஸ்ரீதேவி**: முதல் படத்திலேயே சந்தித்து விட்டேன். காதல் வைரஸில் நடித்தபோது, கதிருடன் என்னை இணைத்து கிசுகிசு கிளப்பினார்கள். Gossip is Just Gossip, அவ்வளவுதான். கிசுகிசு எழுதுகிறவர்களையும் தப்பு சொல்ல முடியாது; அதை வாசிக்கிறவர்களையும்



தப்பு சொல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை காசிப் என்பது ஹியூமர். 'சினிமாவுக்கு வந்தால் கட்டாயம் கிசுகிசு எழுதுவார்கள். இந்தக் காதில் வாங்கி, அந்தக் காதில் விட்டு விடு' என்று அம்மாவும், அப்பாவும் டிரைனிங் கொடுத்திருப்பதால் தப்பித்தேன். இதுவே சினிமாவுக்கு முதல் தலைமுறை கதாநாயகி என்றால், எவ்வளவு டிப்ரெஷன் பாருங்கள்!



**நீங்கள் பார்த்து பிரமித்த காதல் ஜோடி?**

**லதா:** சார்லஸ் - டயானா. நான் லண்டனில் வசித்த போது அவர்களை நேரில் சந்தித்திருக்கிறேன். டயானா சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்த ஆசிரியை. சார்லஸ் பிரிட்டன் இளவரசர். கோபுரம் - குடிசை இரண்டும் காதலால் இணைய முடியும் என்பதற்கு இந்த ஜோடி சாட்சியம்.

**ஸ்ரீதேவி:** அப்பாவும் அம்மாவும்! திருமணமாகி இருபத்தேழு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆறு பிள்ளைகள். இந்த நிமிடம் வரை ஒரு துளி அன்பு கூடக் குறையவில்லை. வீட்டில் குடும்ப விழா என்றால் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு ஆடுவார்கள். நாங்களெல்லாம் களைத்து உட்கார்ந்து விடுவோம். அப்படியொரு உற்சாக ஜோடி.

**உங்களைக் கவர்ந்த காதல் கதாநாயகன்?**

**லதா:** காதல் மன்னன் ஜெமினி கணேசன்.

**ஸ்ரீதேவி:** ஷாருக்கான். ஒட்டுமொத்தக் காதலையும் கண்களில் கொட்டி வைத்திருப்பார். ஷாருக் மாதிரி ஒருவரைத்தான் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது.

**இன்றைய தலைமுறையின் காதல் எப்படி?**

**லதா:** இவர்களிடம் காதலுக்கும் நட்புக்கும் பெரிய கன்ஃப்யூஷன் இருக்கிறது. கேர்ள் ஃப்ரெண்டுக்கும், காதலிக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நம் கலாசாரக் காதல் இங்கே வெஸ்டனைஸ் ஆகி வருகிறது.

**ஸ்ரீதேவி:** காதலைச் சொல்வது, கல்யாணம் செய்வது எல்லாவற்றிலுமே வேகம். காதலில் இன்றைய சந்தோஷம் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள். இது சரியல்ல. நாளை என்ன நடக்கப் போகிறது என்று கொஞ்சம் யோசிக்க வேண்டும். எதிர்காலம் பற்றி யோசிக்காமல், நிறையப் பேர் தைரியமாக முடிவு எடுக்கிறார்கள். இப்போது அம்மா- அப்பா சொன்னால் கேட்கிற தலைமுறை அல்ல.

**நீங்கள் தரும் காதல் அட்வைஸ்?**

**லதா:** காதல் மிக அழகானது. அது அன்கண்டிஷனலாக இருக்கும்போது மேலும் அழகாகிறது. எதிர்பார்ப்பு எதுவுமில்லாத காதல் எளிதில் வெற்றி பெறும்.

**ஸ்ரீதேவி:** எனக்கே அட்வைஸ் தேவை. இருந்தாலும் சொல்கிறேன். நமது கனவுகளுக்காக, நம்மைப் பற்றிக் கனவு காணும் அப்பா அம்மாவை அலட்சியப் படுத்திவிடாதீர்கள். அவர்களது அனுமதியோடு காதலியுங்கள். முடியவில்லை என்றால், திருமணம் பற்றி முடிவு எடுக்கும்போது அவர்களோடு உட்கார்ந்து பேசிப் பாருங்கள். பெற்றோர் மீது நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்.

பேட்டி : **ஜெய்**

படங்கள் : **ஸ்ரீஹரி, சங்கர் சத்தியமூர்த்தி**

# அழகி

## டி.ஆர்.சிலம்பரசன்



பேருந்துப் பயணத்திற்காக ஏகத்துக்கும் ஏங்கியிருக்கிறான் குணா. கையிலிருப்பதோ ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள். 'மாநகரப் பேருந்துகள் அத்தனைக்கும் வெள்ளை வண்ணம்தான் பொருத்தமானது! எண்ணற்ற தேவதைகளைச் சுமந்து செல்லும் அவற்றை, அரக, பச்சை வண்ணத்தால் கொச்சைப்படுத்தி விட்டது' என்பதாக விஜய டி.ராஜேந்தர் மொழியில் விமர்சிப்பவன். கடன் அட்டைகளை கரும்புச்சாறு விற்கும் மதுராந்தகம் கிராமத்து மனிதனிடம் கூட விற்றுவிடும் திறமைசாலி. கைநிறையச் சம்பளம், பை நிறைய ஊக்கத்தொகை என படித்த எம்.பி.ஏவுக்கு அர்த்தம் கிடைத்துவிட்ட நிறைவு. "சேலரி இருபதாயிரத்தைத் தாண்டியவுடனேயே ஒரு லக்சுரி அபார்ட்மெண்ட் வாங்க ஹோம்லோன் அப்ளை பண்ணலாம்னு இருக்கேன் மச்சான்'' என்றபோது, "அப்படியே நீ போற வர்றே இடத்துலே, நல்ல அழகான பொண்ணுங்க யாரையாவது சந்திச்சா, லவ் பண்ணி, மேரேஜ் பண்ணிடு மாப்ளே'' என்று உற்சாகப்படுத்தினான் குணாவின் அறை நண்பன் வினோத்.

ஆனால் நண்பனின் வாக்கு இத்தனை சீக்கிரம் பலிக்கும் என்று அவனே நினைக்கவில்லை.

அன்று எப்போதும் போல் காலை ஒன்பது மணிக்கு வண்டியை நகர்த்தியவனுக்கு உற்சாகம் புஸ்ஸென்று வடிந்துவிட்டது. பின்சக்கரம் பஞ்சர். ஒன்பதரை மணிக்கு வடபழனியில் உள்ள தனது அலுவலகத்தில் தினசரி மீட்டிங். ஐந்து நிமிடம் தாமதமாகப் போய் நின்றாலும் "ஒருவழியா வந்துட்டான்ய்யா கடன்காரன்" என்று காதுபட நக்கலடிப்பார்கள். வண்டியை மேன்ஷன் ஸ்டாண்டிலேயே விட்டுவிட்டு, ஓட்டமும் நடையுமாக திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலை பேருந்து நிறுத்தத்துக்கு வந்தபோது, ஜம்மென்று வந்து நின்றது 25G. பின் படியில் மட்டும் நேர்த்திக்கடன் போல பத்துப் பேர் தொங்கிக் கொண்டிருந்தார்கள். "தம்பி 'டை' கட்டிக்கிட்டு படியிலே தொங்கினாலும் பாதியிலே மரணம்தான். மேலே ஏறுங்க'' என்று நடத்துனர் குணாவுக்கு கட்டளையிட்டாலும், இரண்டு படிகளுக்கு மேல் ஏறி வர முடியவில்லை. அத்தனை கூட்டம்.

காலையில் தலைகுளித்த கூந்தல்களின் வாசனை, காலி அலுமினிய மீன் கூடைகளின் வாசனை, டியோட்ரண்ட் வாசனையோடு கலந்து வரும் ஆண்களின் வியர்வை வாசனை என எல்லாம் கலவையாக ஒரு புது அனுபவத்தைத் தர, பேருந்தின் நடுவில் நெருக்கியடித்துக் கொண்டிருந்த பெண்களின் கூட்டத்தை நோக்கி ஒரு நோட்டம் விட்டான் குணா. அந்த கண நேரத்தில் ஒரு மின்னல் வெடுக்கென்று வெட்டி மறைந்தது. பேருந்தின் கூரைக் கம்பியைப் பிடித்துக் கொண்டு ஊசலாடிக் கொண்டிருந்த பெண் கூட்டத்தின் நடுவே, ஒரு சிறகு முளைக்காத தேவதை! நகரும் பேருந்தின் ஜன்னல் வழியே கட்டடங்களைப் பார்த்துக் கொண்டிருந்த அவள், பின்புறப் படிக்கட்டின் பக்கமாய் எதேச்சையாய் திரும்பியபோது, அவன்

முதன் முதலாகப் பார்த்தது அவளது கண்களைத்தான். அவ்வளவுதான், அந்தக் கணமே அவனுக்குள் காதல் ஜனித்தது. கவிதையும்தான். "பலருக்குக் கன்னத்தில் மச்சமென்றால், உனக்குக் கண்களே மச்சமாய்" என குணா எழுதிய கவிதையைப் படித்துவிட்டு "உனக்கு முத்திப் போச்சி. சீக்கிரம் காதலைச் சொல்லிடு" என்றான் வினோத். "என்னடா இன்னைக்குத்தான் பார்த்தேன். அதுக்குள்ளே எப்படி?" எனத் தயங்கிய குணா, அதன் பிறகு தனது ஹீரோ ஹோண்டாவைத் தொடுவதே இல்லை. "எனதருமைக் காதலி பேருந்தில் பயணிக்கும்போது, எனக்கு மட்டும் பைக்கா" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு, 25G பேருந்துக் கூட்டுக்குள் இவனும் அடைக்கலாங் குருவியாகிவிட்டான்.

ஆறு மாதங்கள் ஓடியே விட்டன... தேவதையின் பெயரும் கூட கௌசல்யா என்பது தெரிந்து விட்டது. ஒவ்வொரு முறையும் வடபழனியிலேயே இறங்கிவிடுவான் குணா. கௌசல்யா அநேகமாய் போரூரில் இறங்குவாள் என்பது அவன் யூகம். பேருந்தின் நடுப்பகுதியிலிருந்து அவள் கொடுத்தனுப்பும் பஸ் பாஸில், திருவல்லிக்கேணி டு போரூர் என்று அச்சிடப் பட்டிருக்கும். ஒரு முறை அதில் ஒட்டப் பட்டிருக்கும் அவளது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை, கூட்ட நெரிசலில் மெல்ல பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து விட்டான். புகைப்படத்தைப் பார்த்த வினோத், "நீ அதிர்ஷ்டக்காரன்டா! அடுத்தவன் கொத்திக்கிட்டுப் போறத்துக்குள்ளே உன் காதலைச் சொல்லிடு" என்று நெருக்கடி தர ஆரம்பித்து விட்டான்.



**அ**ன்று பேருந்திலும் எதிர்பாராத நெருக்கடி. அப்போது தான் நிகழ்ந்தது அந்த மேஜிக் தருணம். "ஹலோ மிஸ்டர் குணா! என்னோட பஸ் பாஸைக் கொடுத்து



**பேசாவிட்டால் என்ன...**
**ஒரு மிஸ்டு காலாவது கொடு..!**
**எண்களில்**
**உன்னைப்**
**பார்த்துக் கொண்டிருக்கிறேன்!**

ரொம்ப நேரமாகுது. கண்டக்டர்கிட்ட நோட் போட்டு எனக்குக் கொஞ்சம் பாஸ் பண்ணுங்களேன் ப்ளீஸ்" என்று குயில் குரலில் சொன்னது, சந்தேகமில்லாமல் கௌசல்யாதான். பார்வைகளால் பேசிக் கொண்டிருந்த கௌசல்யா, பெயர் சொல்லிக் கூப்பிட்டது குணாவுக்குத் தொண்டையை அடைத்தது. இறங்கும் போது துணிச்சலாய் கையசைத்தவனுக்கு, கௌசல்யாவும் கையசைத்தாள். அதில் ஒருவித ஒத்திசைவு இருந்தது. 'இரவு இத்தனை நீளமான ஒன்றா' என்ற கோபத்தோடு கொட்டக்கொட்ட விழித்திருந்தவன், மறுநாள் காலை ஆறுமணிக்கெல்லாம் குளித்துக் கிளம்பி ரெடியாகி கீழே வந்தான். பாலிதீன் போர்வையை கச்சிதமாக மூடிக்கொண்டு, நீண்ட ஓய்வில் இருந்த பைக் கண்களில் பட்டது. போர்வையை உருவிப் போட்டுவிட்டு பைக்கை உதைத்து ஏறியவன், அடுத்த அரை மணி நேரத்தில் வந்து நின்றது, கௌசல்யா இறங்கும் போரூர் பேருந்து நிறுத்தம். நான்கு மணி நேரத் தவம்.

சரியாக ஒன்பது நாற்பத்தைந்து மணிக்கு 25G வந்து நின்று, தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. குணாவின் இதயம் முன் எப்போதை விடவும் அதிக வேகத்தில் துடிக்கத் தொடங்க... எல்லோரும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக கௌசல்யா. வலது அக்குளில் உலோக ஊன்றுகோலின் பிடிமானத்தோடு, படிக்கட்டுக்களில் மெல்ல இறங்கினாள். வலது கால் பாதம், ஒரு சிறுமியின் பாதம் போல சிறுத்து, காற்றில் உணர்ச்சியற்று ஆடிக் கொண்டிருந்தது. இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை குணா. ஆனால் அவன் முகத்தில் துளிக்கூட அதிர்ச்சியில்லை. அவனை எதிர்பாராமல் அங்கே சந்தித்த கௌசல்யாவின் முகம் சில கணங்கள் வியர்த்து இருண்டு விட்டது. அதைச் சமாளித்து கொண்டு, ''நீங்க எப்படி இங்கே'' என்றாள். இவனோ "உங்களைப் பார்க்கத்தான்" என்றான் சகஜமாக.

"என்னையா?" என்று கேட்டு அவள் அடுத்து வேறு எதையோ கேட்கும் முன்பே, "வாழ்க்கை முழுக்க உங்க கூட வர்றதுன்னு முடிவு செய்துட்டேன். இப்போதைக்குப் பின்னால் உட்காருங்க. உங்களை உங்க ஆபீஸ்லே டிராப் பண்றேன்" என்றான். கௌசல்யா கண்களில் கோடாக கண்ணீர் இறங்கிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு தயக்கத்தோடு நின்று கொண்டிருந்தாள் அவஸ்தையான மௌனம். அந்த மௌனத்தைக் கலைத்தது குணாவின் பாக்கெட்டில் ஒலித்த செல்ஃபோன். எடுத்து ''ஹலோ'' சொன்னவனுக்கு, எதிர்முனையில் கிராமத்திலிருக்கும் அவனது ஒரே தங்கை கல்யாணி உற்சாகக் குரலில் பேசினாள். "அண்ணா! ஒரு சந்தோஷமான செய்தி. மாமா என்னைக் கல்யாணம் கட்டிக்க ஒப்புக்கிட்டார்." இப்போது குணாவின் கண்கள் கலங்கி வழிந்தன.

''என்னோட தங்கை! போலியோ கேர்ள். உங்களை மாதிரியே அழகி'' என்று குணா சொல்ல, நிம்மதியாக அவன் பின்னால் பைக்கில் அமர்ந்தாள் கௌசல்யா.


''வெறும் காதல் மட்டும்தான். கல்யாணம் பண்ணிக்கணும்னு அடம்பிடிக்கக் கூடாது. ஓ.கேன்னா சொல்லு, லெட்டரை வாங்கிக்கறேன்!''
''கடன் தொல்லை அதிகமாயிடுச்சு... அதான் நீங்க 'ஊரைவிட்டு ஓடிப்போகலாம் வா'ன்னதும் குடும்பத்தோடு வந்துட்டேன்...''
வெறும் காதல்!
''கமலாவைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னா விஷம் குடிச்சு நான் உயிரை விட்ருவேன்!''
''கல்யாணம் பண்ணாலும் உனக்கு அதே கதிதான்!''
''அந்த ஆளு ரொம்ப நேரமா நம்மளையே பார்த்துட்டிருக்கான்!''
''பயப்படாதீங்க, அது என் அப்பாதான். 'உன்கிட்ட ஏமாந்தவனை பார்க்கணும்'னார், அதான் கூட்டிட்டு வந்தேன்!''
வாசு

எங்க ஊர் பிள்ளையார்

# குளம் வெட்டிய

நந்தனார் சரித்திரம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவரிடமே கூலியாளாக வேலை பார்த்த விநாயகர் பற்றித் தெரியுமா?


திருநாளைப் போவார் என்றொரு அடியவர். ஆதனூர் என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். நந்தனார் என்பது அவரது இயற்பெயர். சிவ பக்தர். ஆலயங்களுக்கு வார், தோல், நரம்பு, கோரோஜனை முதலியவற்றை வழங்கி இறைத் தொண்டு புரிந்து வந்தார். தமக்குத் தெரிந்த எளிய மொழியில் பாடியும் ஆடியும் சிவனடி நாடி வந்தார்.

நீண்ட காலம் முயற்சி செய்து, ஒரு நாள் திருப்புன்கூர் என்ற சிவத்தலத்தை அடைந்தார். அங்கு நந்தியார் உயரமாக இருந்தபடியால், கருவறைக்குள் இருந்த சிவலிங்கம் தெரியவில்லை.

"தெய்வமே... இந்த மாடு சற்றே விலகாதா? இது மாடு அல்ல; நான் செய்த பாழ்வினை" என்று அழுது தொழுதார்.

சிவபெருமான் தடையை விலகச் செய்து காட்சியளித்தார். நந்தனார் சிவ தரிசனம் செய்தார். மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடினார்.

திருக்கோயிலை வலம் வந்து தொழுதார். அப்போது மேல்திசையில் ஒரு பாழடைந்த குளத்தைக் கண்டு, அதைத் தூர் வார நினைத்தார். குளம் வெட்ட ஆள் வேண்டாமா? பணம் வேண்டாமா? நந்தனாருக்குக் கவலை பிடித்துக் கொண்டது.



ஸ்ரீ மந்திரமூர்த்தி விநாயகர்



ஸ்ரீ சிந்தாமன் கணேஷ்

அவருடைய எண்ணத்தை நிறைவேற்ற விநாயகப் பெருமானே கூலியாளாக வந்தார். வேதங்களும் காணாத திருப்பாதங்கள் மண்ணில் தோய, அழுக்குத் துணி உடுத்தி, மண் வெட்டியும் கூடையுமாக நந்தனாரின் எதிரில் வந்து அடக்கமாக நின்றார். நந்தனார், "நீ ஆரப்பா?" என்றார்.

"நான் உன் ஆளப்பா" என்றார்.

என்ன கருணை! மறைகளுக்கே எட்டாத பரம்பொருள், நந்தனுக்கு ஆள்காரன் என்று கூறி கருணை புரிந்தார்.

நந்தனார் இந்த வார்த்தையைக் கேட்டு, அதிசயம் அடைந்தார். "நானே ஓர் அடிமை; எனக்கும் ஓர் ஆள்காரனா? அப்பா, இந்தக் குளத்தைச் சீர் செய்வாயா?"

"ஆஹா! அப்படி வெட்டினால் என்ன கூலி கிடைக்கும்?"


"ஐந்து படி நெல் தருவேன்"

"போதும்... போதும்... என் புண்ணியம்" என்று சந்தோஷமாக வேலையை ஆரம்பித்தார் விநாயகர்.

நந்தனார் கோயிலை வலம் வருவதற்குள் திருக்குளத்தை விநாயகர் வெட்டி முடித்தே விட்டார்.

"ஆட... ஆரப்பா நீ?" என்று நந்தனார் மறுபடி வியக்க, விநாயகர் தோன்றி, நந்தனாருக்குத் திருக்காட்சியளித்தார்.

அவ்வாறு விநாயகர் வெட்டிய திருக்குளம் இன்றும் திருப்புன்கூரில் காட்சி தருகின்றது. கூவி அழைக்கக் கூட வேண்டாம்; எண்ணினாலே கருணை புரிவார் கணபதி!



* ஆதி விநாயகர்

# குணாநிதி!

### நம்பிக்கை தெய்வம்!

சிதம்பரம் பெரிய கோயிலின் தெற்கு கோபுர வாசல் அருகே பேருந்துகள் வந்து திரும்பும் தெற்கு வீதியில் அமைந்துள்ளது ஆதி விநாயகர் என்கிற நரமுக விநாயகரின் தனிக்கோயில்.

இந்த விநாயகர் அழகிய சிறுவனின் முகத்துடன் காணப்படுகிறார். அழகிய கருண்ட ஜடா முடி. இரு கரங்களில் வலது கையில் மோதகத்துடனும், இடது தொடைமீது விளாம் பழத்தை வைத்து இடது கையால் அழுத்தியபடி, கொழுக் மொழுக்கென்று பெரிய தொந்தியுடன் பத்மாசன முறையில் அமர்ந்தபடி பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு நம்பிக்கையளிக்கும் தெய்வமாய் விளங்குகிறார் இந்த ஆதி விநாயகர்.

- வி. சாந்திதேவி, வண்டலூர்

### ஸ்ரீ மந்திரமூர்த்தி

தேவகோட்டை மாநகரின் ஈசான்ய எல்லையில் அமைந்துள்ள கிராமம் இறகுசேரி

இங்கு ஊருணிக்கரையின், அரச மரத் தடியில் அமர்ந்து அருளாட்சி புரிகிறார் ஸ்ரீ மந்திரமூர்த்தி விநாயகர்.

இவர் சரசுவதி ஸ்தானத்தில் அமர்ந்து கல்விக்கு அதிபதியாக போற்றி வணங்கப் பெறுகிறார். தேவகோட்டை நகர் மற்றும் அனைத்து சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் பலரும், அவர்கள்தம் குழந்தைகளின் கல்வி வளர, ஆண்டுதோறும் சர்க்கரைப் பொங்கல் வைத்து வழிபட்டு வருவது தனிச்சிறப்பானதொன்று.

ஸ்ரீமந்திரமூர்த்தியின் திருவருளுக்குப் பாத்திரமான பல குடும்பத்தினர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவதோடு, அயல் நாடுகளில் செல்வத்துடனும், செல்வாக்குடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தாயகம் வந்து ஸ்ரீமந்திரமூர்த்தி விநாயகரை வணங்கி மகிழ்ந்து செல்கின்றனர்.

- அரு. இராமநாதன், தேவகோட்டை

Geethanjali

சூப்பர் ஆடியோ நிறுவனத்தினர் வழங்கும் 'ஓம் கணபதி ஓம்' ஆன்மிகம் மணக்கும் ஆடியோ சிடி பரிசு பெறுபவர் ஜி.குமார், போபால்.

## கனவில் வந்தவன்!

ஸ்வயம்பூ ஸ்ரீ சிந்தாமன் கணேஷ் கோயில்கள் இந்தியாவில் நான்கு இடங்களில் மட்டுமே இருப்பதாகக் கருதப்படுகிறது. 1. ரான்தாம்போர், ராஜஸ்தான் 2. உஜ்ஜயினி (அவந்திகா) 3. சித்துபூர், குஜராத் 4. ஸிஹோர், மத்தியப் பிரதேசம்.

ஸிஹோர், மத்தியப் பிரதேசத்தின் தலைநகர் போபாலிலிருந்து நாற்பது கிமீ. தொலைவில், இந்தோர் போகும் வழியில் உள்ளது. இதன் பழங்காலப் பெயர் ஸித்திபூர் என்பதாகும். இரண்டாயிரம் வருடங்கள் பழமையானதாகக் கருதப்படும் இங்கிருக்கும் ஸ்ரீ சிந்தாமன் விநாயகரைப் பற்றி உல்லேக் புராணமும் குறிப்பிடுகிறது. தவ முனிவர்கள் இங்கு வழிபட்டு பல ஸித்திகளை அடைந்து முக்தி பெற்றனராம்.

உஜ்ஜயினியில் அவந்திகா மன்னன் விக்கிரமாதித்யன், அக்காலத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் குதிரையிலேறி ரான்தாம்போரில் உள்ள சிந்தாமன் விநாயகரை தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் கனவில் விநாயகர் தோன்றி, 'பார்வதி நதியின் சிவபார்வதி சங்கம ஸ்தலத்தில், நான் உனக்கு தாமரை வடிவில் கிடைப்பேன். அதை அங்கிருந்து எடுத்துச் சென்று எங்கே ஸ்தாபிக்க விரும்புகிறாயோ, அங்கே ரதத்தில் எடுத்துச் சென்று விடிவதற்குள் சேர்த்துவிடு' என்று அருள, அரசனும் அவ்வாறே செய்ய விரைந்தான்.

கிடைத்த தாமரைப் புஷ்பத்தை தன் ரதத்தில் வைத்துக்கொண்டு விக்கிரமாதித்யன் விரையும்போது, ஒரு இடத்தில் அவனது ரதத்தின் சக்கரம் மண்ணில் புதைந்தது. சக்கரத்தை எழுப்ப முயற்சித்தவன் முடியாததால், வேறொரு ரதத்தைக் கொண்டு வரும்படி பணிக்க, மாற்று ரதம் வரும் முன் பறவைகள் ஒலியெழுப்பத் தொடங்கின. உஷத் கால வருகையை உணர்த்த தாமரை மலர், கணேஷ் வடிவில் விக்கிரகமாக மாறியிருந்தது.

சிலையை அங்கிருந்து எடுக்க முயன்ற விக்கிரமாதித்யனது முயற்சிகள் தோல்வியுற்றன. வேறு வழியில்லாமல் அதே நிலையில் விடப்பட்டது. இன்றும் அந்த விக்கிரகம் ஸிஹோர் நகரின் வடமேற்குப் புறப்பகுதியில் நிலத்தில் பாதி புதைந்தது போலவே காணப்படுகிறது.

- ஜி.குமார்,
போபால்

**மத்திய இணையமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமது துறை சார்ந்த பணி களின் பொருட்டு அண்மை யில் ரஷ்யா உள்ளிட்ட நாடு களுக்குச் சுற்றுப்பயணம் செய்திருந்தார். நன்றாக இருந்தவர், நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளப் போகையில் பனிப் புயலில் சிக்கி விபத்து நேரிட, கையில் எலும்பு முறிவுடன் தாயகம் திரும்பி யிருக்கிறார். அந்த திக்...திக்... நிமிடங்களை நம்மிடம் விவரித்தார்.**

# "பனிப் புயலில் மாட்டிக் கொண்டேன்!"



**- ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்**

“கஜகஸ்தான்ல இருக்குற ஹஸ்தானாங்கற ஊருக்கு, ஒரு நிகழ்ச்சிக் காகப் போனோம். நாங்க போன நேரமோ என்னவோ, அங்க அப்படி யொரு குளிர். போதாக்குறைக்கு கடுமையான பனி வேற. டெம்பரேச்சர் $-7^0$ன்னு சொன்னாங்க. அங்க இருந்த லால் பகதூர் சாஸ்திரி சிலைக்கு மாலை போட்டுட்டு புறப்படறதுக்குள்ள பனி மூடி, ரோடே கண்ணுக்குத் தெரியல. சீக்கிரமாக் கிளம்பிடலாம்னு கார்ல ஏறி உட்கார்ந்தா, கார் நகரவே இல்ல... சரி... என்னன்னு பார்க்கலாம்னு கீழே இறங்கினதுதான் தாமதம்... சர்ர்ர்ன்னு வழுக்கிடிச்சு. நான் கால் வச்ச இடத்துல கரெக்டா ஒரு ஐஸ்கட்டி இருந்திருக்கு போல. கீழே கையை ஊன்றும்போது சுளுக்கின மாதிரி இருந்திச்சு. நல்ல வலி.

உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயி, முதலுதவி செய்தாங்க. ரொம்ப அன்பா பார்த்துக்கிட்டாங்க. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததுல ஃபிராக்சர்னு தெரிஞ்சது. கையில கட்டு வேற போட்டாச்சு. எனக்கென்ன பயம்னா, வந்த வேலை ஒழுங்கா முடியாமப் போயிடுமோங்கறதுதான். இருந்தாலும் சமாளிச்சி, எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துக்கிட்டேன். இன்னும் சொல்லப்போனா, கை முறிஞ்ச பிறகுதான் பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாச்சு (சிரிக்கிறார்).

இந்தியர்கள் மேல ரஷ்யர்களுக்கு ரொம்பப் பாசம், மரியாதை... இன்னமும் நேரு பற்றியும், ராஜ்கபூர் பற்றியும் அவங்க பேசிக்கறது மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. விடுதிகளில் ராஜ்கபூர் பாட்டை அவங்க இன்னமும் கேட்கறதைப் பார்த்து அப்படியே எனக்கு புல்லரிச்சுப் போச்சு. அங்குள்ள மக்கள் எங்கள் மீது காட்டிய பரிவும், பாசமும் உண்மையிலேயே என்னை உருக்கிடுச்சு...

என் மனைவிக்கு சாக்லெட்னா ரொம்பப் பிடிக்கும். ஏகப்பட்டது வாங்கிட்டு வந்தேன். தோலில் வரையப்பட்ட இரண்டு ஓவியங்கள் எனக்குப் பிடித்துப்போக, இப்போ அந்த ரெண்டும் என்னோட டெல்லி வீட்ல கம்பீரமா எல்லாரையும் வரவேற்குது” என்றவரிடம், ‘இந்த டூர்ல மறக்க முடியாத விஷயம் எது?’ என்றோம்.

“தோ... இதுதான்” என்றபடி உடைந்த கையைக் காட்டிச் சிரிக்கிறார் இளங்கோவன்.

**- இரா.முத்துக்குமார்**

படம் : **ராஜன்**

# MOM FR

# மாம் ஃப்ரம்

கலகல தொடர் - 5

அனுராதா ரமணன்

ஏழு மாத கர்ப்பவதிக்கே உரிய பூரிப்பும், பொலிவுமாய் இருக்க வேண்டிய ப்ரியம்வதாவின் முகம், சுட்ட கத்திரிக்காய் மாதிரி கறுத்திருந்தது...

"என்ன ஆச்சு?"

– இப்படிக் கேட்க கிஷோருக்கும் பயம்.

மனைவிக்கு 'மூட் அவுட்' ஆகியிருக்கும் சமயத்தில், தப்பித் தவறிக்கூட, மேற்கண்ட கேள்வியை எந்தக் கணவனும் கேட்டுவிடக் கூடாது.

அதை விடவும் அசட்டுத்தனம், பைத்தியக்காரத்தனம் வேறெதுவுமில்லை!

'என்ன ஆச்சு' என்று இவன் கேட்கப் போக, அப்புறம் என்னவெல்லாமோ ஏடாகூடமாக ஆகிவிடும் என்பது அவனது அனுபவ ஞானம்.

ஆனாலும் மனசு கிடந்து அடித்துக் கொண்டது.

இந்த வகுப்புக்கு வரும் வரையில் நன்றாகத்தானே இருந்தாள்...

'என்ன ஆச்.........'

'ஐயோ... ஐயோ... கேட்காதேயேன் முட்டாளே. இதற்கு முன்பு, இப்படிக் கேட்டபோதெல்லாம் பட்ட அவதிகள் போதாதா...'

அவனுக்கு இன்னமும் நன்றாக நினைவிருக்கிறது. திருமணமான அன்று கல்யாணச் சத்திரத்தில் சோபன அறையில் கட்டில் காலைக் கட்டிக் கொண்டு, கலங்கிய கண்களுடன் ப்ரியம்வதா இருந்த கோலம்...

"என்ன ஆச்சு... ப்ரியா... ஏன் அழறே?"

"எங்கம்மாவுக்கு இங்கிலீஷ் தெரியாது... அதுக்காக உங்கம்மா, இத்தனை மோசமாப் பேச வேண்டாம்."

"எங்கம்மாவா... என்ன பேசினாங்க?"

"என்னமோ கிண்டலா இந்தியில சொல்லியிருக்கா. எங்கம்மாவுக்குக் கூட அது புரியலே. எங்கப்பாதான் கேட்டுட்டே வந்துட்டார். 'அதெப்படி, சம்பந்தி அம்மாவை அப்படிப் பேசலாம்'னு அப்பா பொரிஞ்சு தள்ளிட்டார்..."

"இதப் பார் ப்ரியா... உங்கப்பாவுக்கு இந்தி தெரியுமா...?"

"ரஃபி பாட்டெல்லாம் ஜோராப் பாடுவார். அர்த்தம்தான் தெரியாது... ஆனா..."

"ஆனா என்ன ஆனா... உங்கப்பாவுக்கு இந்தி தெரியாது. உங்கம்மாவுக்கு இந்தி, இங்கிலீஷ் ரெண்டுமே தெரியாது. உங்கம்மா, எங்கம்மாவை சாப்பிடக் கூப்பிட்டிருக்காங்க. அதுக்கு எங்கம்மா, கொஞ்ச நேரம் போகட்டும்னு இங்கிலீஷ்லே சொல்லியிருக்காங்க. உங்கம்மாவுக்குப் புரியாததாலே, என் அக்காகிட்ட, 'இவங்களுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கறதுன்னே தெரியலே'ன்னு இந்தியில் சொன்னப்ப, உங்கப்பா வந்திருக்காரு... அவர்தான், எப்ப சண்டைய ஆரம்பிக்கலாம்னு காத்துட்டிருக்காரே..."


"எங்கப்பாவா... உன்னோட அப்பாதான்..."

"ப்ரியா... நாம ரெண்டு பேரும் அமெரிக்காவுல சந்திச்சுப் பேசினப்ப, மொழி ஒரு பெரிய விஷயமாவே இல்லே. ரெண்டு பேரும் இங்கிலீஷ்லேயே பேசிக் காதலிச்சோம். அப்புறம், உன்னோட பழகிப் பழகி நான் தமிழ் கத்துக்கிட்டேன். நீ கொஞ்சம் கொஞ்சம் இந்தி கத்துக்கிட்டே.

M INDIA

# இண்டியா

ஆனா, நம்மைப் பெத்தவங்க பாவம். முதல்லே கொஞ்ச நாளைக்கு இப்படித் தான் இருக்கும். பெரிசுபடுத்தாதே...''



''யாரு... நானா...? உங்கம்மாவும், அக்காக்களும்தான். எனக்கு பயமா இருக்கு கிஷோர்...''

அன்றிரவு முழுக்க அவளைச் சமாதானப்படுத்துவதிலேயே போய்விட்டது.

மறுநாள் காலையில் -

கண்களில் மிளகாயை அரைத்துப் பூசினாற் போல கிஷோர் உட்கார்ந்திருக்க, அவனது பெற்றோர் - பல்பீரும், ராஷ்மியும் முகம் முழுக்கச் சிரிப்பாய் இவனது கட்டிலில் வந்து உட்கார்ந்தனர்.

''என்ன பையா... எப்படியிருந்தது ஃபர்ஸ்ட் நைட்? நேத்து ராத்திரி என்னோட கர்லாக்கட்டைய இந்த ரூம்லே வச்சிட்டேன்... இன்னிக்கு ஒரு நாள் எக்ஸர்ஸைஸ் போயிருமேன்னு... நல்லவேளை...''

ராஷ்மி, அங்கே வைத்திருந்த இனிப்பு வகையறாக்களை முகர்ந்து பார்த்தான்.

''எதுவுமே நல்ல நெய்

இல்லே போல இருக்கு..."

போகிற போக்கில் ஒரு விமர்சனம்... இந்தியில்தான்.

ஆனால், அப்பொழுதுதான் அங்கே வந்த சுகந்தாவுக்கு, இது மட்டும் எப்படியோ புரிந்து தொலைத்து விட்டது.

"எல்லாம் அகர்வால் ஸ்வீட்தான்... ப்ரியா... உங்க மாமியார் என்ன சொல்றார்... நல்ல கடையில வாங்கினதுதான்னு சொல்லேன். பாவம் உங்க அப்பா... பிராட்வேக்குப் போய் வாங்கிண்டு வந்தார். நான் வேணுமானா அப்பாவைக் கூப்பிட்டு சொல்லச் சொல்லட்டுமா....?"



நீ சுற்றுலா சென்ற சமயம்
காதல் கவிதை கேட்டு
கடிதம் எழுதினார்கள்
பதில் எழுதினேன்...
'உடனடியாய் எழுத இயலாது
கவிதை
ஊருக்குப் போயிருக்கிறது.'

"ஐயோ வேணாம்..."

அந்தக் கணத்தில் கட்டிலிலிருந்து ஒரே தாவலாய்த் தாவிய கிஷோர், சுகந்தாவின் இரு கைகளையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள -

"கூப்பிட்டியா?"

– இப்படி, பின்னாலேயே வந்து நின்ற மாமனார் பரமேஸ்வரன், மாப்பிள்ளையிடம் தன்னிரு கரங்களையும் கொடுத்து விட்டு, தவியாய்த் தவித்து, வெட்கத்தில் முகம் சிவக்கும் மனைவியையும், மருமகனையும் மாறி மாறிப் பார்த்தபடி கேட்டார்...

"என்ன ஆச்சு?"

"ஒண்ணுமில்லே..."

இப்படிச் சொன்னதுடன் நில்லாமல், பரமேஸ்வரனின் சுபாவத்தை மாப்பிள்ளை அழைப்பின்போதே அறிந்திருந்ததால், கிஷோர், தன் பிடியிலிருந்த மாமியாரின் கரங்களை எடுத்து, அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"இது ஒரு விதமான மரியாதை அங்கிள். உங்க பெண்ணை, என் மனைவியாக்கிக்கிட்டதுக்கு நான் மாமியார் கைய எடுத்து, இப்படி.... இப்படி.... கண்ணுல ஒத்திக்கணும். எங்க பக்கத்துல வழக்கம்..."

பரமேஸ்வரனிடம் தமிழில் சொல்லி நிமிர்வதற்குள், பல்பீர்சிங் மகனிடம் கேட்டார்...

"என்ன ஆச்சு?"

நல்ல வேளை. அவர் இந்தியில் கேட்டதால், கிஷோரும் இந்தியிலேயே சமாளித்தான்.

"அது ஒண்ணுமில்லே டாட். நேத்து ராத்திரி வரைக்கும் ப்ரியா இவங்க பொண்ணா இருந்தா... ஃபர்ஸ்ட் நைட்டுக்கு அப்புறம் முழுசா என் மனைவி ஆயிடறா இல்லையா...? அதனால, காலையில எழுந்தவுடனே, மாமியார் கைய எடுத்து, கண்ணுல ஒத்திக்கணுமாம். அவங்க சம்பிரதாயமாம்..."

உடனே ராஷ்மி, ப்ரியம்வதாவை அழைத்து, "நானும்தானே என் பையனை உன்கிட்ட முழுசாக் கொடுத்திருக்கேன். நீயும் என் கைய எடுத்து, கண்ணுல ஒத்திக்கோ..." எனக் கட்டளையிட்டாள்.

புரிந்தோ புரியாமலோ, மாமியாரின்

கரத்தைப் பற்றி, கண்களில் ஒற்றிக்கொண்ட ப்ரியம்வதா, தூக்கக் கலக்கம் மாறாமல் புதுக் கணவனிடம் கேட்டாள்.

"என்ன ஆச்சு... நான் எதுக்கு உங்க அம்மா கைய..."

"ஷ்... பேசாம இரு. அப்புறம் சொல்றேன்..."

அன்றைக்கு நடந்தது... போதும்டா சாமி!

அதற்குப் பிறகு, பல சந்தர்ப் பங்கள் வந்தபோதும், அவன் இந்த பிரச்னைக்குரிய கேள்வியைக் கேட்டதேயில்லை!

அவளாகவே காரணத்தைச் சொல்லுவாள் என்பது அவனுக்குத் தெரியும்.

பொறுமையுடன் காத்திருந்தான்.

செர்ரிப் பழ மூக்கை வேகமாய் இரண்டு தரம் உறிஞ்சியபடி ஆரம்பித்தாள் ப்ரியா.

"ஒவ்வொருத்தன் பெண்டாட்டிய நடக்கக்கூட விடாம, கையில தூக்கிட்டு கிளாஸ் ரூமுக்கு வர்றான்..."

"மை காட்... உன்னைத் தூக்கணுமா? சாதாரணமாவே அறுபது கிலோ இருப்பே. இப்ப எழுபது கிலோவாவது..."

"ஷ்... கிண்டல் வேண்டாம். நான் ஸீரியஸா சொல்றேன். ஒரு குழந்தைக்கு அப்பாவாகப் போறோம்ங்கற 'த்ரில்'லே உன்கிட்ட இல்லே!"

ப்ரியம்வதா சீறி வெடித்தாள். விழிகளில் 'கருகரு'வெனக் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

இந்த திடீர்க் குற்றச்சாட்டினால், ஆடிப்போன கிஷோர், தன்னை மறந்து கேட்டு விட்டான்.

"ஏய்...ஏய்... என்ன ஆச்சு?"

"பின்னே என்ன... அந்த ஸ்டீபன் சொல்றான்; 'நம்ம குழந்தைக்கு வேண்டியதை நாமதான் செய்யணும்'னு... நீயானா 'மாமியார் இண்டியாவுலேயிருந்து வர்றா... அவ பார்த்துப்பா'ன்னு 'கூலா' சொல்றே..."

இதைக் கேட்டதும் 'பக்'கெனச் சிரித்தான் கிஷோர்.

"இதுல என்ன தப்பு? நிஜமாவே உங்க அம்மா, உன் டெலிவரிக்காகத் தானே வர்றாங்க...?"

"பின்னே... இதுக்காகத்தானே கூப்பிட்டிருக்கு... மத்த சமயத்துல எல்லாம் அழைச்சு வச்சுக்கத்தான் எனக்கு உரிமையில்லையே, இந்த வீட்டுல..."


இதைச் சொல்லிவிட்டு, 'விக் விக்'கென விக்கி, அழ ஆரம்பித்து விட்டாள் ப்ரியா.

ஒரு நிமிடம் ஒன்றும் புரியாமல், காரை ஓரம் கட்டி நிறுத்தினான் கிஷோர்.


"ப்ரியா... மத்த சமயங்கள்லே உங்கம்மா இங்கே வர வேண்டாம்னு நான் சொன்னேனா...?"

"நீ சொல்லலே. அதே சமயம், 'உங்க அம்மா, அப்பா ரெண்டு பேரையும் கூப்பிடு'ன்னு என்னிக்காவது சொல்லியிருக்கியா?"

"........"



நல்ல காதலெது,
கெட்ட காதலெது?
கேட்கிறாய்..
நீ உன்
தங்கையோடு வருவது
நல்ல காதல்
அண்ணனோடு வருவது
கெட்ட காதல்.



''இப்பக் கூட, 'பிரசவத்துக்கு ஒண்ணும் சும்மா வரணும்ங்கற அவசியமே இல்லே'ங்கறாங்க உன் அம்மா. உன் அப்பாவுக்கு இன்னமும் ஆர்மியில இருக்கற நினைப்பு. 'உங்க அம்மா வேணுமானா வரட்டும்; அப்பா வர வேணாம்'ங்கறார்...''

"அது வந்து... உனக்கே தெரியுமில்லையா ப்ரியா... ரெண்டு பேருக்கும் ஒத்து வராதுன்னு... கொஞ்சம் பொறுத்துக்கோ... உங்க அம்மா இங்கே வர்ற அதிர்ஷ்டம்... எங்க அப்பாவுக்கும் மனசு மாறி, உங்க அப்பாவையும் இங்கே வரவழைப்பார்னு தோணுது..."

"அதெல்லாம் மாட்டார். அவருக்குக் கல் மனசு. அவ்வளவு பெரிய மாடி ஹால்லே, அவர் ஒருத்தரே உட்கார்ந்து கர்லா கட்டை சுத்திட்டு இருக்கணும் அவருக்கு... இத்தனை வயசாகியும், அப்பாகிட்ட எதிர்த்து ஒரு அபிப்பிராயத்தைச் சொல்ல முடியலே உன்னால..."

கிஷோர் தலைகுனிந்தான்.

இந்த ஒரு பழியை மட்டும் அவன் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

மாமனார், மாமியார் இருவருமே வந்து, ப்ரியம்வதாவின் பிரசவம் முடிந்து, குழந்தையுடன் ஆறு மாதங்கள் போலத் தங்கினால்...!

கண்டிப்பாய் ப்ரியம்வதாவின் இந்தப் பிடிவாதமும், எரிச்சலும் குறையும்தான்.

அவனுக்குத் தெரியாதா...

ஓரளவே பழகியிருந்தாலும், ப்ரியம்வதாவின் தாய் - அவனுடைய மாமியார் சுகந்தாவைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்ராயம் இருந்தது...

'பரவாயில்லே... அவங்க மட்டும் வந்தா - இங்கே இருக்கற எல்லாரையும் சமாளிச்சிடுவாங்க...'

அந்த எண்ணத்தில்தான் அவன் இப்படிச் சொன்னான்...

"உங்கம்மா மட்டும் வரட்டும் ப்ரியா... அப்புறம் பாரேன்..."

"ஆமா. அம்மா மட்டும்தான் வரப்போறா... அப்பா இல்லே..."



**தொலைந்த உன் துப்பட்டாவைத்**
**தேடாதே...**
**பத்திரமாய் இருக்கிறது**
**என் புத்தகப் பையில்**
**உன்னை**
**கேட்டுவிட்டுத்தான்**
**தைத்துக்கொள்ளப் போகிறேன்**
**சில கைக்குட்டைகள்!**

ப்ரியா இன்னமும் விசும்பினாள்...

அவன் சிரித்தான்.

''என் செல்லக் குழந்தையே... நீ வேணுமானாப் பார்த்துட்டேயிரு. உங்கம்மா வந்ததுக்குப் பிறகு... இங்கே எல்லாமே தலைகீழா மாறிடும்... நான் இப்பவே ஜோசியம் சொல்றேன்...''

படுபாவி கிஷோர்... ஆனாலும் கரிநாக்கு அவனுக்கு!

(தொடரும்)

# தேவதையைக் கண்டேன்

தனுஷ்தான் என்றில்லை... தோற்றத்துக்குப் பொருத்தமான பாத்திரம் என்றால், திறமையுள்ள எந்த நடிகரும் தூள் கிளப்பி விடுவர். 'காதல் கொண்டேன்' படத்துக்குப் பிறகு கதாபாத்திரமாகத் தன்னை வெளிப் படுத்திக்கொள்ள தனுஷுக்கு சூப்பர் வாய்ப்பு. அதை அவர் தவறவிடவில்லை.

சைக்கிளில் சுற்றித் திரிந்து 'தம்' டீ விற்கும் வறிய இளைஞர். சராசரிக்கும் குறை வான தோற்றத்தோடு தன்னைப் படைத்து விட்டதாகக் கோயில் வளாகத்தில், பிரம்ம தேவன் சிலை முன்பு அடிக்கடி புலம்பித் தீர்க்கும் தன்னம்பிக்கை குறைவான பேர் வழி. இப்படிப்பட்ட ஆள் முன்பு, தேவதை மாதிரி (ஸ்ரீதேவி) ஒரு பெண் வந்து நின்று 'உன்னைக் காதலிக்கிறேன்' என்கிறார். தனுஷுக்கோ தலைகால் புரியவில்லை. டீக்கு பால் வாங்க வைத்திருந்த பணத் தில் வெள்ளை நிற சுடிதார் வாங்கிவந்து 'பாலாடை' என்று நாமகரணம் சூட்டி, பரிசு தருகிறார். காதல் நன்றாகத்தான் இருக்கிறது. நடைமுறைக்கு ஒத்துவருமா என யோசித் துக் கொண்டிருக்கும்போதே பிரச்னை வெடிக்கிறது.


'மனசுக்குப் பிடித்திருந்தால் காதல்! மனுஷங்களுக்குப் பிடிச்சிருந் தால்தான் கல்யாணம்' என நெத்தியடியாகச் சொல்லி, ப்ராக்டிக்கலாக முடிவெடுக் கிறார் நாயகி. ஆனால் நாய கன் விடுவதாக இல்லை. ஒரு காதல் அகதி யாக நீதிமன்றப் படியேறும் அவருக்கு நியாயம் கிடைத்ததா என்ற புதிய நோக்கில் யோசித்திருக்கிறார் அறிமுக இயக்குநர் பூபதி பாண்டியன்.

இன்றைய இளைய தலைமுறையின் காதல் திருமண மாதிரிகளிலிருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு, அதை கமர்ஷியல் ஃபார்முலாவுக்குள் மூச்சுத் திணற வைத்து விடாமல், அளவோடு அடக்கி வாசித்திருக் கிறார். எதிர்காலத்தில் நல்ல படங்களைத் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

இயக்குனர், நாயகனுக்கு அடுத்து பாராட்டுகளை அள்ளிக் கொள்பவர் ஸ்ரீதேவி. டூயட்டோடு கட்டுப்படுத்தப்படுகிற நாயகியாக இல்லாமல், கதையின் போக்கை மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறார். ''காதல் வேறு வாழ்க்கை வேறு! தயவு செய்து புரிஞ்சிக்கோ. இது நானே விரும்பி யெடுத்த முடிவு'' என நாயகனிடம் அழுத்தம்திருத்தமாக வலியுறுத்தும்போது, அசத்தல் நடிப்பு. ஆட்டோ டிரைவராக வந்து ஸ்ரீதேவியைக் காதலிக்க முயலும் கருணாஸின் காமெடி கலர்ஃபுல், படத் தைப்போலவே.

**- விஷுவல்தாசன்**

● அபவ் ஆவரேஜ்



# "ராதிகா சீரியலில்...



• செல்வி தொடரில்...

''சந்தேகமில்லாமல் நான் சரிதா தான்!'' மாற்றுக் குறையாத அதே குளிர்ச்சிப் புன்னகை வழிந்தோட, கைகூப்பி வரவேற்றவரை நம்ப முடியவில்லை. 'ஜூலி கணபதி' படத்தில் நூற்று இருபது கிலோ எடை கொண்ட பெண்ணாக நடித்திருந்தவர், இப்போது எண்பது கிலோவில் ஜம்மென்று இருந்தார். ராடன் டி.வி தயாரிக்கும் 'செல்வி' மெகா தொடரில் ராதிகாவின் உயிர்த் தோழியாக திடீர் அவதாரம். நாம் ஜூலி கணபதியிலிருந்து தொடங்கினோம்...

**ஜூலி கணபதியில் உங்கள் நடிப்பைப் பாராட்டாத பத்திரிகைகளே இல்லை. மூன்று தேசிய விருதுகள் உறுதி என்று பாலுமகேந்திரா சொல்லியிருந்தார். ஆனால் ஒரு விருது கூடக் கிடைக்கவில்லையே?**

"அந்த சோகத்தை எப்படி விவரிப்பது?! மூன்றாம் பிறையில் ஸ்ரீதேவி ஏற்று நடித்த பாத்திரத்துக்கு, என்னைத்தான் முதலில் தேர்வு செய்தார் பாலுமகேந்திரா. ஆனால், அன்று மூன்று மொழிகளில் பிஸியாக இருந்ததால், அந்த அற்புதமான வாய்ப்பைத் தவறவிட்டேன். பிறகு ஜூலி கணபதியின் கதையைச் சொல்லி 'இருபது கிலோ எடை ஏற்ற வேண்டியிருக்கும், முடியுமா?' என்றார். மூன்று மாத காலம் சாப்பிட்டு மெல்ல மெல்ல எடையைக் கூட்டினேன். படத்தை ஒரு கனமான கவிதையாக வடித்திருந்தார். ஆனால் ஜூலி கணபதிக்கு பாராட்டுக்கள் குவிந்த அளவு, வியாபார ரீதியாக வெற்றி பெறவில்லை. அந்த இழப்பை விருதுகளாவது துடைக்கும் என்று காத்திருந்தோம். படத்தை தேசிய விருதுக்கு அனுப்ப முடியவில்லை என்ற இயலாமையே பாலுமகேந்திரா சாரை படுக்கையில் முடக்கிவிட்டது. நான் அவரை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது, இதுதான் அவரது மனக்குறையாக இருந்தது. நிஜக் கலைஞர்களுக்கு சொந்த வாழ்க்கையின் பாதிப்புகளைவிட, தங்களது படைப்புகள் ஏற்படுத்தும் பாதிப்புதான் அதிகம் என்பதை அப்போது புரிந்து கொண்டேன்."

**சினிமாவிலிருந்து வாய்ப்புகள் குறைந்த உடனேயே, சின்னத் திரைக்கு வந்துவிடும் காலத்தில், நீங்கள் இத்தனை வருட இடைவெளி எடுத்துக் கொண்டது ஏன்?**

"கே.பி. சார் ஐந்து வருடங்களுக்கு முன்பே அழைத்தார். கைக் குழந்தைகளை விட்டுவிட்டுப் போக முடியவில்லை. எனது மகன்கள் ஷ்ராவன், தேஜஸ் இருவரும் இப்போது வளர்ந்து விட்டார்கள். தவிர ஒரு பெரிய இடைவெளி எடுத்துக் கொண்டால், புத்துணர்ச்சியாக இருக்கும் என்று நினைத்தேன்."

**கே.பி. கூப்பிட்டும் வராத நீங்கள், இப்போது ராதிகா கூப்பிட்டதும் வந்துவிட்டீர்களே?**

"ராதிகா எனது உயிர்த் தோழி. கதையும் கூட ரொம்பப் பிடித்திருந்தது. திறமைக்கு வேலை தருகிற முக்கிய கதாபாத்திரம் எனக்கு. தமிழகத் தாய்மார்



ராதிகாவுக்கு, நான் அடைக்கலம் தருகிறேன். தமிழகத்துக்கு வந்த பிறகு எங்கள் நட்பில் விரிசல். எப்படி ஒன்று சேரப் போகிறோம் என்பது தான் கதை. இதில் சுவாரஸ்யமான பல கிளைக் கதைகள். அன்பு, பாசம், காதல், வஞ்சம், சூழ்ச்சி, தியாகம் என்று, எல்லா மனித உணர்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து திரைக்கதை அமைத்துக் கொண்டிருக்கிறார் ராஜ்பிரபு.''

**நீங்கள் வில்லியாக நடிக்கிறீர்கள் என்றல்லவா தகவல் வெளியானது?**

''இல்லவே இல்லை. கதையில் எதிர்மறையான பாத்திரம் என்று எதுவுமில்லை. எல்

# நான் தாமரை!''

**-சரிதா**

கள் சரிதா என்ற பெயரை மறந்து விட்டு, இனி என்னை 'தாமரை' என்று கூப்பிட்டால் ஆச்சரியப்பட ஏதுமில்லை. செல்வியில் ராதிகாவை சூரியன் என்று வைத்துக்கொண்டால் நான் தாமரை!''

**செல்வியின் 'கதை'யைக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

''செல்வியாக ராதிகா நடிக்கிறார். இலங்கைத் தலைநகரில் அதிக செல்வாக்கோடு வசித்துவரும் ஒரு தமிழ்க் குடும்பத்தில் ராதிகா மூத்த மகள். கதைப்படியும் நாங்கள் உயிர்த் தோழிகள். ஒரு கட்டத்தில் அகதிகளாக தமிழகம் வரும்

லோரையுமே சூழ்நிலை தான் தவறு செய்ய வைக்கிறது. தங்களது பார்வையில், ஒவ்வொரு பாத்திரமும் செய்வது சரியென்று நினைக்கிறது. அதனால் ஏற்படும் பிரச்னைகள்தான் தொடர் முழுக்க. தொடரில் ராதிகாவுக்கும் எனக்கும் சமமான பாத்திர அமைப்பே.''

சந்திப்பு : **ஜெய்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

# கல் மண்டபம்

ஜி.ஆர்.சுரேந்தர்நாத்

**எ**ல்லா இடங்களும், பிரிந்துபோன யாரோ ஒருவரை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

நந்தியாவட்டைப் பூக்கள் சிதறிக் கிடக்கும் சர்ச் படிக் கட்டுகள், டெல்லியில் வேலை கிடைத்துச் சென்றுவிட்ட நண்பன் ஜார்ஜை ஞாபகப் படுத்துவது போல், வீட்டுத் தோட்டத்து துளசி மாடம், அதனை தினமும் வணங்கிய, இறந்துபோன அம்மாவை நினைவூட்டுவது போல், தன் பழைய காதலி நீலாவை சுந்தரத்துக்கு நினைவுபடுத்திக் கொண்டு, காலத்தால் அழியாமல் நின்று கொண்டிருந்தது கல் மண்டபம்.



நீலாவை நினைத்தபடி, அந்தப் பரந்த நிலத்தின் மத்தியிலிருந்த கல் மண்டபத்தில் அவர் படுத்திருந்தார்.

இந்த மலைப்பிரதேச ஊர், காடாக இருந்தபொழுது, வேட்டைக்கு வரும் ஜமீன்தார் ஓய்வெடுப்பதற்காக கட்டப்பட்டது. பிற்காலத்தில் நொடித்துப்போன ஜமீன் குடும்பத்திடமிருந்து, கல் மண்டபத்தோடு சேர்த்து அவர் அப்பா வாங்கிய இடமிது.

அந்த மலைப்பிரதேசத்தில் எப்பொழுதும் பெய்யும் மழை, அப்பொழுதும் பெய்து கொண்டிருந்தது. மண்டபத்தின் கூரையிலிருந்து, நான்கு பக்கமும் அழகாக மழைநீர் வழிந்து கொண்டிருந்தது.

மழைச் சத்தத்துக்கு நடுவே, "அப்பா... அப்பா..." என்று தன் மகனுடைய குரல் கேட்க, திரும்பிப் பார்த்தார் சுந்தரம்.

"நீ எதுக்கு மழைல இவ்ளோ தூரம் வந்த?" என்றார். "அது வந்து... இந்த இடத்தை வித்துரலாம்னு சொல்லியிருந்தேன்ல.. புரோக்கர் மணி, ஒரு பார்ட்டி வந்துருக்குன்னு சொன்னாரு. அதான் உங்ககிட்ட சொல்லலாம்னு வந்தேன்ப்பா." என்றான்.

"சரி... நீ வீட்டுக்குப் போ. அம்மா தனியா இருப்பா. புரோக்கரை நாளைக்கு வந்து என்னைப் பாக்கச் சொல்லு" என்று கூறி, செல்வத்தை அனுப்பி வைத்தார்.

பெருமூச்சுடன் சுற்றிலும் பார்த்தார். இந்தக் கல் மண்டபம் அவருக்கு வெறும் இடமில்லை, ஒரு நினைவுச் சின்னம். காலத்தால் அழிக்க முடியாத ஒரு காதல், இந்தக் கல் மண்டபத்தில் தானே பிறந்தது!

**க**ல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, வேலையின்றி இருந்த நாட்களில், கல் மண்டபத்திற்கு தினமும் கதைப் புத்தகங்களோடு வந்துவிடுவார்.

அது ஒரு நவம்பர் மாதம். நல்ல மழைக்காலம்.

சுந்தரம் கல் மண்டபத்தில் அமர்ந்தபடி, தி.ஜானகிராமனின் சிறுகதைத் தொகுப்பொன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

சற்று விட்டிருந்த மழை, மீண்டும் பெய்ய ஆரம்பிக்க... புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, வெளியே பார்க்க ஆரம்பித்தார். தூரத்தில் ஒரு பெண், வேகமாகக் கல் மண்டபத்தை நோக்கி ஓடி வருவதைப் பார்த்து எழுந்து நின்றார்.

பாவாடை தாவணியுடன், கல் மண்டபத்தின் படிக்கட்டுகளில் ஏறிய அந்தப் பெண்ணை சாதாரணமாகப் பார்த்தவர், அடுத்த வினாடி அசந்துபோனார். மின்னலோடு சேர்ந்து தேவதை ஒன்று பூமிக்கு வந்துவிட்டதா என்ன! அவருக்குத் தெரியாமல், இந்த ஊரில் இவ்வளவு அழகான பெண்ணா?

வேகமாக மண்டபத்தினுள் நுழைந்தவள், திடீரென்று அவரைப் பார்த்தவுடன், பயந்துபோய் நின்றுவிட்டாள்.


"யார் நீங்க? ஊருக்குப் புதுசா?" என்றார் அந்தப் பெண்ணிடம்.

"ஆமாம். கோயம்புத்தூர்லயிருந்து என்.சி.சி. கேம்புக்கு வந்திருக்கோம். குட்ஷெப்பர்டு ஸ்கூல்ல தங்கியிருக்கோம். சும்மா சுத்திப் பாக்கலாம்னு வந்தேன். மழைல மாட்டிக்கிட்டேன்" என்றவளின் கண்களில் இன்னும் பயம் போகவில்லை.

பகல் நேரம்தான் என்றாலும், ஓர் ஒதுக்குப்புறமான மலைப்பிரதேசத்தில், முன்பின் தெரியாத ஒரு ஆணுடன் தனியாக இருப்பது, எந்தப் பெண்ணிற்கும் பயமாகத்தான் இருக்கும்.

"அப்படியா? நீங்க மழை விட்டவுடனே கிளம்பிப் போங்க. நான் போறேன்" என்று அவர் கூறியவுடன், அந்தப் பெண்ணின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

மறுநாள் மாலை. மழை இல்லை. சுந்தரம் கல் மண்டபத்துக்குச் சென்ற பொழுது, பனி வேகமாக இறங்கிக் கொண்டிருந்தது. மண்டபம் கூட மங்கலாகத்தான் தெரிந்தது. மண்டபத்தை நெருங்க, நெருங்க, ஒரு பெண் பாடிக்



கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.

'வசந்தகால நதிகளிலே...
வைரமணி நீரலைகள்...'

ஒருவேளை நேற்று வந்த பெண்ணாக இருக்குமோ என்று தோன்ற, வேகவேகமாக

படிக்கட்டுகளில் ஏறிய சுந்தரத்தால் தான் கண்ட காட்சியை இப்பொழுதும் மறக்க முடியவில்லை.

அருகிலிருந்த மரங்களிலிருந்து உதிர்ந்த மஞ்சள் பூக்கள், தரையே தெரியாத அளவுக்கு மண்டபம் முழுவதும் பரவிக் கிடக்க... மண்டபத்தின் மத்தியில், வெள்ளை நிற தாவணி அணிந்துகொண்டு, அந்தப் பூக்களின் மேல், ஓர் ஓவியம் போல படுத்தபடி பாடிக்கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

**'நீரலைகள் மீதினிலே...**
**நெஞ்சிரண்டின் நினைவலைகள்...'**

என்று பாடிக் கொண்டிருந்தவள், அவரைப் பார்த்தவுடன் பாட்டை நிறுத்திவிட்டு வேகமாக எழுந்தாள்.

"நல்லாப் பாடறீங்க" என்றார். அவள் வெட்கத்துடன் தலையை குனிந்து கொண்டாள்.

"நீங்க தினம் இங்க வருவீங்களா?" என்றாள்.

"ஆமாம். இது எங்க இடம்தான்."

"அப்படியா? இந்த இடம் தனிமையா, ரொம்ப அழகா இருக்கு."

"அதனாலதான் டெய்லி வந்துடுவேன். உங்க பேரு?"

"நீலா, உங்க பேரு?"

"சுந்தரம். பி.ஏ. படிச்சு முடிச்சுட்டு வேலை தேடிக்கிட்டிருக்கேன். நீங்க என்ன படிக்கிறீங்க?"

"பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர். செகண்ட் இயர்."

"இங்க... எத்தனை நாள் கேம்ப்?"

"ரெண்டு வாரம்."

பேசினார்கள், தினமும் பேசினார்கள். நீலா அங்கிருந்த இரண்டு வாரமும், தினந்தோறும் மாலையில் கல் மண்டபத்திற்கு வந்துவிடுவாள்.

பேசிப் பேசி, இரண்டு வார காலத்திற்குள், இருவரும் மனதளவில் மிகவும் நெருங்கிவிட்டிருந்தார்கள்.

**நீ**லா ஊருக்குத் திரும்புவதற்கு முந்தைய நாள். ஒன்றும் பேசத் தோன்றாமல், இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கியபடி, நீண்ட நேரமாக அமர்ந்திருந்தனர். பிரிவின் வேதனை, நீலாவின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

"இந்தக் கல் மண்டபம்... மழை... குளிர்... இதையெல்லாம் விட்டுட்டுப் போறோமேன்னு ரொம்ப வருத்தமா இருக்கு"

"இந்த ஊரை விட்டுப் போறது மட்டும் தான் வருத்தமா இருக்கா?" என்று சுந்தரம் கேட்டவுடன், நீலாவின் கண்கள் சட்டென்று கலங்கிவிட்டன. வேகமாக எழுந்து, மண்டபத்தின் ஓரமாகச் சென்று நின்றுகொண்டாள்.

நீலாவின் அருகில் சென்ற சுந்தரம், மெதுவாக அவள் தோள்மீது கை வைத்தார். வேகமாகத் திரும்பி, அவரை நோக்கிய நீலாவின் கண்களில் தெரிந்த காதலை, வார்த்தைகளால் விவரிக்க இயலாது.

ஒரு வினாடி கண்ணீருடன் பார்த்த நீலா, சட்டென்று பாய்ந்து அவரைத் தழுவிக் கொண்டாள். நெகிழ்ந்துபோனவர் நீலாவை இறுக அணைத்தபடி, "நீலா... கடைசி வரைக்கும் நீ எனக்கு வேணும்." என்றார்.

"எனக்கும்.." என்றாள் நீலா.

***ம**னசு மாவட்டத்தின்*
*கல்லூரிச் சாலையில்*
*காலை 10.20க்கு*
*5.7 ரிக்டர் அதிர்வில்*
*நான் மட்டும் உணர்ந்த*
*பூகம்பம் நீ!*

**நீ**லா கோயம்புத்தூருக்குச் சென்ற பிறகும், கடிதங்கள் மூலம் அவர்களது காதல் வளர்ந்தது. மாதம் ஒருமுறை கோயம்புத்தூருக்குச் சென்று சுந்தரம் அவளைப் பார்த்துவிட்டு வருவார்.

சுகமாக காதல் ஒரு வருடத்தைக் கடந்த பிறகு, திடீரென்று ஒரு நாள் புயலடித்தது. சுந்தரத்தின் கடிதம் ஒன்று, நீலா வீட்டாரின் கையில் கிடைக்க... எல்லாம் மாறிப் போனது. நீலா வீட்டில் காதலை கடுமையாக எதிர்த்தார்கள். அவருக்கு நடந்த விஷயங்களைத் தெரிவித்து, நீலா அவருக்கு கடிதம் எழுதினாள். பிறகு தொடர்பு சுத்தமாக நின்றுபோனது.


நீலாவை நேரில் சந்திக்க முயற்சித்தும், அவரால் முடியவில்லை. அப்பொழுது வேலையில்லாமலிருந்ததால், வேலை கிடைத்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சுந்தரம் சற்றே அமைதியான இரண்டு மாத காலத்திற்குள், நீலாவின்

திருமணப் பத்திரிகை இடியாக வந்து சேர்ந்தது. அந்தப் பத்திரிகையில், 'மன்னிக்கவும். மறக்கவும்' என்று இரண்டே வார்த்தைகளில், நீலா காதலுக்கு முடிவுரை எழுதியிருந்தாள்.

அதன் பிறகு, ஒரு வருட காலம், பைத்தியம்போல், நாள் முழுக்க கல் மண்டபத்திலேயே விழுந்து கிடந்தார் சுந்தரம்.

பிறகு வேலை கிடைத்து, சற்றே மனம் தேறி... இரண்டு வருடத்தில் திருமணமாகி, பையன் பிறந்து, வாழ்க்கை திசைமாறிப் போனது.

ஒரே பையன். படிப்பு சரியாக ஏறவில்லை. பி.எஸ்ஸி. படித்துவிட்டு, பிஸினஸ் செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறான். இரும்புக்கடை வைக்கப் போகிறானாம். முதலீட்டிற்கு சுந்தரத்திடம் பணம் இல்லை. இந்த இடத்தை விற்று



விடலாம் என்று மகன் மற்றும் மனைவி தொடர்ந்து வற்புறுத்த, வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார்.

இடம் கையை விட்டுப் போவதில்கூட அவருக்குப் பெரிய வருத்தமில்லை. அருகில் புதிய நகர் ஒன்று உருவாகி, அக்கம் பக்கமெல்லாம் நிறைய வீடுகள் வந்துவிட்டன. இந்த இடத்தை வாங்குபவர், வீடு கட்டும் பொழுது, நிச்சயம் கல் மண்டபத்தை இடித்துவிடுவர். அதைத்தான் அவரால் தாங்க முடியவில்லை.

தன்னை அறியாமல், கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தார் சுந்தரம்.

மறுநாள் முதல் காரியங்கள் வேகமாக நடந்தன. இடத்தை வாங்கவிருந்த இளைஞன், தன் மனைவியோடு வந்து இடத்தைப் பார்த்தான். சொன்ன விலைக்கு ஒப்புக்கொள்ள, மறுவாரமே ரிஜிஸ்ட்ரேஷன் ஆனது.

அதன் பிறகு சுந்தரம் கல் மண்டபம் பக்கம் போகவே இல்லை. அவரின் காதல் களமாகிய கல் மண்டபம், இடிந்துபோய்க் கிடப்பதைக் காண அவர் விரும்பவில்லை.

இரண்டு வாரங்களுக்கு பிறகு ஒரு வெள்ளிக்கிழமை. ஐயப்பன் கோயிலுக்குச் சென்றபொழுது, கோயில் வாசலில் தன் வீட்டை வாங்கிய இளைஞனைப் பார்த்தார் சுந்தரம்.

அவரைப் பார்த்தவுடன் இளைஞனே வேகமாக அருகில் வந்து, "வணக்கம் சார்." என்றான்.

"வணக்கம் தம்பி. நல்லாருக்கீங்களா?" என்றவர், கல் மண்டபத்தின் நினைவெழவும், "என்ன தம்பி, கல் மண்டபத்தை இடிச்சுட்டு வீடு கட்டப் போறீங்களா?" என்றார் ஆற்றாமையோடு.

"இல்ல சார்... கல் மண்டபத்தை இடிக்கற ஐடியா இல்ல! நாங்க இந்த ஊருக்கு வந்து ஆறு மாசம்தான் ஆகுது. சொந்த வீடு கட்டுடான்னு அம்மாதான் இடம் பார்க்கச் சொன்னாங்க. ஆனா இந்த இடத்த வாங்கறப்ப, அம்மா ஊர்ல இல்லை. மெட்ராஸுக்கு, அவங்கக்கா வீட்டுக்குப் போயிருந்தாங்க. வந்து இடத்தைப் பாத்தாங்க. 'கல் மண்டபம் ரொம்ப அழகா இருக்கு. அதை இடிக்க வேண்டாம். முன்னாடி இருக்குற இடத்துல வீடு கட்டு'ன்னு சொல்லிட்டாங்க. போன வருஷம், ஒரு ஆக்ஸிடென்ட்ல எங்கப்பா இறந்த பிறகு, எங்கம்மா பேச்சை நான் தட்டுறதே இல்லை."

"அப்படியாப்பா? அந்த காலத்து ஆளுங்களுக்குத்தான் அதோட மதிப்பு தெரியும். உங்கம்மாகிட்ட நான் நன்றி சொன்னேன்னு சொல்லுங்க."

"சரி சார்... அப்ப நாங்க புறப்படுறோம்" என்று அந்த இளைஞனும் அவன் மனைவியும் புறப்பட்டனர்.

சுந்தரத்துக்கு ஆனந்தம் தாளவில்லை. கல் மண்டபத்துக்கு ஓடோடினார். நெருங்க நெருங்க, பாட்டுச் சத்தம் ஒன்று, அவர் காதுகளை வந்து வருடியது...

**'வசந்தகால நதிகளிலே**
**வைரமணி நீரலைகள்..'**

மனம் திக்திக்கென்று அடிக்க நெருங்கியவர், மண்டபத்துப் படிகளில் வயதான பெண்மணியொருத்தி அமர்ந்து மெல்ல பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினாள் அவள்.

சுந்தரத்தின் இதயம் சட்டென்று நின்றது... அது... நீலா! ●

**"கண்ணே!" "நாதா!" எனும் பாகவதர் காலத்து வசனங்கள் மட்டும்தான் மாறியிருக்கின்றன. மற்றபடி கோடம்பாக்கத்தில் இன்னும் காதல்தான் கச்சாப் பொருள். இன்றைய தேதிக்கு கலர்ஃபுல்லாக தயாராகிக் கொண்டிருக்கும் சில காதல் கதைகளின் லப்-டப் ட்ரைலர்...**

# லப்-டப் ட்ரைலர்!

"பதினாறு முதல் இருபத்தொரு வயதுவரையிலான வாழ்க்கை, கனவுகளால் நிறைந்தது. இந்தப் பருவத்தின் கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் எல்லைகளே கிடையாது. எல்லை மீறுவதுதான் இந்த வயதினரின் வாழ்க்கை. பின்னால் வயது ஆக ஆக, யதார்த்த வாழ்க்கை ஓங்கி அறைந்து, கீழே வீழ்ந்து எழுகிறபோதுதான் தெரிகிறது, நாம் எதை வாழ்க்கை என்று நினைத்தோமோ, அது இதுவல்ல என்று. அதற்காக அந்தப் பருவத்திற்கே உரித்தான கனவுகளை நசுக்காதீர்கள், இளைஞர்களே! கனவு காண்பதில் கஞ்சத்தனம் வேண்டாம்." - 'அது ஒரு கனாக் காலம்' படத்தின் கதை குறித்து பாலுமகேந்திராவிடம்



• குருதேவா

கேட்டபோது, அவர் உணர்ச்சிவசப் பட்டுச் சொன்ன கருத்துக்கள் இவை. வீட்டு வேலைக்காரியின் மகளை (ப்ரியாமணி), தனுஷ் காதலித்து திருமணம் செய்துகொள்வது, அதன் தொடர்ச்சியாக வரும் பிரச்னைகள் என்று, நீண்டகாலமாகத் தன் மனதில் நிழலாடிக் கொண்டிருந்த ஓர் உண்மைக் காதல் கதையை எடுத்திருக்கிறாராம் பாலுமகேந்திரா. இது வெள்ளி விழாப் படம் என்கிறார்கள் அவரது உதவியாளர்கள்.



• அலையடிக்குது

சென்னைத் தமிழ் பேசிக்கொண்டு



* அது ஒரு கனாக் காலம்

பொறுப்பில்லாமல் திரியும் ஹீரோ, அலுவலகத்தில் பணிபுரியும் கதாநாயகி. முரண்பட்ட இருவரும் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கும்போது நிகழும் சம்பவங்களைக் கொண்டு, புதிய காதல் களத்தில் 'குருதேவா' படத்தை இயக்கியிருக்கிறாராம் மலையாளத்திலிருந்து வந்திருக்கும் ஜபார். "வாழ்க்கையில் நாம் தினமும் சந்திக்கும் மனிதர்களையும், காதலையுமே தொட்டிருக்கிறேன்" என்று சொல்லும் இவர், படத்தின் தலைப்புக்குக் கீழே கொடுத்திருக்கும் கேப்ஷன் 'தி கேர் டேக்கர்'.

**கா**தலை காமெடிக் களத்தில் சுவைபடச் சொல்வதில் கைதேர்ந்தவர் சுந்தர் சி. துணிச்சலாக விவேக்கை கதாநாயகனாக்கியிருக்கிறார் 'தகதிமிதா' படத்துக்காக. "விவேக் இருப்பதால் நகைச்சுவை டோசேஜ் அதிகம் என்று நினைக்க வேண்டாம். இது ஒரு மியூசிகல் லவ் ஸ்டோரி. விவேக் ஓர் இசைக் கலைஞர். படத்தில் மொத்தம் ஒன்பது பாடல்கள். இசை டி.இமான்" என்று அதிர வைக்கிறார்கள். சோக விவேக் இல்லை என்று உத்தரவாதமும் தருகிறார்கள்.



* தகதிமிதா

"**கா**தல், சுனாமி மாதிரி! அது கரையைக் கடக்கும்போது கவனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இழப்புதான். இதுதான் 'அலையடிக்குது' படத்தின் கதை" என்கிறார்கள். சிந்து துலானி, அவரது தங்கை நேகா துலானி தவிர இந்தப் படத்தின் இயக்குனர், தயாரிப்பாளர் எல்லோரும் புதியவர்கள்; இளைஞர்கள். "இளைஞர்களால் இளைஞர்களுக்காக உருவாகி வரும் மாறுபட்ட காதல் கதை" என்று அடித்துச் சொல்கிறார் புதிய இயக்குனர் காளிமுத்து.

**- ரவுண்ட்ஸ் பாய்**

# காதல் காலனி

காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, காதல் திருமணம் செய்வோரைத் தள்ளி வைக்கும் ஊரைத்தான் பெரும்பாலும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் காதல் திருமணத்துக்கு, அதுவும் கலப்புத் திரு மணத்துக்கு 'ஜே' போட்டு ஆதரவு தரும் ஊர் இருக்கிறதென்றால் நம்ப முடி கிறதா? நம்பத்தான் வேண்டியிருக்கிறது, சென்னை கோடம்பாக்கம், காமராஜர் காலனியைப் பார்க்கும்போது. இங்கு பலர் கலப்புத் திருமணம் செய்தவர்கள். அதுவும் ஊர் மக்களின் சப்போர்ட் டோடு. அந்தக் காதலூரை வலம் வந்த போது, முதலில் நம்மிடம் அகப்பட்டது அபுபெக்கர் - நித்யாமேரி ஜோடி.

"நாங்க ரெண்டு பேருமே பக்கத்துப் பக்கத்து வீட்ல குடியிருந்தோம். அப்படியே இலேசா பழக்கமாகி, காத லிக்க ஆரம்பிச் சுட்டோம். ஆளுக் கொரு கம்பெனில வேலை பார்த்துட்டு இருந்தோம். ரெண்டு பேரும் சொல்லி வச்ச மாதிரி ஒரே சமயத் துல வீட்டை விட்டுக் கிளம்பி, எங்க மீட்டிங் பாயின்ட்டுக்கு வந்துடுவோம். அங்கிருந்து இதோ இந்த டிவிஎஸ் பைக்ல (அருகிலிருந்த சைக்கிளைக் காட்டு கிறார்) கொண்டு போய் நித்யாவை அவ கம்பெனில விட்டுட்டு, நான் கிளம்பிடுவேன்.



• நித்யாமேரி-அபுபெக்கர்




எங்க காதலுக்கு வழக்கம்போல ரெண்டு வீட்லயும் எதிர்ப்பு. எவ் வளவோ போராடினோம். ஒண்ணும் நடக்கல. வேற வழியே இல்லைன்னு முடிவு பண்ணி, வீட்டை விட்டுக் கிளம்பி என் நண்பன் வீட்ல போய் ஒரு வாரம் தஞ்சம். அப்புறம், இந்த ஏரியா மக்கள் உதவியோட ஒரு வழியா சமாதானமாகி, திருமணம் நடந்தது. மறுபடி இப்ப இந்த ஏரியாவுக்கே குடி வந்துட்டோம். ஆரம்பத்துல குடும்பம் நடத்தறதுக்குத் தேவையான பணம் இல்லாததால ரொம்ப சிரமமா இருந் திச்சு... அப்புறம் வெவ்வேறு கம்பெனி களுக்கு மாறி, இப்போ ஓரளவுக்கு செட்டில் ஆயாச்சு... ரொம்ப சந்தோஷ மான விஷயம் என்னன்னா, எங்க வீட்ல ரம்ஜானும் உண்டு, கிறிஸ்துமஸும் உண்டு" என்று புன்னகை செய்த அபு பெக்கர், "எங்க ஏரியா மக்களை மறக் கவே முடியாது. அவங்க மட்டும் இல் லன்னா இன்னிக்கு நாங்க ஜோடியா உங்ககிட்ட பேசிட்டிருக்க மாட்டோம்" என்று உருகினார்.

அடுத்து நாம் சந்தித்தது சதீஷ்குமார்

ஆன்னல் தம்பதியினரை. சதீஷ்குமார் ஜைன மதத்தைச் சேர்ந்தவர் - ஆன்னல் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்.

"முதல் தடவை இவளைப் பார்த்த வுடனேயே ரொம்பவும் பிடிச்சிப் போக, என் காதலைச் சொன்னேன். அவளும் எப்போ... எப்போன்னு காத்துக்கிட்டு இருந்தது மாதிரி உடனே ஒப்புக்கிட்டா. பெரும்பாலும் பீச்லதான் எங்க சந்திப்பு இருக்கும். சின்சியரா லவ் பண்ணினா லும், கல்யாணம் செய்துக்க பயம். குடும் பத்தை நடத்தற அளவுக்கு சம்பாதிக் கணுமே... ஆனா அப்போ சம்பளம்னு



• காதல் காலனி...

பெரிசா ஒண்ணும் கிடையாது. அத னால கொஞ்ச நாள் வெயிட் பண்ணி னோம். வேலை பர்மனென்ட் ஆச்சு... வீட்ல சொன்னா, ரெண்டு பேர் சைடுல யும் எதிர்ப்பு... எங்க வீட்ல என் அக்கா பெண்ணைக் கட்டிக்கணும்னு வற்புறுத் தினாங்க. அவ வீட்ல வேற மாப்பிள்ளை பார்த்துட்டாங்க. என்ன செய்யறதுன்னு நண்பர்கள்கிட்ட கேட்டேன். தைரியம் கொடுத்தாங்க. இந்த ஏரியா மக்களும் ஆதரவு கொடுத்தாங்க.

திருமணம் செய்துக்கிட்டோம். குடும் பம் ஓரளவுக்கு நல்லா போயிட்டிருக்கு. காலனி ஆட்கள்தான் எங்க காதலுக்கு உயிர் தந்தவங்க. அவங்களை என்னைக் கும் மறக்க மாட்டோம். நாங்களும் இந்த மக்களோட மக்களா கலந்து, யார் காத லித்தாலும் அது தகுதியானதா இருந்தா, சேர்த்து வைக்கப் போறோம்" என்று கூறிவிட்டு மனைவியைப் பார்த்துச் சிரித்தார் சதீஷ்.

**கா**தல் ஜோடிகளுக்கு இந்த அள வுக்கு உற்சாகம் தந்து வரும் இப்பகுதி தைரியசாலிகள் சிலரிடம் பேசினோம். கேமராவுக்கு முகம் காட்ட மறுத்தவர் கள், "நாங்க ஒண்ணும் அப்பா - அம்மாவை விட்டு யாரையும் பிரிச்



• ஆன்னல் - சதீஷ்குமார்

சிக் கொண்டு வந்து கல்யாணம் பண்ணி வைக்கிறதில்ல. அவங்களா விரும்பி எங்ககிட்ட வந்தா, எங்களால முடிஞ்ச உதவியைச் செய்யறோம். உண்மையில இது ரொம்ப ரிஸ்க்கான விஷயம். இதுல நாங்க சந்திக்கற பாதிப்புங்கதான் ஜாஸ்தி. இருந்தாலும் காதலிச்சவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு நல்லா வாழுறதை பார்க்கும்போது மனசுக்குத் திருப்தி, அவ்வளோதான். ஆனா ஆர் வக்கோளாறுல வீட்டை விட்டு வெளில வந்துட்ட எல்லாருக்கும் நாங்க உதவி பண்றது கிடையாது. அது ரொம்பத் தப்பு... எங்களுக்கு முக்கி யம், ரெண்டு பேரும் ஒரிஜினலா லவ் பண்ணியிருக்கணும். பையன் நல்ல வேலை பார்க்கணும். இந்த ரெண்டும் தான்" என்றனர்.

- முகுந்தன்

# மகுட வைரம்

## 29. பாலுக்கும் காவல்...

"மன்னனுக்குரிய தர்மம் மக்களைக் காப்பது. அந்த தர்மத்தைக் காக்க, தமிழகமும் ராஷ்டிரகூடமும் அன்னியரிடமிருந்து விடுபட, இந்த பன்னிரண்டாயிரம் வீரர்களை பலியிடுவதில் தவறேதுமில்லை" என்றும், அதற்கு தர்ம சாஸ்திர சம்மதமும் இருக்கிறதென்றும் கூறிய நந்திவர்மன் தனது திட்டத்தை மெல்ல விவரிக்கத் தொடங்கினான்.

"துருவா, நீ பாண்டியருக்கு அனுப்பிய ஓலைக்கு பதில் வந்து சேர்ந்து விட்டதா?"

விளக்கத்தின் தொடக்கத்தில் துருவனை நோக்கி கேள்வியொன்றையும் வீசினான் நந்திவர்மன்.

துருவனின் முகத்திலிருந்த திகைப்பு இன்னும் உயர்ந்தது.

"நான் பாண்டியருக்கு ஓலையனுப்பியது தங்களுக்கு...?"

"துருவா, இப்போது நீ அனுப்பிய ஓலை மட்டுமல்ல. சில திங்களுக்கு முன்னால் பாண்டிய மன்னரைச் சந்திக்க நீ முயன்றதையும், பின்னர் பாண்டிய ஒற்றர் படைத் தலைவன் முகுந்தனைச் சந்தித்து ஓலையளித்துவிட்டு, அவசரமாக ராஷ்டிர கூடத்துக்குத் திரும்ப நேர்ந்ததையும் கூட அறிவேன். ஒன்றை நினைவில் வைத்துக்கொள் துருவா. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதை அறிந்து கொள்ளாத மன்னன் அதிக காலம் அரியணையில் நீடிக்க முடியாது."

விஷ்வக்ஸேனன்

"நான் என்ன செய்யவேண்டுமென்பதைக் கூறுங்கள் மன்னா."

"நீ பாண்டியருக்கு எழுதிய ஓலைக்குரிய பதிலை நான் வாங்கி வைத்திருக்கிறேன். நீ இங்கிருந்து வெளியேறியதும் முதலில் சந்திக்கப் போவது பாண்டியரைத்தான். பாண்டியர் படை உனக்கு உதவக் காத்து நிற்கிறது. அவர்களுடன் நீ சேர்ந்து விட்டதை அறிந்தால், மகாராணி உன்னையும், பாண்டியரையும் தாக்கவும், உன்னை மீண்டும் சிறைப்பிடிக்கவும் இங்கிருக்கும் வீரர்களை அனுப்புவாள். மகாராஜா கோவிந்தருக்கும் செய்தியனுப்புவாள். ராஷ்டிர கூடத்திலிருந்தும் உன்னைத் தாக்க படைகள் வரும். இங்கிருந்து முதலில் வரும் ராஷ்டிர கூட வீரர்களை, பாண்டியர் உதவியுடனும், ராஷ்டிர கூடத்திலிருந்து வரும் கோவிந்தரின் வீரர்களை என் நண்பன் உதய சந்திரனின் உதவியுடனும் நீ எதிர் கொள்ளப் போகிறாய்."

"தாங்கள்...?"

"நான் சோழநாட்டில் பிரிந்துகிடக்கும் ராஷ்டிரகூட வீரர்களைத் திரட்டிக் கொண்டு, பாண்டிய மன்னரைச் சந்திக்கச் செல்வேன். பெயரளவிற்கு போர் என்று நடக்கும். போர் முடிந்ததும் சோழநாடு பூரணமாக விடுதலை பெற்றுவிடும். புரிகிறதா?"

துருவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. "எல்லாம் சரிதான் மன்னா. நான் இதையெல்லாம் நிறைவேற்ற இங்கிருந்து வெளியேற வேண்டுமே" என்றான்.

"உன்னை இங்கிருந்து வெளியேற்றி அழைத்துச் செல்ல, பாண்டியர் படைகளை உன் பாதையில் தயாராகக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, தாக்குதல் முறைகளையும் வகுத்துக் கொடுத்துவிட்டு, அவற்றை நிறைவேற்ற பாண்டியர் சார்பாக பராந்தகன் நாளை இரவு வருவான்."

"பராந்தகனா? யார், உக்ரோதயத்தைக் களவாடிச் சென்றதாகக் கூறப்பட்டதே, அவனா? ஒரு கள்வனா என்னை..."

"துருவா" நந்திவர்மனின் குரலில் அது வரை காணாத கடுமை ஒலித்தது. "அறியாமையால் கூறிய உன் வார்த்தைகளைப் பொறுத்தேன் துருவா. இனியொருமுறை பராந்தகனைப் பற்றித் தவறாக நினைக்

கவோ, பேசவோ செய்யாதே."


மன்னனின் கடுமைக்குக் காரணம் புரியவில்லை துருவனுக்கு.

"மன்னவா, ராஷ்டிரகூடத்தில் நான் கேள்விப்பட்டதைத் தான் கூறினேன். யாரிந்த பராந்தகன்?" என்றான் குழப்பம் படர்ந்த முகத்துடன்.

சுருக்கமாக, திடமாக வந்தது நந்திவர்மனின் பதில், "எனக்குப் பின், காஞ்சி அரியணையில் அமர முழு உரிமையுள்ளவன். தந்திவர்மனை விட தமிழக மக்களும், மன்னர்களும் மகிழ்ச்சியோடு ஏற்கக் கூடியவன். முறையில் எனக்கு மூத்த மகனாக வேண்டியவன்."

துருவன் முகத்தில் ஒரு கணம் வருத்தமும், தொடர்ந்து இலேசாக சினமும் படர்ந்தது. "அப்படியானால் மன்னவா, பல்லவ வம்சத்தைச் சேர்ந்த ஒரு வீரனை, பாண்டியர் தயவை எதிர்பார்த்து ஏன் நிற்க வைத்திருக்கிறீர்கள்? இங்கே அவனுக்கு உரிய இடத்தை ஏன் அளிக்கவில்லை?" சற்று உஷ்ணத்துடனேயே வந்தது அவன் கேள்வி.

"நான் அளிக்க முன் வந்ததை மட்டுமல்ல துருவா, பாண்டிய மன்னர் அளித்த பதவிகளையும் கூட அவன் ஏற்க மறுத்து விட்டான். அவனது சோழ நாட்டைப் பிரிந்து எங்கும், எதற்காகவும் வர இயலாதென்று கூறிவிட்டான். வயலும், வாய்க்காலும், அமைதி நிறைந்த கிராமத்து வாழ்க்கையும் தரும் மன நிம்மதியை, எந்த அரச போகமும் தர இயலாது. அந்த எளிய வாழ்வே போதும் என்று கூறி விட்டான்."



"அவன் கூறுவது முற்றிலும் உண்மை தான் மன்னவா" என்ற துருவன், "சரி, இத்தனை கட்டுக் காவலுடன் இருக்கும் இந்த மாளிகைக்கு, அவன் எப்படி வந்து என்னை வெளியே அழைத்துச் செல்ல முடியும்?" என்றான் குரலில் சந்தேகம் ஒலிக்க.

"துருவா, எனக்கு சிற்பக் கலையில் நாட்டம் அதிகம் என்பதை அறிவாயல்லவா?"

"இந்த உலகமே அறியுமே."

"சிற்பக்கலையின் ஒரு பகுதி பூமிக்கடியில் சுரங்கப்பாதைகளும், ரகசிய வழிகளையும் அறைகளையும் அமைப்பது" நந்திவர்மன் முகத்தில் விஷமம் வழிந்தது.

"அப்படியானால் இந்த மாளிகையில்...?"

"ஆம். வைகுந்தன் ஆலயத்திலிருந்து இந்த மாளிகைக்கும், இங்கிருந்து காஞ்சிக் கோட்டைச் சுவரைத் தாண்டியும் பாதைகள் இருக்கின்றன. நாளை இரவு தயாராக இரு, என் மூத்த மகனைச் சந்திக்க" என்ற நந்திவர்மன் எழுந்தான்.

அடுத்து மன்னனின் விழிகள் அந்த யவன மங்கையர் மீது பதிந்தன. "துருவா, இந்த யவனமங்கையர் என்னைச் சேர்ந்தவர்கள்தாம். உன்னை மீட்க வருபவர்களுக்கும், சுரங்கவழிகளை அடையாளம் காட்டவும், ரகசிய வாயில்களைத் திறக்கவும், உனக்கு உதவுவார்கள். அதுவரை இவர்களது உபசரணைகளை மறுக்காமல் ஏற்றுக் கொள். நீ இவர்களை மறுப்பதை அறிந்தால், மகாராணி பணிப் பெண்களை மாற்றிவிடக் கூடும். நான் வருகிறேன்" என்ற மன்னன் மாளிகையிலிருந்து வெளியேறி அரண்மனையை நோக்கி நடந்தான்.

இரவு நன்றாக முற்றிவிட்ட அந்த வேளையிலும், அரண்மனைக்குத் திரும்பிய மன்னனுக்காகக் காத்திருந்தாள் மகாராணி ரேவாதேவி. அவள் அழகிய விழிகளில் சந்தேகச் சாயை பலமாகப் படர்ந்து கிடந்தது.

"மன்னர் தனித்துச் சென்று துருவனைக் கண்டு பேசிவிட்டு வருவதாகத் தெரிகிறது..." என்றவள் குரலிலும் சந்தேகம் வழிந்தது.

எந்தத் தயக்கமுமின்றி வந்தது நந்திவர்மனின் பதில். "ஆம் தேவி, விருந்து முடிந்ததும் உங்கள் இருவரின் வாக்குவாதம் துவங்கிவிட்டது. நம் மகன் நந்திவர்மன் ராஷ்டிரகூடத்தில் எப்படி இருக்கிறான், அவன் கல்வியும், பயிற்சிகளும் எந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் கூட நீ விசாரிக்கவில்லை. நானும் அப்படி விசாரிக்காமல் இருப்பது தவறல்லவா? உங்கள் வாக்குவாதம் முடிந்ததும் துருவனை சிறை வைக்க உத்தரவிட்டு விட்டாய். எனக்குப் பேசுவதற்கே நீ சந்தர்ப்பம் தரவில்லை. எனவேதான் சென்று சற்று நேரம் பேசிவிட்டு வந்தேன்."


தயக்கமே இன்றி வந்த பதிலும், மாறாத முறுவலுடன் பேசிய முகமும், மகாராணிக்கு நந்திவர்மன் மீது சந்தேகம் கொண்டது கூடத் தவறோ என்று எண்ண வைத்தன. ஆனாலும் அவள் மனதில் நந்திவர்மனைத் தவிர சிறைப்பட்ட துருவன் நாடக் கூடியவர்களோ, உதவி கோரக் கூடியவர்களோ, காஞ்சியில் இல்லையென்பதும் தோன்றியது. மற்ற பல்லவ படைத்தலைவர்களோ, உபதலைவர்களோ துருவனுக்கு உதவ எண்ணினாலும், மன்னன் அனுமதியின்றி எந்தச் செயலிலும் ஈடுபட மாட்டார்கள் என்பதும் புரிந்தது அவளுக்கு.

மன்னனிடம் நேரிடையாகவே கேட்டு விடுவதும், துருவனுக்கு உதவாமலிருக்க வாக்கைப் பெற்று விடுவதும்தான் தன் சந்தேகத்துக்கு மாற்றாக அமையும் என்பது புரிந்ததால், மகாராணியின் முகத்திலும் குரலிலும் இலேசான குழைவு புலப்பட்டது.

"மன்னவா"

"சொல் தேவி."

"துருவனை நான் சிறை செய்ததை



தாங்கள் விரும்பவில்லை அல்லவா?"

"ஆம். விரும்பவில்லை. என்ன இருந்தாலும் அவன் உன் சகோதரன். நல்ல வீரன் என்றும் நான் மதிக்கிறேன்."

"ஆனால் அவன் ராஷ்டிரகூடத்துக்கு தற்போது திரும்பிச் செல்வதை நான் விரும்பவில்லை."

"சரி."

"எனவேதான் அவனை சிறைவைக்க வேண்டியதாகிவிட்டது."

"அதுவும் சரி. உன் விருப்பதற்கு நான் தடையேதும் கூறவில்லையே."

"எனக்கு தாங்கள் ஒரு வரம் தர வேண்டும்"

"உத்தரவிடு தேவி."

"துருவன் எப்படியாவது இங்கிருந்து தப்பிச் செல்லவே முயற்சி செய்வான்."

"கண்டிப்பாகச் செய்வான்."

"அவனுக்கு உதவக் கூடியவர்கள் காஞ்சியில் வேறு எவரும் கிடையாது."

"அதுபற்றி நான் அத்தனை திட்டமாக அறிந்திருக்கவில்லை தேவி. அவன் இதற்கு முன்பாக பாண்டியருடன் கூட ஏதோ தொடர்பு கொண்டதாகக் கேள்விப்பட்டேன் தேவி."

"ஆனால் காஞ்சிக் கோட்டைக்குள் பாண்டியர் நுழைவதும், அவனுக்கு உதவுவதும் நடக்க இயலாத காரியங்கள்.இங்கு அவன் உதவி கோர நினைத்தால், உங்களிடம்தான் கேட்க வேண்டும். எனவே..."

"எனவே?"

"நான் கேட்கும் வரத்தை தாங்கள் அளிக்க வேண்டும்."

"மகாராணி கேட்டு இதுவரை நான் எதையும் தர மறுத்ததில்லையே தேவி."

"நான் இப்போது கேட்பது இதைத்தான். துருவனை நான் சிறை செய்து வைத்திருக்கிறேன். இதன் பிறகு அவனை இங்கிருந்து தப்ப வைக்கவோ, ராஷ்டிரகூடத்துக்குத் திரும்பிச் செல்லவோ தாங்கள் உதவக் கூடாது."

கேட்டவர்க்குக் கேட்டபடியே வரத்தை அருளும் அந்த வைகுந்தனின் பரம பக்தனான நந்திவர்மன் முகத்திலிருந்த முறுவல் இன்னும் விரிந்தது.

"தேவி, துருவனை நீ சிறை செய்த பிறகு, அவனை விடுவிக்கவோ, தப்பிச் செல்லவோ நான் கண்டிப்பாக உதவ மாட்டேன். போதுமா?" என்றான் நந்திவர்மன்.

எந்த மலையே பெயர்ந்து விழுந்தாலும், நந்திவர்மன் கொடுத்த வாக்கை மீற மாட்டான் என்பதை நன்றாக அறிந்திருந்த ரேவாதேவியின் இதழ்களில் இன்பப் புன்முறுவல் மலர்ந்தது. மன்னனை நெருங்கி அவன் வலிய தோளை அணைத்துக் கொண்டவள், அதே முறுவலுடன் அரண்மனைக்குள் மன்னனுடன் நடந்தாள்.

**கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர்...**
**காதல் ஆயிரங்காலத்து உயிர்!**

அடுத்த நாளின் பொழுது அதிவேகமாகச் செல்வதாகத் தோன்றியது மகாராணிக்கு. ராஷ்டிர கூடத்திலிருக்கும் மகாராஜா கோவிந்தருக்கும், தன் நம்பிக்கைக்குரிய படைத்தலைவர்களுக்கும் துருவன் சிறைப்பட்டதைக் குறித்து ஓலைகள் அனுப்பினாள். ஓரிரு முறை துருவனிருந்த மாளிகைக்குத் தானே சென்று, நேரில் காவலைச் சோதித்து வந்தவள் திருப்தியுடன் உலவினாள்.

மகாராணி சற்று பதற்றத்திலிருப்பதும், துருவன் சிறைப்பட்டிருப்பதும் நந்திவர்மனைச் சற்றும் பாதித்ததாகவே தெரியவில்லை. வெகு சகஜமாகத் தனது அரண்மனைக் கடமைகளை முடித்தவன் சிற்ப, சித்திரப் பணிகளைக் கவனிக்க, வழக்கம் போலவே வைகுந்தன் ஆலயத்திற்குச் சென்றான்.

ஆனால் விருந்தினர் மாளிகையில் சிறையிருந்த துருவனுக்கு அந்த ஒரு நாளின் பொழுது ஒரு யுகமாகவே தோன்றியது. நாள் முழுவதும் அமைதியின்றி மாளிகையில் உலவியவன், அறைகளிலும், கூடத்திலும் நிறைந்து கிடந்த சிற்பங்களையும், சித்திரங்களையும் வெறித்து வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். அவன் விழிகளுக்கு எங்கேயும் சுரங்க வழிகளுக்கான வாயில்களோ, ரகசிய வழிகளோ தென்படவில்லை. அவன் சென்ற இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்த அந்த யவனமங்கையரும், அவன் கேள்விகளுக்கெல்லாம் கலகலவென்ற சிரிப்பைத் தவிர வேறு பதிலேதும் தரவில்லை.

வெகு சிரமப்பட்டு நாளைத் தள்ளிய துருவனுக்கு, மாலைப் பொழுது வந்து சற்று ஆறுதலளிக்க முயன்றது. தென்றலும், தேய்ந்த நிலவும், நந்தவனத்து மலர்களின் மணமும், மாளிகையைச் சுற்றி அரண்மனைப் பகுதியிலிருந்து ஒலித்த இன்னிசையும் அவன் தவிப்புக்கு சற்று ஆறுதலளிக்க முயன்றன.

இரவும் கவியத் தொடங்கியது. அரண்மனைப் பகுதிகள் மெல்ல மெல்ல இருளில் மூழ்கத் தொடங்கின.

துருவனின் இதயம் வேகமாக ஓடத் துவங்கியது.

(தொடரும்)



# காதல் கிறுக்கன்!

இந்தத் தளத்தை பார்க்கும்போது, உங்கள் கீபோர்டு காதல் மொழி பேசும். மௌஸ் வெட்கத்தால் சிவக்கும். மானிட்டர் இதயம் வடிவில் துடிக்கும். ஆகா அது எந்தத் தளம்? lovingyou.comதான். ரொமான்டிக் ஐடியாஸ், காதல் கடிதங்கள், காதல் கருத்துக்கள், காதல் கவிதைகள், காதல் கதைகள், காதல் ஜாலி விளையாட்டுக்கள், காதல் கிரீட்டிங்ஸ், பரிசுப் பொருட்கள், காதல் ஜோசியம் என 'காதல் கிறுக்கனாய்' உலவுகிறது இத்தளம். 'கற்றுக் கொண்டு காதலிக்க முடியாது. காதலிப்பதால்தான் கற்றுக் கொள்ள முடியும் காதலை!' - வாவ். என்ன ஒரு தத்துவம். காதல்... பிரச்னைகளையும் உள்ளடக்கியது. இத்தளம் அதற்கான பதில்களையும் தருகிறது, காதல் டாக்டராக! பாருங்கள், நீங்கள் காதலிக்காதவராக இருந்தால்கூட, காதலிக்க ஆரம்பித்து விடுவீர்கள், குறைந்தபட்சம் இத் தளத்தையாவது!

(இன்னா ப்ரெண்ஸரே! காதல் 'நெட்'ல மாட்டிக்கினியா! ஓவரா பினாத்துற!)



காதல்.காம் (kaathal.com) அப்படின்னு ஒரு வெப் சைட்டே இருக்குங்க. 'காதல் குறள், காதல் ஓவியம், உயிரே உனக்காக'ன்னு ஏகப்பட்ட கவிதைகள் தமிழில்! ('உன் நெஞ்சம் உன் பக்கம் நிற்பது நியாயம். என் நெஞ்சமும் உன் பக்கமே நிற்கிறதே! இது என்ன நியாயம்?'). பல தமிழ்த் திரைப்படப் பாடல்களை (காதல் பாடல்கள்தான்) ஆங்கில வரி வடிவில் தந்திருக்கிறார்கள். ரொமான்டிக் மூடில், உங்கள் காதலனை / காதலியை எப்படிக் கூப்பிடுவீர்கள்?' என்று ஒரு சர்வே... குட்டி, ஸ்வீட்டி, கண்ணு, டா/டி, டார்லிங்... இவற்றையெல்லாம் தாண்டி ஜெயித்திருக்கும் ரொமான்ஸ் வார்த்தை, 'செல்லம்'. ('செல்லங்கள்' கவனிக்கவும்)

நீங்கள் வாசிப்பைக் காதலிப்பவரா? அதுவும் ரொமான்ஸ் சமாச்சாரம் என்றால் சோறு தண்ணியின்றி வாசிப்பவரா? காதலோடு theromance reader.com-ஐ க்ளிக்குங்க. புதிய காதல் நாவல்கள் பற்றி தகவல்களும், விமர்சனங்களும் கிடைக்கின்றன. பிற பிரிவுகளிலும் இத்தளம் விரிகிறது.






காதலர்களுக்கு : ரொமான்டிக்கா உங்க அமுக்குப் பையனுக்கு / அமுல் பேபிக்கு இ-கார்டு அனுப்ப சில தளங்கள் : www.1lovecards.com, www.lovecards.com, all4love.net, adoringyou.com (ஜொள்ளுல மூழ்கி, உள்ளத்தை 'ஜில்'லுன்னு அனுப்புங்க!)

- ப்ரெளஸர்

**மேஷம்** : சுவையான காதல் சுப மான முடிவோட கல்யாணத்தில் முடிஞ்ச மாதிரி, உற்சாகமான, உல்லாச மான வாரங்க இது. புதுப்புது அறிமுகங் களும், அனுபவங்களும் கிடைக்கக் காத் திருக்கு. பயணங்கள்ல நன்மையும் சந் தோஷமும் கிட்டும். ஆபீஸ்லயும் இது சிறப்பான வாரம். அனுகூலமான திருப் பங்கள் ஏற்படும். தொழில், வியாபாரத் தில் முன்னேற்றமும், கொடுக் கல், வாங்கல்ல அனுகூலமும் உண்டாகும். குடும்பத்தில் குரு பார்வை பூரணமா இருக்கிற தால, சுபகாரியங்கள் கூடி வரும். உடன்பிறந்தவர்களால் சில அனு கூலங்கள் ஏற்படும். பண நெருக்கடி குறை யும். பெண்களுக்கு உற்சாக மனநிலையும், தெய்வீக ஈடுபாடும் கூடும். குலதெய்வப் பிரார்த்தனை நன்மை தரும்.



**ரிஷபம், விருச்சிக ராசிக் காதல் தம்பதி அஜித், ஷாலினிக்கு, இந்த வாரம் தெளிவும் நிம்மதியும் கிடைக்கும்.**



# நடக்குமென்பார்; நடக்கும்!

**ரிஷபம்** : காதல் வசப்பட்டவங்க பெரும்பாலும் நிறைவேறுகிற வரையாவது கடவுள் மேல அதிக நம்பிக்கை வெச்சிருப் பாங்க. அதே மாதிரி உங்க தெய்வீக ஈடு பாடு கூடுற நேரம்க இது. காதலை ஆதரிக் கிற நண்பர்கள் மாதிரி, பிரபு தனவான் களோட ஆதரவு உங்களுக்குத் தெம்பூட் டும். ஆபீஸ்ல இதுவரை இருந்த குழப்பங் கள் மறைஞ்சு, ஒரு தெளிவு பிறக்கும். புதிய முயற்சிகள் வெற்றிபெறும். தொழில், வியாபாரத்தில் புதுக்காதல் மாதிரி ஒரு வேகம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை நில வும். கல்யாணத்துக்குக் காத்திருக் கிறவங்க, முகூர்த்த நாள் பார்க்க ஆரம்பிக்கலாம். பெண்களுக்கு எண்ணம் ஈடேறும் வாரம்.

**மிதுனம்** : 'காதல் ஒண்ணும் கடவுள் இல்லையடா', கல்வியும் ஆராய்ச்சியும் தான் முக்கியம்னு இருக்கிறவங்க, சாதனை படைக்கிற வாரங்க இது. திட்டம் போட்ட படி எல்லாம் நிறைவேறி மகிழ்ச்சி தரும். பயணங்கள்ல மட்டும் எச்சரிக்கையா இருங்க. புது முயற்சிகள் நின்னு நிதா னிச்சு முன்னேறும். ஆபீஸ்ல சுமுகமான சூழ்நிலை நிலவும். வெளியூர், வெளிநாட் டுப் பயணங்கள் சிலருக்கு நேரிடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். எதிர்பாராத திருப்பங்

## அக்னிசர்மா பக்கம்

**பிப்ரவரி 9 முதல் 15 வரை**

களும் சில நேரிடும். குடும்பத்தில் இது வரை இருந்த கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு, ஒற்றுமை நிலவும். பெண்களுக்கு மக்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்** : காதலுக்குத் துணிவும், தன்னம்பிக்கையும், அதிகமா வேணுங்க. அது உங்ககிட்ட கூடுற நேரங்க இது. எதிர்ப்புகள் அடங்கி உற்சாகம் கூடும். புது அறிமுகங்கள் சில கிடைக்கும். ஆபீஸ்ல பொருளாதார அபிவிருத்தி உண்டாகி, உற்சாக மனநிலை நிலவும். சிலருக்கு இடமாற்றம், பதவி உயர்வு கிட்டும். தொழில், வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கல் சரியான சமயத்தில் கை கொடுக்கும். குடும்பத்தில் இருந்த விரோதம், சுபமங்கள நிகழ்ச்சியால ஒற்றுமையா மாறிடும். சொத்து, வழக்கு விவகாரம் வெற்றி பெறும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சி கூட்டும்.

### பரிகாரம்

காதல் என்றாலே ஊடலும் கூடலும் தான். புராணக் கதைகள் முழுவதும் நம் தெய்வங்கள் நிகழ்த்திய ஊடலும் கூடலுமான நிகழ்ச்சிகள் ஆங்காங்கே ஆலயங்களின் தலவரலாறுகளாக எழுதப்பட்டிருக்கின்றன. பிரிந்த காதலர்களை இணைத்து வைக்கும் கடவுளும் ஒருவர் திருநாவலூரரில் இருக்கிறார். முற்பிறவியில் அனிந்திதை - கமலினி என்ற காதலியரை சங்கிலி-பரவை நாச்சியார் என்று மறுபிறவியில் சுந்தரர் அடைய உதவியருளிய இறைவன் இவர். காதலில் வெற்றி பெற, திருமணத்துக்குத் தடையாக இருப்பவை நீங்க, இவரை வந்து வழிபட்டு வேண்டிக் கொண்டால் போதும். காதலர்கள் உடனே புறப்படலாம். திருச்சி - உளுந்தூர்பேட்டை வழியில் இருக்கிறார் இந்த ஈசன்.



**சிம்மம்** : தடுக்க ஆளில்லாத காதல், தாறுமாறா முன்னேறிப்போற மாதிரி உங்க எண்ணங்கள் முன்னேறி, ஈடேறி மகிழ்ச்சி தர்ற நேரங்க இது. எதிர்பாராத சந்திப்பு எப்பவுமே இனிக்கிற மாதிரி, உங்க எதிர்காலம் இனிமையா மாறும். துணிவும் நம்பிக்கையும் கூடி காரியங்களை சாதிக்கும். ஆபீஸ்ல உங்க கோரிக்கை நிறைவேறும். உங்க உழைப்பும் திறமையும் பாராட்டும், பரிசும் பெறும். தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். வரவேண்டிய பணம் தானா வந்து சேரும். கூட்டுத் தொழில்ல அனுகூலமான சூழ்நிலை நிலவும். குடும்பத்தில் பூர்வீகச் சொத்து வந்து சேரும். மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு உற்சாக, உல்லாசமான வாரம்.

**கன்னி** : காதலுக்கு பதில் கிடைக்குமா, கால்ல இருக்கிறது கழண்டு வருமான்னு குழம்பின காதலனுக்கு, கிரீன் சிக்னல் கிடைச்சா மாதிரி ஒரு தெளிவும், உற்சாகமும் கிடைக்கிற வாரங்க இது. எதிர்பாராத பயணமும், பண வரவும் ஏற்பட்டு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். புது முயற்சிகள் ஏதும் பண்ணலாம்கற உத்தேசமிருந்தா தைரியமா தொடங்கலாம். தொழில், வியாபாரம் சுமுகமா நடக்கும்னாலும், புதிய முதலீடுகள்ல கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. குடும்பத்தில் அந்தக் காலத்துக் காதல் மாதிரி அமைதியான முன்னேற்றம் கூடும்.


**துலாம்** : 'கல்யாணப் பரிசு' காதலைக்கூட 'காதலுக்கு மரியாதை' காதலா மாத்துற திறமையும் நம்பிக்கையும் உங்ககிட்ட கூடுற நேரங்க இது. எதிர்ப்பையும், மறுப்பையும் சமாளிச்சு, எதிலேயும் வெற்றிக் கொடி நாட்டுவீங்க. உடன் பிறந்தவர்களால சில அனுகூலங்கள் ஏற்படும். ஆபீஸ்ல நிம்மதியான சூழ்நிலையும், அனுகூலமான நேரமாகவும் தெரிஞ்சாலும், புது முயற்சிகளைக் கொஞ்சம் ஆறப்போட்டு ஆரம்பிக்கறதுதான்

நல்லது. தொழில், வியாபாரத்தில் அரசாங்க, பாங்க் உதவிகள் வந்து சேரும். குடும்பத்தில் இதுவரை எலியும் பூனையுமா இருந்தவங்க, இணை பிரியாதவங்களா மாறிடுவாங்க.

**விருச்சிகம்** : உறவுக்குள்ளயே காதல் வந்து, உரியவங்களும் ஒப்புக்கிட்டா என்ன நிம்மதி கிடைக்குமோ, அந்த நிம்மதி உங்க மனசில நிலவும் வாரங்க இது. காதல் பாதை நம்ம புறநகர் ரோடு போல கரடுமுரடானதுதாங்க. அதனால பயணம்னாலே எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. பண நடமாட்டம் காதலர் பூங்காவா நிறைஞ்சிருக்கும். தொழில், வியாபாரம், கல்யாண வீடு போல கலகலப்பா இருக்கும். கூட்டுத் தொழில்ல முன்னேற்றமும், லாபமும் கூடும். குடும்பத்தில் குதூகலம் நிரம்பி இருக்கும்.

**தனுசு** : எதிர்ப்பில்லாத காதல்ல சூடும் இருக்காது, சுவையும் இருக்காது. எல்லாத்தையும் சமாளிச்சு ஜெயிச்சா, கிடைக்கிற மகிழ்ச்சியே தனிதான். அதனால சிறு பிரச்னைகள், தடங்கல்கள்னு ஆரம்பத்தில் இருக்கிறதைப் பார்த்து தளர்ந்துடாதீங்க. வாரப் பிற்பகுதியில எல்லாம் சரியாயிடும். ஆபீஸ்ல உழைப்புக்கும் திறமைக்கும் ஏற்ற பலன்கள் கிட்டும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு சில சிக்கல்கள் வந்து போகும். எச்சரிக்கையா இருந்தா சுலபமா தவிர்க்கலாம். கொடுக்கல், வாங்கல்ல மட்டுமில்லாம பேச்சிலயும் கவனமா இருங்க, போதும். குடும்பத்தில உற்சாகம் கூடும்.

**மகரம்** : 'நான்கு கண்கள் சேர்ந்து காணும் ஒரே கனவு'ன்னு காதலைச் சொன்ன கவிஞர் மாதிரி, உங்க துணிவு, தன்னம்பிக்கை, தெய்வீக ஈடுபாடு, முயற்சி எல்லாம் சேர்ந்து வெற்றிக் கொடி கட்டுற வாரங்க இது. இதுவரை சந்தர்ப்பம் கிடைக்காத காதலா, உங்களை நெருங்க முடியாத பொருளாதாரம், இனிமே ஒட்டி உறவாடி மகிழ்ச்சி தரும். ஆபீஸ்லேயும் இதுவரை தாமதமாகி வந்த கோரிக்கைகள் கவனிக்கப்பட்டு நிறைவேறும். சிலருக்கு பதவி உயர்வும் இடமாற்றமும் கிடைக்கலாம். தொழில், வியாபாரம் பழைய சிக்கல்களைத் தாண்டி முன்னேறும். குடும்பத்தில் தடைப்பட்ட சுபகாரியங்கள் மளமளன்னு சுபவேளையை நோக்கி நடக்கும். வீடு, வாகன யோகம் கூடி வரும்.



**கர்ப்பக் கிரகத்தை**
**மூன்று முறை சுற்றுவது**
**பக்தனின் கணக்கு...**
**நீ வந்து போகும்வரை**
**சுற்றிக் கொண்டிருப்பது**
**காதலன் கணக்கு!**

காதல் டைரிக் குறிப்புகள்...

**எம்.ஜி.கன்னியப்பன்**

**கும்பம்** : ஆட்டோகிராஃப் காதலா மறக்க வேண்டியதைக் கூட, உங்க அதிரடித் திறமையால ஆனந்தமா மாத்திடுவீங்க. திறமையும் அறிவும் கைகொடுக்கிற நேரம் இது. வி.ஐ.பிக்கள் ஆதரவும், எதிர்பாராத பண வரவும் உங்களுக்கு இந்த வார போனஸ். ஆபீஸ்ல இருந்த பிரச்னைகளையும் உங்க திறமை சமாளிக்கும். தொழில், வியாபாரத்தில் கொஞ்சம் எச்சரிக்கையோட கொடுக்கல் வாங்கலைக் கையாண்டா போதும். நஷ்டமும் குறையும், லாபமும் ஓரளவு கூடும்.

**மீனம்** : அன்னம், மேகம், தோழி, கடிதம்னு மெல்ல வளரும் காதல் போல இல்லாம, ஈமெயில்ல அதிவேகமா வளர்ற காதல் மாதிரி, வேகமும், முன்னேற்றமுமான வாரங்க இது. புது அறிமுகம் சிலது கிடைச்சு உற்சாகப்படுத்தும். தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடுன்னு உங்க மன நிலை திருப்தியா இருக்கும். ஆபீஸ்ல முக்கியமான காரியங்கள் ஈடேறும். புதிய முயற்சி வெற்றி தேடித் தரும். தொழில் வியாபாரத்துல கடன் தொல்லைகள் தீர்ந்து, பொருளாதார முன்னேற்றம் கூடும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும்.

# காதல் பரிசு

**காதல் இல்லாத மனசிருக்கும். ஆனால் பரிசில்லாத காதல் இருக்குமா?**

**காதல் திருமணம் செய்த இருவரிடம், 'நீங்கள் பாதுகாக்கும் அன்புப் பரிசு எது?' என்று கேட்டோம். வெட்கப்பட்டுக்கொண்டே கூறினர்...**

**பாடகி மால்குடி சுபா:**

"அப்போ எனக்குக் கல்யாணமான புதுசு. நானும் என் கணவரும் ஷாப்பிங் போனோம். எனக்குத் தங்க நகைகளை விட, வெள்ளி நகைகள்னா ரொம்ப இஷ்டம். நாங்க போனதும் ஒரு வெள்ளி ஜுவல்லரி. அங்கிருந்த ஒரு வெள்ளி நெக்லஸ், வளையல் ரெண்டும் சேர்ந்து செட்டா இருந்ததைப் பார்த்ததும் எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதைப் புரிஞ்சுக்கிட்டு என் கணவர் வாங்கித் தரலாம்னு நினைக்கிறப்போ, கையில அந்த அளவுக்குப் பணமில்ல. உடனே என்கிட்ட இருந்த 2500 ரூபாய்ல அதை எனக்குப் பரிசாக வாங்கித் தந்தார். கூடவே அந்தப் பணத்தை வீட்டுக்குள்ள நுழைஞ்ச உடனேயே தந்துடறேன்னு பிராமிஸ் பண்ணினார். சொல்லி பதினான்கு வருஷமாச்சு... இதுவரைக்கும் தரல... (சிரிக்கிறார்). ஆனாலும் இந்தக் காதல் பரிசு எனக்கு ரொம்ப சந்தோஷத்தைத் தந்த பரிசு."



• கணவருடன் சுபா...

• வெள்ளி நகை

**டி.வி. நடிகர் வரதராஜன்:**

"எனக்கு வேட்டி சட்டை போடறதைவிட, ஷெர்வானி போடறதுன்னா ரொம்பப் பிடிக்கும். 2003-ல ஒரு டிராமாவுக்காக துபாய்க்குப் போயிருந்தோம். என்கூட என் மனைவியும் வந்திருந்தாங்க. அந்த புரோக்ராமோட ஆர்கனைசர் போட்டிருந்த ஷெர்வானி, என்னை ரொம்பவே கவர்ந்துடுச்சு. மேடையிலேயே அதைப் பத்திச் சொன்னேன். இது நடந்தது 2003 ஜனவரியில. இதை அப்போ கவனிச்சிருந்த என் மனைவி உஷா, அதே மாதிரி ஒரு ஷெர்வானி எனக்கு வாங்கித் தரணும்னு எங்கெல்லாமோ தேடி, கடைசில டெல்லியில சன்டே மார்க்கெட்ல பார்த்து வாங்கிட்டு வந்து எனக்கு பரிசாத் தந்தாங்க. அந்த ஷெர்வானி நான் துபாய்ல பார்த்த அதே கலர், அதே மெட்டீரியல். எங்க ரெண்டு பேருக்கு இடையே உள்ள அன்புக்கு இது ஒரு உதாரணம்னு, இந்த ஷெர்வானியை நான் ரொம்ப பத்திரமா வச்சிருக்கேன்."



• ஷெர்வானி அணிந்து வரதராஜன் - மனைவியுடன்...

• **முராரி**

படங்கள் : **ராஜன்**

# யார் குழந்தைகள்..?

## ஆசிரியர் பக்கம்

பிள்ளைப் பேற்றுக்கு நம் நாட்டில் தரப்படும் அளவுக்கு உணர்வுபூர்வமான முக்கியத்துவம் வேறு தேசத்தில் கிடையாது. குழந்தை பெற விரதம், பிரார்த்தனை, யாகம், யந்திரம் ஒரு பக்கம்... செயற்கைக் கருத்தரிப்பு அல்லது மருத்துவ உதவியுடன் கூடிய கருத்தரிப்பு முயற்சிகள் இன்னொரு பக்கம். தவம் செய்யச் சொன்னால்கூட, நாம் தயார்தான்.

ஆனால், பெற்ற பிள்ளைகளைப் பேணுவதில், இந்த நாட்டினருக்கு இருப்பதைப் போன்ற அலட்சியம் வேறெங்கும் காணக் கிடைக்குமா என்பதும் சந்தேகம்தான்!

சுனாமி பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கென வந்து குவிந்த பழைய துணிமணிகள் நாகூரில் மலை போல் வீதியில், வெட்ட வெளியில் கிடக்க, அவற்றைத் தூக்கிப் போட்டு விளையாடியிருக்கிறார்கள் குழந்தைகள் சிலர். எதிர்பாராதவிதமாக, துணிகள் சரிந்து, தஸ்தகீர் மாலிக் என்ற சிறுவன் மீது விழ, அவன் மூச்சுத் திணறி இறந்து போயிருக்கிறான்.

'குழந்தையைக் காணோமே...' என்று தேடிய பெற்றோர், பழைய துணிக்குவியலில் அவன் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்!



ஹைதராபாத்தில் ஜனவரி மாதம் நடந்த காற்றாடித் திருவிழாவில், மூன்று சிறுவர்கள் செத்துப்போயிருக்கிறார்கள்!

அறுந்து போன பட்டத்தைத் துரத்திச் சென்ற ஐந்து வயதுச் சிறுவன், மாடியிலிருந்து கீழே விழுந்து மாண்டுவிட்டான். கிருஷ்ணா என்ற இன்னொரு ஐந்து வயதுச் சிறுவன், இதே மாதிரி காற்றாடியைத் துரத்தப் போய் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்து மாண்டு போனான்.

இரண்டு வயதுக் குழந்தை... தனது அண்ணன்மார் பட்டத்தைத் துரத்திக்கொண்டு ஓடுவதைப் பார்த்துத் தானும் ஓடியிருக்க வேண்டும்... ஆட்டோ மோதியதில், அவன் ஓட்டமும் மூச்சும் ஒரே கணத்தில் நின்று போயின!

பள்ளி வேன்களில் ஏறும்போதும் இறங்கும்போதும், குழந்தைகள் அந்த வேன்களின் சக்கரங்களிலேயே சிக்கி இறந்திருக்கிறார்கள், சென்னையில். வீதிகளில் திறந்து கிடக்கும் பாதாளச் சாக்கடைகள் குழந்தைகளை பலி வாங்கியிருக்கின்றன. சுனாமியால் அனாதையாக்கப்பட்ட குழந்தை காணாமல் போயிருக்கிறது.

பிள்ளை இல்லாத வாழ்க்கையை அர்த்தமற்றதாக நினைக்கிற நமது நாட்டில்தான், மிக அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கல் உடைக்கிறார்கள்; தீக்குச்சி அடுக்குகிறார்கள்; சின்ன விரல்களால் மட்டுமே செய்யக்கூடிய லக்னௌ சிக்கன் எம்ப்ராய்டரியும், காஷ்மீர் கம்பளங்களும் உருவாக உழைக்கிறார்கள்... கனவுகளையும் படிப்பையும் தொலைத்துவிட்டு, கால் வயிற்றுச் சாப்பாட்டுக்கு அலைகிறார்கள்.

'உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல...' என்பது கலீல் கிப்ரானின் மொழி. 'வாழ்க்கையின் தணியாத ஏக்கத்துக்கு சிருஷ்டி வழங்கும் ஆதுரம் மிக்க பதிலே உங்கள் குழந்தைகள்' என்கிறார் கிப்ரான்.

நாமோ, சமுதாய அங்கீகாரத்துக்கு ஆசைப்பட்டு குழந்தை பெற்றுக் கொள்கிறோம். அவர்கள் கடத்தப்பட்டால், அதை அரசியலாக்கவும் தயங்குவதில்லை.

பதினாறு நாட்கள் பிணைக்கைதியாக இருந்துவிட்டு மீண்டிருக்கும் பீஹார் சிறுவன் கிஸ்லே குப்தா சொல்லியிருப்பது கவனத்துக்குரியது: "கடவுள் அருளால்தான் நான் மீண்டேன்" என்றான் அவன். குழந்தைகளுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது, யாரை நம்பலாம் என்று! ○

# லாப மழை பொழிகிறது!

மத்திய அரசுக்குப் பணமும் வேண்டும், அதே நேரத்தில் இடது சாரி கட்சிகளையும் அணைத்துக் கொண்டு போக வேண்டும். என்ன செய்யலாம் என்று யோசித்த மத்திய மந்திரி சபையின் பொருளாதார விவகாரக் குழு, ஒரு முக்கிய முடிவை எடுத்திருக்கிறது. பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் பங்கை 51 சதவிகிதத்திற்கு குறைவில்லாமல் வைத்துக்கொண்டு, மீதிப் பங்குகளை விற்கலாம் என்று இந்தக் குழு முடிவு செய்திருக்கிறது. இந்த விற்பனையிலிருந்து வரும் வருவாயை, தேசிய முதலீட்டு நிதியகம் என்று பெயரிட்டு (National Investment Fund), அந்தப் பணத்தை பல பொதுநலக் காரியங்களுக்கும் மற்றும் லாபகரமாக இயங்கும் சில பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டுத் தேவைக்கும் பயன்படுத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய முதலீட்டு நிதியகம் இந்த வருஷம் ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. அந்தப் பங்குகள் விற்பனைக்கு வரும்போது அவற்றைப் பற்றி பார்ப்போம்.

இதைத் தொடர்ந்து அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தபடி Maruthi Udyog மற்றும் Bharat Heavy Electricals பங்குகளின் விற்பனையைத் தள்ளிப் போட்டிருப்பதாக ப.சிதம்பரம் அறிவித்திருக்கிறார்.


## டிப்ஸ்

சென்ற சில நாட்களாக பத்திரிகைகளில் பல கம்பெனிகளின் ஒன்பது மாத செயல்பாடு (ஏப்ரல் 1, 2004 முதல் டிசம்பர் 31, 2004 வரை) பற்றிய விவரங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றின் படி, பல கம்பெனிகள் நல்ல லாபத்துடன் செயல்பட்டிருப்பது தெரிகிறது.

ஒரு பொருளாதார ஆங்கில தினசரியில், சுவையான ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி இதுவரையில் வெளிவந்த பல கம்பெனிகளின் செயல்பாடுகள் மிக நன்றாக இருப்பதாகவும், இதில் மிகப் பெரும்பான்மையான 344 கம்பெனிகள், இந்த ஒன்பது மாதத்தில் 28370 கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டி உள்ளதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இதனால் தற்போது பங்கு மார்க்கெட்டில் பல முன்னணிக் கம்பெனிகளின் பங்குகள் ஏறத் தொடங்கியிருக்கின்றன.

ONGC எனப்படும் Oil and Natural Gas Corporation கம்பெனி, டிசம்பர் 31, 2004-டன் முடிவடைந்த ஒன்பது மாதத்தில், அதற்கு முந்தைய பன்னிரண்டு மாதங்களைவிட அதிக நிகர லாபம் ஈட்டியிருக்கிறது. இந்த கம்பெனியின் பங்குகளை வாங்கலாம்.

(அடுத்த வாரம் பார்ப்போம்)



வி.கோபாலன்

# பதுங்கும் புலி!

சமீபகாலமாக சத்தமின்றி இருக்கிறார் வைகோ. என்னதான் செய்கிறார் என்று விசாரித்தபோது, ''எங்கள் பொதுச் செயலாளர் ஆக்கபூர்வமான கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். மொத்தம் உள்ள 35 கட்சி மாவட்டங்களுள், 12 மாவட்டங்களில் ஒன்றிய அளவில் தொண்டர்களைச் சந்தித்து முடித்து விட்டார். ஆனால், அவரது நிகழ்ச்சிகளை தோழமைக் கட்சியின் தொலைக்காட்சி ஒளிபரப்புவதில்லை. மற்ற தனியார் தொலைக்காட்சிகளிலும், அவரது நிகழ்ச்சிகளைக் காட்ட முடியாத அளவுக்குச் சங்கடங்களை உருவாக்குகிறார்கள். ஆனால், எங்கள் கூட்டணிக் கட்சிகள் நடத்தும் சின்ன நிகழ்ச்சிகளைக் கூடக் காட்டுகிறார்கள். எங்கள் தொண்டர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். ஆனால், மிகவும் பொறுமை காட்ட வேண்டியிருக்கிறது. இந்தக் கூட்டணியிலே தொடர்ந்து சட்டமன்றத்தில் நுழைய வேண்டுமே'' என்று பெருமூச்சுடன் சொன்னார் ஒரு மூத்த ம.தி.மு.க. தலைவர். ம்... புலி பதுங்குவது இதற்குத்தானா!



கலைஞர் தலைமையில் சமீபத்தில் நடந்த பாலங்கள் அடிக்கல் நாட்டு விழாவில் தங்களை அறவே புறக்கணித்து விட்டார்கள் என்று பொருமுகிறது காங்கிரஸ் தரப்பு. "மத்திய அரசின் நிதியில் கட்டப்படும் இந்த மேம்பால விழாக்களை, ஏதோ தி.மு.க. நிகழ்ச்சி போல நடத்தியிருக்கிறார்கள். ஒன்றிய அளவில் உள்ள தி.மு.க. பிரமுகர்களின் பெயர்களைக் கூட பளிச் சென அழைப்பிதழில் போட்டிருந்தார்கள். ஆனால் ஒரு காங்கிரஸ் அமைச்சரைக் கூட அழைக்கவில்லை" என்று முணுமுணுக்கின்றனர். "விழாக்கள் நடந்த ஏரியாக்களில், காங்கிரஸுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை. இந்தப் பொருமல் ஒரு பக்கம் இருக்கட்டும். மத்தியில் உள்ள எங்கள் துணை அமைச்சர்களுக்கு அதிகாரம் எதுவும் கொடுக்காமல், டம்மியாக வைத்திருக்கிறார்களே காங்கிரஸ் கேபினட் அமைச்சர்கள்... இந்த வயிற்றெரிச்சலை யாரிடம் போய்ச் சொல்வது" என்று எதிர்க்கேள்வி கேட்கிறது தி.மு.க. வட்டாரம்.

டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் இணைந்து தமிழ் - தமிழர் நலன் என்ற அடிப்படையில் ஏராளமான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். மேல் மட்டத்தில் இவ்வாறு இவர்கள் இணைந்து பாடுபட்டாலும், கிராமங்களில் இன்னமும் தொண்டர்கள் மத்தியில் ஜாதி ரீதியான மோதல்கள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றனவாம். 'பா.ம.கவுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது' என்று சிறுத்தைத் தொண்டர்கள் தொடர்ந்து திருமாவளவனுக்குக் கடிதம் எழுதி வருகிறார்கள். "இவர்கள் இருவரும் இணைந்து செயல்படுவதன் நோக்கம் தெரிந்ததுதான். வரும் சட்டமன்றத் தேர்தலில், எங்கள் கூட்டணியில் அதிக இடங்களைப் பெற வேண்டும் என்ற முனைப்பில்தான் இவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இதை எப்படிச் சமாளிப்பது என்று எங்களுக்குத் தெரியும்" என்கிறது தி.மு.க. தரப்பு.

- கௌசி

தேவிஸ்ரீ பிரசாத்... தான் இசையமைத்த காலத்தில் தமிழ் சினிமா உலகத்தால் கண்டு கொள்ளப்படாமல் ஒதுக்கப் பட்டு, தெலுங்குத் திரையுலகினரால் 'நம்பர் ஒன்' மியூசிக் டைரக்டராக கண்டெடுக்கப் பட்டவர். புதிய வேகத்தோடு மறுபடி தமிழுக்குத் திரும்பி சச்சின், மாயாவி, மழை என மூன்று மெகா பட்ஜெட் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருப்பவரை பிஸியான ஒரு காலை நேரத்தில் சந்தித்தோம்....

**நீண்ட நாள் கழித்து தமிழில் ரீ - எண்ட்ரி... எப்படி உணர்கிறீர்கள்?**

"ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன். இனிமே தமிழ்ல பண்ணினா ஒண்ணு பெரிய பேனர், இல்லன்னா பெரிய ஹீரோ படத்துக்கு ஒர்க் பண்ணி, பெரிய அளவுல ரீச் ஆகணும்னு ரொம்பப் பொறுமையா இருந்தேன். அதுக்குப் பரிசாத்தான் இப்போ பெரிய பேனர், பெரிய ஹீரோ எல்லாமே கரெக்டா அமைஞ்சிருக்கு... இந்த வாய்ப்பை ஒழுங்காப் பயன்படுத்தணும்னு கடினமா ஒர்க் பண்ணிட்டு இருக்கேன்."

**'சச்சின்' விஜய், 'மாயாவி' சூர்யா, 'மழை' ரவி மூன்று பேரும் பெரிய ஹீரோக்களாக இருப்பதால் உங்கள் பொறுப்பு கூடியிருக்கிறதா?**

"நிச்சயமாக. மூணு படத்தையுமே ஹிட் பண்ண வைக்கணும்ங்கிற கட்டாயம் இருக்கறதால பொறுப்பு கூடுதலா இருக்கு. மூணு பேரும் பெரிய ஹீரோக்களா இருந்தாலும் அடிக்கடி போன் பண்ணி டியூன் பத்தி என்கூட டிஸ்கஸ் பண்ணுவாங்க. நல்லா இருந்தா பாராட்டுறாங்க."



**நீங்கள் தமிழில் இசையமைத்த ஐஸ், இனிது இனிது காதல் இனிது இரண்டுமே தோல்விப் படங்கள். இந்நிலையில் எப்படி உங்களை நிரூபித்து மீண்டும் தமிழ்ப்பட வாய்ப்பைப் பெற்றீர்கள்?**

"அந்த ரெண்டு படமும் சரியா போகலைன்னாலும், மியூஸிக் நல்லா வந்திருந்தது. தெலுங்குல சமீபத்துல நான் இசையமைச்ச வர்ஷம் மற்றும் ஆர்யான்னு ரெண்டு படங்கள் சூப்பர் மியூசிக்கல் ஹிட். அதைப் பார்த்துத்தான் எனக்குத் தமிழ்ப்பட வாய்ப்பை கொடுத்திருக்காங்கன்னு நினைக்கிறேன்."

**தெலுங்கில் நீங்கள் இசையமைத்த பதினாறு**

# “காதல் இசைக்கப்பட வேண்டியது!”

## -தேவிஸ்ரீ பிரசாத்



**படங்களில், பத்துக்கும் மேற்பட்டவை காதல் படங்களாமே... அப்படி என்ன காதல் மீது காதல்...?**

*(சிரிக்கிறார்)* “காதல் வெறுமனே பேசக்கூடிய, எழுதக்கூடிய விஷயமில்லை... இசைக்கப்பட வேண்டிய, பாடப்பட வேண்டிய விஷயம்... காதல் இல்லைன்னா இசை இல்லைன்னு நினைக்கிறவன் நான்... அதனாலதான் அந்த அளவுக்குக் காதலுக்கும், காதல் பாடல்களுக்கும் முக்கியத்துவம் தர்றேன்... இப்போ தமிழ்ல பண்ற மூணு படத்துலயும், காதல் பாடல்கள் மெஜாரிட்டியா இருக்கு... குறிப்பா சச்சின், மழை முழுக்க முழுக்க காதல் சப்ஜெக்ட். ‘மழை’ படத்துல வைரமுத்து சாரோட காதல் வரிகள் சும்மா பின்னி எடுத்திருக்கு... மூணு படத்துலயுமே காதல் பாட்டுகள் சூப்பர் டூப்பர் ஹிட்டாகும்னு நம்பிக்கை இருக்கு.”

**தமிழ் சினிமா உங்களைத் தாமதமாகக் கண்டுகொண்ட வருத்தமிருக்கிறதா?**

“என்னடா, நாம பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டுல படம் பண்ண முடியலையேன்னு வருத்தம் லேசா இருந்துச்சு. ஆனா கட்டாயம் வாய்ப்பு வரும்னு நம்பிக்கையா இருந்தேன்; தொடர்ந்து கடினமா உழைச்சேன். இன்னிக்கு பலன் கிடைச்சிருக்கு.”

**உங்களுக்கும் மற்ற இசையமைப்பாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

“நான் கவிதை எழுதுவேன். தெலுங்கில் சிரஞ்சீவி சாருக்கு நான் எழுதின பாட்டு சூப்பர் ஹிட். பத்ரி படத்துல ‘ஏஞ்சல் வந்தாளே....’ன்னு ஒரு மெலடி சாங் பாடியிருக்கேன். என் மியூஸிக்ல நிறையப் பாட்டுகள் தெலுங்குல பாடியிருக்கேன். ஓரளவுக்கு நல்லாவே மாண்டலின் வாசிப்பேன். ஏன் ‘நல்லாவே’ன்னு சொல்றேன்னா, என் குரு மாண்டலின் ஸ்ரீநிவாஸ். அப்புறம் எந்தக் காரணத்துக்காகவும் மியூசிக்ல காம்ப்ரமைஸ் பண்ணிக்க மாட்டேன். ஒரு பாட்டைச் சொல்லி அதே மாதிரி வேணும்னு தொந்தரவு பண்ணினா, என்னால் முடியாதுன்னு தெளிவா சொல்லிடுவேன். சிம்பிளா சொல்லணும்னா, என்னை என் வழில விட்டா, உண்மையிலேயே எதிர்பார்க்கறதைவிட நல்லா செய்து தருவேன்.”

**உங்களுடைய இலக்கு என்னவாக இருக்கிறது?**

“தேவிக்கு வாய்ப்புக் கொடுத்தா சின்சியரா ஒர்க் பண்ணுவான்... மியூஸிக்கும் நல்லா பேசப்படற மாதிரி வரும்னு ஓரளவுக்கு நம்பிக்கையை சம்பாதிச்சிருக்கேன்னு நினைக்கிறேன்... அதே மாதிரி படத்தையும் காப்பாத்திடுவான்னு நம்பிக்கை வந்தா ரொம்ப சந்தோஷம்.”

**- முராரி**

படங்கள் : **ராஜன்**

✉ அனுராதா ரமணன் எழுதிய கதையைத்தான் படிக்கிறோமே தவிர, அனுராதா ரமணனின் சொந்தக் கதையை அல்ல. நதி மூலம் ரிஷி மூலம் பார்க்கக் கூடாது. கதையைத்தான் பார்க்க (படிக்க) வேண்டும்.

உமரி பொ.கணேசன், மும்பை - 37

✉ ஜயேந்திரர் கைதுக்குப் பிறகு அனுராதா ரமணன் கூறிய சம்பவங்கள், அவரது தனிப்பட்ட அனுபவங்களாகவே கருதப்பட வேண்டும் என்றும், இதனால் தரமான தமிழ்ப் பத்திரிகை வாங்குவதை நிறுத்துதல் என்பது, கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரானது என்றும் நீண்ட கால



## மாம் ஃப்ரம் இண்டியா...

வாசகர்கள் உணர வேண்டும்.

சேலம், தமிழ்மணி சுசீந்திரன்

✉ கோயிலுக்குப் போகிறோம், நமக்கு வேண்டாதவர் அங்கிருக்கிறார். அதற்காக நாம் சாமி கும்பிடாமல் திரும்பி விடுகிறோமா என்ன? அனுராதா ரமணனின் தொடரைப் படிப்பதை வேண்டுமானால் தவிர்த்து விடலாம். ஆனால், கல்கி இதழையே வாங்கப் போவதில்லை என்பது சரியான முடிவல்ல...

அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ அனுராதா ரமணனின் தொடரை வெளியிட்டதன் மூலம், 'கல்கி' நேர்மையையும், பத்திரிகை தர்மத்தையும் காப்பாற்றியிருக்கிறது. ஆனால், இந்த நேர்மையான செயலே, 'கல்கியை இனி படிக்கப் போவதில்லை' என்ற முடிவை சில வாசகர்கள் எடுக்கக் காரணமாகியிருப்பது துரதிருஷ்டமே. காலப்போக்கில் 'கல்கி'யின் நேர்மையை உணர்ந்து, தங்கள் முடிவை வாபஸ் பெறுவார்கள் என்று நம்புவோம்!

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

✉ அனுராதா ரமணனின் தொடரைப் பிரசுரிக்கும் முடிவு முன்பே எடுக்கப்பட்டது என்கிற விளக்கம்கூட அவசியமில்லை. தங்கள் நடுநிலையை ஆதரிக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் இருக்கிறார்கள்.

திருச்சி, பி.வி.குப்புஸ்வாமி

✉ 1960ல் இருந்தே கல்கியின் வாசகனான நான், அனுராதா ரமணன் எழுதும் தொடர்கதையை வெளியிடுவதால் கல்கியை வாங்கமாட்டேன் என்று சொல்லமாட்டேன். அப்படிச் சொன்னால், 'அனுராதா ரமணன் வாழும் தமிழ்நாட்டில் மட்டும் நீ வாழலாமா?' என்று எனது மனசாட்சி என்னை விரட்டும்.

லோயர் அணைக்கட்டு, பி.இராஜேந்திரன்

✉ தொடர்ந்து அனுராதா ரமணனின் படைப்புகளைப் பிரசுரியுங்கள். எங்கள் ஆதரவு எப்போதும் 'கல்கி'க்குத் தொடரும்.

சென்னை - 78, வி.எஸ். அனந்த ராமன்

✉ அனுராதா ரமணனின் எழுத்தைப் பிரசுரிப்பதால் கல்கியைப் படிக்க மாட்டேன் என்பது தவறு. கல்கியின் புனிதம் அனுராதா ரமணனின் எழுத்தால் கெடாது. படிக்க மறுப்போர் யோசிக்க வேண்டும்!

பேரங்கியூர், இரா. வேணுகோபால்

✉ சுனாமியை நினைத்து வருந்தினால் கடல் அழகை ரசிக்க முடியுமா என்ற ஆசிரியரின் முடிவுரை ஆணித்தரமானதே!

சென்னை - 88, வே. முருகேசன்

## பிடி சாபம்!

✉ 'கவிதை ஸ்பெஷலில்' வந்த பெண் கவிஞர்களின் 'ஹைக்கூ சந்திப்பு' கட்டுரையைப் படித்து, கல்கியில் இப்படி ஒரு பேட்டியா என்று வருந்தி வியப்புற்றேன். மொழியால் அடையாளப்படுத்தப்பட்ட இந்தப் பெண் கவிஞர்கள் கேணக் கேள்விகளுக்குப் பதில் கூறியதை கண்டிக்கிறேன். எங்கள் மன உணர்வுகளைக் காயப்படுத்திய கல்கிக்கு கொடிய நரகம் வாய்க்கக் கடவதாக!

திருவண்ணாமலை, தி. பரமேசுவரி




✉ கல்கியின் கேள்விகளுக்கு, செம்மொழியை நுனிநாக்கில் நர்த்தனமாடவிட்ட, வைரமுத்துவைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. முடவனுக்குக் கிடைத்த தேன் துளிபோல ருசித்தோம்.

புரசைவாக்கம், பி. வைஷ்ணவி

✉ 'கவிதை ஸ்பெஷலில்' பக்கத்திற்குப் பக்கம் அழகான கவிதைகளும், கதைகளும் மனதை சிறகடிக்கச் செய்து விட்டன!

ஆதம்பாக்கம், எஸ்.விஜயலக்ஷ்மி

✉ 'ஹைக்கூ சந்திப்பு!' படு வித்தியாசமாய் அமைந்தது. எங்களின் 'ஹைசவுண்ட்' கைத்தட்டலை வெகுவாய் பெற்று ஜமாய்த்தது.

மதுரை - 16, பி.ராஜசேகரன்

# ஃப்ரம் ரீடர்ஸ்!

✉ எங்களைப் போன்ற வாசகர்களாலும் பத்திரிகைகளாலும் பிரபலமடைந்தவர்தான் அனுராதா ரமணன். அப்படிப்பட்டவர் தமக்கு ஏற்பட்ட அநீதி உண்மையென்றால், அச்சமில்லாமல் அப்போதே எதிர்கொண்டிருக்கலாமே... அரசியல்வாதிகளோடு சேர்ந்துகொண்டு இப்பொழுது ஏன் குற்றச்சாட்டை எழுப்ப வேண்டும்? அந்தக் கோபம் தணியும் முன் அவர் எழுத்தை கல்கியில் படிக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

சென்னை - 117, ஆர்.நாகராஜன்

✉ அனுராதா ரமணன் தொடர் குறித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை. கதையின் கருவோ, ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவோ, கல்கி வாசகர்கள் கதையை வரவேற்பார்கள் என்ற சமாதானங்களோ, எல்லாம் சப்பைக்கட்டுகளாகத்தான் தோன்றுகின்றன.

சென்னை - 42, ம.சு.கிருஷ்ணமூர்த்தி

✉ தாங்கள் குறிப்பிட்டுள்ள சுனாமி கடலலைகளால் பாதிக்கப்பட்டவர்கள், அந்த ஆபத்திலிருந்தும், அதிர்ச்சியிலிருந்தும் மீண்டு, அலைகளின் அழகையும் இனிமையையும் அனுபவிக்க, ரசிக்க, தகுந்த அவகாசம் தேவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 93, வி. கிருஷ்ணன்

✉ அனுராதா ரமணனின் தொடர் குறித்து ஆசிரியர் பல காரணங்களைக் கூறினாலும், எண்ணற்ற வாசகர்களின் மனத்தாங்கலுக்கு அது வடிகாலாகாது.

திருப்பூர், சாமி. சுப்ரமணியம்

✉ ஆசிரியர் பக்கம் வாசித்தேன். உங்களை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தாலும் தாற்காலிகமாக, உண்மை நிலை வெளிப்படும் வரை அனுராதா ரமணனின் எழுத்துக்களைப் பிரசுரம் செய்வதைத் தள்ளி வைக்கலாம் என்று தோன்றுகிறது.

சென்னை - 90, என். சீதாராமன்

✉ பல மாதங்களுக்கு முன்னரே அனுராதா ரமணனின் தொடரை வெளியிட முடிவெடுத்து இருந்தாலும், அவரது குற்றச்சாட்டு வெளியான பின், அந்த முடிவை மாற்றி, பிரசுரிக்காமல் இருந்திருக்க வேண்டும்.

பெங்களூர், சுலோசனா சுந்தரேசன்

கல்கி வழங்கும்

# சென்னை ஸ்கேன்


## செல்லமே!


உங்கள் செல்லங்களுக்கு காதலர் தினப் பரிசாக என்ன கொடுக்கலாம்? சென்னை 'லேண்ட் மார்க்'கில் வலம் வந்தோம் – உங்களுக்கு டிப்ஸ் கொடுக்க.


1. சமர்த்தாக இருக்கும் 'ஐ லவ் யூ' சொல்லும் கரடி ரூ.89லிருந்து கிடைக்கிறது.
2. கிட்டத்தட்ட 3 அடி உயரமுள்ள ஆர்ச்சிஸ் கார்டின் விலை ரூ. 245 மட்டுமே.
3. கை நீட்டி அழைக்கும் பெரிய்...ய இதயத்தின் விலை ரூ. 999.
4. 'பிங்க் பியூட்டி' ஹார்ட் குஷனின் விலை ரூ. 499.
5. பாலிஸ்டோனில் ஆன காதல் கரடி பொம்மைகளின் விலை ரூ. 50லிருந்து 500 வரை. ஜோக்கர் பொம்மையும் அதே வகை தான்.

*(காதல் 'காசு' பார்க்காது. உண்மைதானே!)*

- முகில்









# லவ் பூக்கும் ஓசை!

"லவ் பூக்கும் ஓசை, அதை கேக்கத்தான் ஆசை...", "ஊலல்லா லவ் லலல்லா..."– என்னப்பா, ஒரு மாதிரி பார்க்கறீங்களா? என்ன செய்யறது! இந்த வாரம் லவ் ஸ்பெஷல்னு ஆசிரியர் சொன்னவுடனே, இந்த மாதிரி பாட்டைத்தான் நான் ஹம் பண்ணிக்கிட்டிருக்கேன். அது சரி, நீங்க லவ் பூக்கும் ஓசையைக் கேட்டிருக்கீங்களா? ஓ.கே கம் அண்ட் ஜாயின் மீ.

'வாழ்க்கை ஒரு பூ. காதல் அதுல இருக்கிற தேன்' இதைச் சொல்றவர் விக்டர் ஹியூகோ. 'அதெல்லாம் கிடையாது. காதல்தான் பூ' அப்படிங்கறாரு டி.எச்.லாரன்சு (அப்படிப் போடு). இந்தப் பூ எப்ப வேணாலும், எங்க வேணாலும் ஒரு குட்டி ஹாய் சொல்லிட்டுப் பூத்திடுமாம். எங்கே பூக்குதோ, அங்கேயே அதை பறிச்சுக்கலாமாம். ச்சோ ச்வீட் பூ... எங்க ஏரியாவில இன்னும் இந்தப் பூ பூக்கல. வாட் அபவுட் யூ?

"நான் காதல்ல எல்லாம் விழலை டாடி. இந்த புவியீர்ப்பு விசைதான் என்னை அவ மேல தள்ளி விட்டிருச்சு. நான் ரொம்ப சமர்த்து"ன்னு நீங்க பீலாவெல்லாம் விட முடியாது. ஏன்னா, புவியீர்ப்பு விசைக்கும் காதல்ல விழுறதுக்கும் எந்த சம்பந்தமுமில்லைன்னு ஐன்ஸ்டீன் ஐயா அப்பவே சொல்லிட்டாரு. அநாவசியமா ஃபிசிக்ஸ் மேல பழியைப் போடாதீங்க. நோ சில்லி ஃபீலிங்க்ஸ்!



சின்னப் பெண் சின்ட்ரெல்லா ஸ்வீட்டா இப்படிப் பாடுறாங்க. "நான் அழகா இருக்கிறதுனால என்னை லவ் பண்றியா, இல்லை நீ லவ் பண்றதால நான் அழகா இருக்கேனா?''

ஐயோ... பின்றாங்கப்பா... பின்றாங்க....

டால்ஸ்டாய் தாத்தா சூப்பரா ஒரு டயலாக் விட்டிருக்காரு. 'அவன் அவளைக் காதலிக்கிறான். அவனுக்கே தெரியாது, அவன் எங்கே முடிவடைந்து அவள் எங்கே தொடங்குகிறாள் என்று' அப்படியே பரபரன்னு புல்லரிக்குதுப்பா.

யார் யார் எப்படி எப்படி லவ்வுகிறார்கள்னு தெரிஞ்சுக்கணுமா? இதோ... பசங்க கண்ணால பார்த்து லவ் பண்றாங்களாம். கேர்ள்ஸ் காதால கேட்டு லவ் பண்றாங்களாம். இது எப்படி இருக்கு? இதைச் சொன்னவர் வுட்ரு வ்யாட். வாவ்!

சரி, லவ்வோட இன்னொரு சைடைப் பார்ப்போம். லைட் தாடி, ஹெவி ஹார்ட்டோட லவ் எக்ஸாம் ஃபெயில் ஆகி கவிதை எழுதிக்கிட்டிருக்கீங்களா? டோண்ட் ஒர்ரி. இதோ உங்களுக்கு ஒரு ஹெவி டோஸ் டானிக். பிரிஸ்கிரைப் பண்றவர் டாக்டர் டென்னிகன். 'காதலிக்காமலே இருக்கிறதை விட காதலிச்சி தோத்துப் போறது எவ்வளவோ மேல்'. என்ன ஓ.கேவா? அழகா ஹாய் சொல்லிக்கிட்டு கட்டாயம் உங்களுக்கு ஒரு பூ பூக்கும். ஜஸ்ட் வெயிட்...

- டார்லிங் லஜ்ஜாவதி

எழுத்தாணி

# "மூணாவது அணிக்கு நாங்கதான் தலைமை"



ஏற்கெனவே தமிழகத்தில் குட்டிக் கட்சிகளுக்குப் பஞ்சமில்லை. இதில் தேசியக் கட்சிகள் வேறு தங்களது கிளைகளை இங்கு துவக்கிவிட்டன. அப்படி இங்குள்ள கட்சிகளுள் தேசியவாத காங்கிரஸும் ஒன்று. இங்கு என்ன செய்கிறது இந்தக் கட்சி... இதன் மாநிலத் தலைவர் ஜி.பி.சாரதியுடன் ஒரு கலாட்டா சந்திப்பு...

**டெல்லியிலிருந்து வந்த பணத்தில் தற்சமயம் எவ்வளவு கைவசம் இருக்கிறது?**

*(சிரிக்கிறார்)* "அப்படி வந்திருந்தாத்தான் கட்சி வளர்ந்திருக்குமே... இப்போதைக்கு எங்க சொந்தப் பணத்துல தான் கட்சி நடந்துட்டிருக்கு."

**உறுப்பினர் கார்டு என்பார்களே... அப்படி எதுவும் உங்கள் கட்சியில் உண்டா?**

"அப்படி எதுவுமில்லை... ஆனா மொத்தம் ஐம்பதாயிரம் பேர் இருக்காங்க. உறுப்பினர் சந்தாவா ஐந்து ரூபாய் வசூல் செய்யறதுண்டு."

**வரும் தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவதாக உத்தேசம்?**

"போன முறை பதினெட்டு தொகுதிகளில் போட்டியிட்டோம். சில தொகுதிகளில் ம.தி.மு.க.வைவிடக் கூடுதலாக ஓட்டு வாங்கினோம். அது எங்களுக்கே ஆச்சர்யமா இருந்துச்சு. அதனால வர்ற தேர்தல்ல கூடுதல் தொகுதிகள்ல போட்டியிடுவோம். இன்னும் சொல்லப் போனா, மூணாவது அணிக்கே எங்களால் தலைமை தாங்க முடியும்."

**சரி... இதையெல்லாம் எந்த தைரியத்தில் பேசுகிறீர்கள்... கட்சி நடத்துகிறீர்கள்?**

"முழுக்க முழுக்க மக்களையும், கொள்கையையும் நம்பித்தான் நடத்துகிறோம்... உண்மையைச் சொல்லணும்னா, எங்கள் தேசியத் தலைவர் சரத்பவார் இல்லன்னாலும் கூட கட்சி நடக்கும்."

**இவ்வளவு பேசினாலும் தேசியத் தலைவரை விமான நிலையத்தில் வரவேற்க மட்டுமே ஸ்டேட் யூனிட் இருக்கின்றது என்கிற கிண்டல் பற்றி?**

"நீங்க சொல்கிற மாதிரியான நிலைமை தமிழகத்தின் முக்கிய தேசியக் கட்சியில இருக்கலாம். இப்போ சரத்பவார் இங்கு வர்றப்போ எனக்கு முறையா தகவல் கொடுக்கலேன்னா, நிச்சயம் அவரை வரவேற்க நான் ஏர்போர்ட்டுக்குப் போகமாட்டேன்."

**- கோகிலா**

## யோசிக்குமா ரயில்வே?

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குள் ஒரு குடும்பம் உள்ளே நுழைகிறது. மின்னும் பளிச் பல்புகளால் கவனம் ஈர்க்கப்பட்ட பதினைந்து வயதுச் சிறுவன், குடுகுடுவென வெயிட் பார்க்க விரைகிறான். ஒரு ரூபாய் காயினை உள்ளே நுழைத்த சில விநாடிகளுக்குள் கார்டு வந்து விழுகிறது. "அம்மா நான் 50 கிலோ" என்று உரக்கக் கத்துகிறான். "சரி பின்னாடி என்ன அட்வைஸ் போட்டிருக்கு?" என அப்பா கேட்க, கார்டை பின்னால் திருப்பி அதே உரத்த குரலில் 'தாம்பத்ய உறவுகளில் கவனம் தேவை' என்று படிக்க, அச்சிறுவனோடு சேர்ந்து அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகின்றனர். எடையை அறிவிக்கும் கார்டில் அட்வைஸ் என்ற பெயரில் இதுபோன்ற அபத்தங்கள் தேவையா? யோசிக்க வேண்டும், ரயில்வேத் துறை.

**- எழில்**

# சிரிக்க ஒரு க்ளப்!

"சென்னையில் காமெடி டிராமாக்களுக்கோ பட்டிமன்றங்களுக்கோ, ஏன் வேறு எந்த நிகழ்ச்சிக்கும் இவ்வளவு கூட்டம் கூடுவதில்லை. ஆனால் எங்கள் திருவல்லிக்கேணி சேப்டரின் ஹியூமர் கிளப் ஆண்டு விழாவிற்கும், மாதக் கூட்டங்களுக்கும், மனதார சிரிப்பதற்காகவே திரளும் கூட்டத்தைக் கண்டு சிறப்பு விருந்தினர்களாக வரும் வி.ஐ.பிக்களே மிரண்டு போவார்கள்'' என்று பூரிப்போடு கூறினார் ஹியூமர் கிளப்பின் தலைவரான சீதாராமன். ரேஸ் கிளப், லயன்ஸ் கிளப் தெரியும். அதென்ன ஹியூமர் கிளப்?

இயந்திரத்தனமான போராட்டம் மிகுந்த சென்னை வாழ்க்கையிலிருந்து நகரவாசிகளை ஆசுவாசப்படுத்துவதற்காக, 1983ல் திருக்குறள் முனுசாமியால் தொடங்கப்பட்டதுதான் இந்த ஹியூமர் கிளப். இதன் முதல் நிகழ்ச்சியில் மேடையேறி ஜோக்குகளை அள்ளி வீசியவர், அன்றைய இளைஞரான இன்றைய நடிகர் விவேக்!




"சினிமா, டீவி, ட்ராமா என்று எந்தப் பிரபலங்களையும் நாங்கள் நம்புவதில்லை. ஆபாசமாக, அருவருப்பாக, உடல் ஊனத்தைக் கிண்டல் செய்யாத நகைச்சுவைகளையும் நகைச்சுவையாளர்களையும் (குழந்தைகள் உட்பட) மேடையேற்றி நான்-ஸ்டாப்பாக மூன்று நான்கு மணி நேரங்கள் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துப் பார்ப்பதே எங்கள் நோக்கம்" என்று பெருமிதப்படுகிறார் இதன் செயலாளர் சேகரன்.

"ஹியூமர் கிளப் நிகழ்ச்சிக்கு வந்து எனர்ஜியை ஏற்றிக் கொண்டால் போதும், அடுத்த இரண்டு மாதங்களுக்கு டயாலிஸிஸ் கவலைகளைத் தாங்குவேன்" என்பாராம் மறைந்த மனநல மருத்துவர் மாத்ருபூதம். எஸ்.வி.சேகர் இதன் மேடையிலேயே ''ஹியூமர் கிளப்புக்கு வந்தால் போதும், என் டிராமாவுக்குத் தேவையான ஏராளமான ஜோக்குகள் கிடைத்துவிடும்" என்றிருக்கிறார்.

வருடந்தோறும் ஜூலை மாதத்தில் நடைபெறும் இதன் ஆண்டு விழா, சென்னையில் நடக்கும் அமர்க்களமான நிகழ்ச்சிகளில் ஒன்றாக பாராட்டப்படுகிறது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த வி.ஐ.பி.கள், தங்களின் நகைச்சுவை உணர்வுகளை வெளிப்படுத்தும் இடமாகவும் திகழ்கிறது.

ஹ்யூமர் கிளப், பரபரப்பில் ஓடும் சென்னைவாசிகளுக்கு மாதத்திற்கொருமுறை சிரிப்பு வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

**- ச.ந.கண்ணன்**

"எங்க குடும்பத்துல மட்டுமில்ல, பலரோட வீட்லேயும் ஒரு உறுப்பினரா கலந்துவிட்ட பத்திரிகை கல்கி. புத்தகத்தை பிரிச்ச உடனே நாங்க முதல்ல படிக்கிறது, தலையங்கம் கார்ட்டூன்தான். அப்புறம் அழுத்தமான சிறுகதைகள். ஒட்டுமொத்த குடும்பத்துக்குமான ஒரு பத்திரிகைன்னா அந்தத் தகுதியும் தரமும் கல்கிக்குத்தான் உண்டு. நல்லித ழோட வாசகர்களா நாங்க இருக்கறது பெருமையான விஷயம். எங்களுக்குக் கல்யாணம் நிச்சயமான உடனே முதன்முதலா பேட்டியெடுத்து வெளியிட்டதை மறக்க முடியாது."

- புஷ்பவனம் குப்புசாமி - அனிதா தம்பதியர்




# தகுதியும் தரமும்!

SINCE 1975

Chennai
ROOFINGS

implified Roof Designers / Metal Building Systems




oofing Material Suppliers, Fabricators, Erectors, Installers of

Polycorbonate Sheets, Colourcoated, Galvalume, Non-colour,
High-corrossion resistance, High tenstile strength, Thermalefficiency,
Wide colour choice,Light weight, Unbreakable, Customised Length,
100% Leak Proof, Easy to install, Modulary built, Aesthetic, Steardy & Economical

**The Range** - Pre Engineered Buildings


ctories
arehouse, School
ollege Buildings,
newal Buildings
staurants, Hotels
eltered Walkways

Roof Top Canopies
Roof Extensions
Summer Huts,Cycle Sheds
Bus Stands
Window Awning
Garden Sheds
Gates & Fencing

**Curved**
Bull Nose Barrel Vault
Concave Cranked Ridge
Convex Transition
**Cladding**
Awning Cladding Wall
Cladding Partitions

**Rain Water Systems**
Gutters Down Pipes
Accessories Ridge Caps
Barge Caps, Valley
Gutters, Customised
Flashings etc.

Sky Lights • Canopies • Atrium • Dombs • Pyramids • Green Houses
Structural Glazings • Aluminium Composite Panels




Contact:9840083644 /visit us at:www.chennairoofings.com
e-mail:info@chennairoofings.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka





45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:2852117